# கட்டிளமைப் பருவ உளநலம்

நேரங்களை சரியாகப் பயன்படுத்துவதில் வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது.



(பக்கம் -22 )


# அரங்கம்
செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, ஆனி 22, 2018. இதழ் - 18



இலஞ்சம் ,ஊழல் மற்றும் மோசடி தொடர்பிலான
இலவச சட்ட ஆலோசனைக்கு
அழையுங்கள்
011 2 501 503
மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76
TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
நேர்மையின் புகலிடம்




## தெய்வத்தின் ஊழியர்கள் : சில புலம்பெயர் மருத்துவர்கள்

(பக்கம் -08 )

## அரச அதிகாரிகளில் பாதிக்கும் அதிகமானோர் சிறையில் இருக்க வேண்டும்!

இலங்கையில் அரசியல் வாதிகளின் ஊழல்கள் குறித்து பலர் எழுதி வருகிறார்கள்.

(பக்கம் -04 )



## நவீன சேரி: கொழும்பின் தொடர்மாடி வீடுகள்

(பக்கம் -05 )

# பெரும் வீழ்ச்சியை நோக்கி இலங்கைப் பொருளாதாரம்?

## சர்வதேச மட்டத்தில் இலங்கை நாணய மதிப்பிறக்கம் அதன் சமிக்ஞையே!




இலங்கையில் ஏற்றுமதியை அதிகரிக்கவும், அந்திய முதலீட்டுக்கான சூழலை ஏற்படுத்தவும் இலங்கை அரசாங்கம் சுணக்கம் காண்பிக்குமானால் அது நாட்டின் பொருளாதாரத்தை பெரும் வீழ்ச்சிக்கு உள்ளாக்கிவிடும் என்று இலங்கையின் பொருளாதார நிபுணர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

சர்வதேச மட்டத்தில் இலங்கையின் நாணயத்தின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக வீழ்ச்சியடைவதும் அதனைத் தொடர்ந்த நிகழ்வுகளும் இதற்கான சமிக்ஞையே என்றும் கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரத்துறை பேராசிரியரான என். கணேசமூர்த்தி கூறுகிறார்.

இலங்கை நாணயத்தின் பெறுமதியை சந்தையே நிர்ணயிக்க விடும்படி சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளனர். டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வரவே, இலங்கை அரசு அதனை கட்டாயமாக நிலைத்திருக்கச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டது.

ஆனால், அதனை தொடர முடியாது என்றும் சந்தையே அதனை நிர்ணயிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையின் ஏற்றுமதி குறைந்து, இறக்குமதி அதிகரித்த சூழலிலேயே டொலரின் பெறுமதி உள்ளூர் நாணயத்தோடு ஒப்பிடும் போது அதிகரித்து வந்தது. இது தொடருமானால், இலங்கை பொருளாதாரத்தின் நிலைமை மேலும் கடுமையாக பாதிக்கப்படும் என்கிறார் கணேசமூர்த்தி.

உண்மையில் இலங்கையில் ஏற்றுமதியை, வெளிநாட்டு முதலீட்டை அதிகரித்தால் மாத்திரமே இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பிக்க முடியும் என்று கூறுகின்ற கணேசமூர்த்தி, ஆனால், அதற்கான சூழலை இங்கு காணமுடியவில்லை என்று கவலை வெளியிட்டார்.

வெளிநாட்டில் இருந்து இங்கு முதலீட்டாளர்களை கவர அரசாங்கம் அதிதீவிர நடவடிக்கையை எடுத்தாக வேண்டும் என்றும் கூறும் கணேசமூர்த்தி அதற்கான சமிக்ஞை எதனையும் இங்கு காணமுடியவில்லை என்றும் விசனம் தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதியை எந்தவகையிலும் அதிகரிக்க முடியாத ஒரு சூழ்நிலை காணப்படுவதாக கூறிய அவர், இந்த விடயத்தின் மிகவும் வலுவான நடவடிக்கை தேவைப்படுவதாகவும் கூறுகிறார். அதேவேளை பெரும்பாலான பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலையிலேயே இலங்கை தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி... (பக்கம் -02 )


TA Enterprises & co வின் TA PARCEL .LK
TA PARCEL .LK
MAIN STREET Karaithivu
taparcel.lk@gmail.com
+94774385151
+94752542651
கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்





LAURA
Women's Luxury Dresses, Tops, Skirts, Leggings, Blouse & Inner Wears
No: 14 Baily Road Batticoloa, Sri Lanka
Call 077 735 5991
10% Discount
Levi's Reebok Triumph INTERNATIONAL

## தினேஷ் சந்திமால் மேன்முறையீடு செய்தார்



இலங்கை கிரிக்கட் அணியின் வீரர் தினேஷ் சந்திமாலுக்கு எதிராக நடுவரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்துள்ளார்.

இலங்கை - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3ம் நாள் ஆட்டத்தின் போது பந்தை சேதப்படுத்தியதாக தினேஷ் சந்திமால் மீது நடுவரால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

பந்தை சேதப்படுத்திய குற்றத்திற்காக தினேஷ் சந்திமாலுக்கு ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், போட்டிக்கான பணத்தில் 100 வீதத்தை தண்டப் பணமாக செலுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலினால் இந்தப் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராகவே அவர் மேன்முறையீடு செய்துள்ளார்.

## உள்ளூரில் 5 விமான சேவைகளுக்கு ஏற்பாடு



இலங்கையில் உள்ளூர் விமான சேவையை விஸ்தரிக்க 5 புதிய விமான சேவைகளை அனுமதிக்கவுள்ளதாக இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரின் பிரேரணை ஒன்றையடுத்து, அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியதாக அமைச்சரவை பேச்சாளர் ஊடகங்களுக்கு கூறியுள்ளார்.

இதற்கான அனுமதிப் பத்திரங்களுக்கான 5 நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் விமான சேவைகளை அதிகரிக்க அரசாங்கம் விரும்புவதாகவும், அதற்கான ஆய்வுகள் நடப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையை ஒரு சுற்றுலா மையமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

## யானை தாக்கி இருவர் பலி

லிஹிபிட்டிய, ஆதாவல, மடவள உல்பத பகுதியில் காட்டு யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

லிஹிபிட்டிய வனப்பகுதிக்கு அருகில் புதனன்று இரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே இவ்வாறு யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

மடவள உல்பத பகுதியை சேர்ந்த சுமுது லக்மால் பண்டார ஹேரத் எனும் 30 வயதுடைய ஒருவரும், நாலக ருவன் எனும் 29 வயதுடைய ஒருவருமே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

## கதிர்காம யாத்திரிகர்களின் வாகனம் விபத்து

மட்டக்களப்பு – கொழும்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் நகரில் செவ்வாய்க்கிழமை 19.06.2018 நள்ளிரவு இடம்பெற்ற வீதி விபத்தில் கதிர்காம யாத்திரீகர்களுடன் திரும்பிக் கொண்டிருந்த தனியார் மினி பஸ் மீது டிப்பர் வாகனம் மோதியதில் பஸ் சாரதி படுகாயமடைந்ததோடு, பஸ்ஸும் சேதமடைந்துள்ளதாக ஏறாவூர்-பொலிஸார் தெரிவித்தனர்.

அன்றைய தினம் நள்ளிரவு 11.00 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் பஸ்ஸின் ஒருபக்க கண்ணாடிகள் அனைத்தும் சேதமடைந்ததோடு பஸ்ஸின் சாரதிக்கு கண்ணாடி துண்டுகள் சிதறி காயங்கள் ஏற்பட்டன.

பஸ்ஸில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் இருந்தபோதும் இந்த விபத்தில் அதிர்ஷ்டவசமாக பயணிகள் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

## ஜேசிபியில் திருமண ஊர்வலம்



கர்நாடகாவில் புது மணப்பெண் மற்றும் மணமகன் ஜேசிபி இயந்திரத்தில் அமர்ந்து திருமண ஊர்வலம் நடத்திய புகைப்படம் இப்போது சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

கர்நாடக மாநிலம் தென் கனரா மாவட்டம் புத்தூர் நகரை சேர்ந்தவர் சேத்தன். இவர் ஜேசிபி ஆபரேட்டராக உள்ளார். சமீபத்தில் இவருக்கும் மமதா என்ற பெண்ணுக்கும் திருமணம் நடைபெற்றது. வழக்கமாக திருமணம் நடைபெறும்போது மாப்பிள்ளை அலங்கரிக்கப்பட்ட காரில் திருமண மண்டபம் வருவார். திருமணத்திற்கு பிறகு அலங்கரிக்கப்பட்ட காரில் வீட்டுக்கு செல்வார்கள்.

ஆனால், சேத்தனோ, காருக்கு பதிலாக ஜேசிபி இயந்திரத்தை இதற்கு பயன்படுத்த முடிவு செய்தார். ஜேசிபி வாகனம்தான் தனக்கு படியளக்கிறது என்பதால் அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இதை செய்ய அவர் முடிவு செய்தார்.

இங்கு ஜேசிபி தேர் இழுக்கிறது. இந்தியாவில் கல்யாண ஊர்வலத்துக்கு பயன்பட்டுள்ளது.

## யுத்த காலத்தில் கிளிநொச்சியில் படையினர் மீட்ட உழவு இயந்திரம் மட்டக்களப்பில் உரிமையாளரிடம் ஒப்படைப்பு.

யுத்த காலத்தில் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் இருந்த கிளிநொச்சிப்பகுதியில் படையினர் மீட்ட உழவு இயந்திரம் மட்டக்களப்பில் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த 2009ம் வருடம் படையினரால் கிளிநொச்சிப்பகுதியில் மீட்கப்பட்ட பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரம் ஒன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் முன்னிலையில் மட்டக்களப்பில் வைத்து உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மாவட்ட செயலக முன்றலில் வைத்து இந்த உழவு இயந்திரந்திரத்தை அதன் உரிமையாளரான கிளிநொச்சி கரடித்தோட்டத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை ஜெகதீஸ்வரன் அரசாங்க அதிபர் உறுதிப்படுத்தலுடன் இராணுவத்தின் 231 படைப்பிரிவின் உன்னிச்சை கெமுனு படை முகாம் இணைப்பதிகாரி டபிள்யூ .ஜீ. ஜ.எஸ். கமகேயின் முகாம் உத்தியோகத்தர் லெப்டினன் கேணல் ஜீ.குணசேகர உரிமையாளரிடம் ஒப்படைத்தார்.

யுத்த சூழலில் கிளிநொச்சிப்பகுதியில் கைவிடப்பட்ட இந்த உழவு இயந்திரந்திரத்தை கண்டறிந்து உரிமையாளர் பாதுகாப்பு அமைச்சிற்கு வேண்டிக்கொண்டதற்கிணங்க பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலில் இராணுவத் தலைமையக பணிப்புரைக்கமைய உரிய உழவு இயந்திரமும் பெட்டியும் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய தமிழ் குடும்பத்தின் மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது



அவுஸ்திரேலியாவில் முன்னதாக நாடு கடத்தப்படவிருந்து, இறுதி நேரத்தில் விமானத்தில் இருந்து இறக்கப்பட்ட இலங்கை அகதி குடும்பம் ஒன்றின் மேன்முறையீடு மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இரு பெண் குழந்தைகளை கொண்ட நடேசலிங்கம் மற்றும் பிரியா தம்பதியின் அகதி கோரிக்கைக்கான மனு முன்னதாக நிராகரிக்கப்பட்டிருந்தது. அப்போது குயின்ஸ்லாந்தில், பிலோஎலா என்னும் சிறிய நகரத்தில் இருந்து, இரவு வேளையில் இவர்கள் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்படுவதற்காக கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுக்கு கைவிலங்கு பூட்டி, குழந்தைகளிடம் இருந்து பிரித்து தனித்தனியாக அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இது அந்தப் பகுதி மக்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதனை கண்டித்து அவர்கள் எதிர்ப்புக்களை தெரிவித்திருந்தனர். அதன் காரணமாக விமானத்தில் நாடு கடத்தப்படுவதற்கு ஏற்றப்பட்டிருந்த இவர்கள் இறுதி கணத்தில், விமானம் புறப்படுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்னதாக விமானத்தில் இருந்து இறக்கப்பட்டனர்.

ஆனாலும், அவர்களது மேன் முறையீட்டை அவுஸ்திரேலிய நீதிமன்றம் மீண்டும் தற்போது நிராகரித்துள்ளதாக கூறப்படுகின்றது.

2012 மற்றும் 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர்கள் தனித்தனியாகவே அவுஸ்திரேலியா வந்தடைந்ததாக கூறப்படுகின்றது.

## 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவியை வைத்துக் கொண்டு அதற்கெதிராகப் பேசுவது யோக்கியமான அரசியல் அல்ல'



'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பெற்ற பதவியை வைத்துக் கொண்டு அதற்கெதிராகப் பேசுவதென்பது ஒரு யோக்கியமான அரசியல் அல்ல. கொள்கையை வழிநடத்துகின்றவர்கள் பிழையாக வழி நடத்துகின்றார்கள் என்று விமர்சிப்பவர்களின் மனச்சாட்சிக்குப்பட்டால் எந்தக் கொள்கையில் அடிப்படையில் நீங்கள் பதவிகளைப் பெற்றீர்களோ அந்தப் பதவிகளைத் துறந்துவிட்டு வெளியில் சென்று விமர்சிப்பதே சிறந்தது' என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார்.

முன்னாள் விவசாய அமைச்சரின் கடந்த வருட நிதி ஒதுக்கீட்டின் மூலம் குமாரவேலியார் கிராம மீன்பிடிச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட கதிரைகளைக் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணசபையில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வர வேண்டும் என்றால் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்று சொல்கின்றார்கள். அதில் நியாயம் இருக்கின்றது. ஆனால் தமிழர்கள்

தொடர்ச்சி... (பக்கம் -18 )



## கிளிநொச்சி செல்லும் வாகனச் சாரதிகளுக்கு எச்சரிக்கை



கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்கள் சிலவற்றின் மீது இனந்தெரியாத நபர்களால் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் 12.30 அளவில் இடம்பெற்றிருப்பதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்வீச்சுத் தாக்குதலில் இரண்டு கார்கள், இரண்டு வான்கள், ஒரு லொறி மற்றும் ரிப்பர் ஒன்று சேதமடைந்திருப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மத்திய கல்லூரியின் மைதானத் திசையில் பதுங்கியிருந்த சில குழுவினரால் இந்த கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பொலிஸார் மேலும் கூறினர்.

இதன்போது எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்வதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கொழும்பு நோக்கி புறப்படவிருந்த வானங்கள் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த 6 மாதங்களுக்கு முன்னரும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த சில வாகனங்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருந்தது.

## அவுஸ்திரேலியாவில் இன நல்லிணக்கம் குறித்த கருத்தாடல்

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி ( 08-07-2018) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரையில் மெல்பனில் வேர்மண் தெற்கு சமூகமண்டபத்தில் இன நல்லிணக்கம் தொடர்பான இலக்கிய கருத்தாடல் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் சங்கர சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், மேற்கு அவுஸ்திரேலியா மேடொக் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை விரிவுரையாளரும் எழுத்தாளரும் ஆய்வாளருமான கலாநிதி அமீர் அலி " தமிழ் - முஸ்லிம் சமூகத்தவரிடையே நல்லிணக்கத்திற்கான வகிபாகம் - எழுத்தாளர்களின் பங்களிப்பும் பணிகளும்" என்னும் தொனிப்பொருளில் உரையாற்றுவார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு நல்லிணக்கம் தொடர்பான கருத்துக்களை தெரிவிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கிறார்கள்.

## புதியவளத்தாப்பிட்டியில் தொல்பொருள்பிரதேசம் தற்காலிகத் தடை நிரந்தமாகுமா?



அம்பாறையையடுத்துள்ள புதியவளத் தாப்பிட்டி எனும் கிராமத்தையண்டிய ஆண்டிரகனத்தை எனும் பிரதேசத்துக்கு தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் எல்லை வேலியிட வந்தபோது பொதுமக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமிடையே முறுகல்நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்தது. மக்கள் செறிந்துவாழும் புதியவளத்தாப்பிட்டிக் கிராமத்திற்கு பின்புறமாக இந்த ஆண்டிரகனத்தை எனும் தரிசு நிலப்பகுதியுள்ளது. தமிழ் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான அப்பகுதியை தொல்பொருள் எச்சங்கள் உள்ள பிரதேசம் என்றுகூறி பாதுகாப்பு எல்லை வேலியிட உத்தியோகத்தர்கள் வந்தவேளை இம்முறுகல் நிலையேற்பட்டது.

சுமார் 400மீற்றர் சுற்றளவுள்ள பரப்பைச் சுற்றி எல்லைவேலியிட அன்று காலை வந்தவர்கள் பிற்பகல் வரை அடையாளத்திற்கான சிறுகட்டைகளை (கூனி) வரை நட்டுக்கொண்டிருந்தனர்.

இத்தகவல் அறியக்கிடைத்ததும் அங்கு ஸ்தலத்திற்கு விரைந்த சம்மாந்துறைப் பிரதேசசபை உப தவிசாளரும் அக்கிராமத்தைச்சேர்ந்த சமூகசேவையாளருமான வெள்ளி ஜெயச்சந்திரன் தொல்பொருள் உத்தியோகத்தர்களோடு கலந்துரையாடினார்.

இப்படியான ஒரு பெரிய பரப்பை தொல்பொருட்திணைக்களத்துக்கு என எல்லை நிர்ணயம் செய்தால் அப்பகுதியை சேர்ந்த முஸ்லிம், தமிழ் மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று அவர் அதிகாரிகளுக்கு விளக்கினார்.

"நாமறிந்தவரை அப்பகுதிகளில் தொல்பொருள் எச்சங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படித்தான் என்றால் அந்தப்பகுதியை மட்டும் எல்லையிடுவதில் தவறில்லை. அதை விடுத்து இப்பாரிய பரப்பைச்சுற்றி எல்லையிட்டால் நாம் எதிர்காலத்தில் எங்கு வாழ்வது?
எனக் கூறினார்.

அவரது கருத்துக்கு மதிப்பளித்து, அதிகாரிகள் எல்லையிடும் பணியை தற்காலிகமாக நிறுத்திச் சென்றுள்ளனர். மக்களும் அமைதியடைந்தனர். ஆயினும், தொல்பொருட் திணைக்களத்துக்கு இருக்கும் அதிகாரங்களைக் கொண்டு பார்க்கும் போது இது தற்காலிக நிறுத்தம்
என்பதே யதார்த்தம் என அவதானிகள் கூறுகின்றனர்.

(காரைதீவு நிருபர் சகா)

## 'பரீட்சை எழுதுபவர்கள் அடையாள அட்டைக்கு விரைவாக விண்ணப்பிக்கவும்'



இந்த வருடம் கல்விப் பொதுத்தராதர பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்கள், தேசிய அடையாள அட்டையை பெற விரைவாக விண்ணப்பிக்க வேண்டும் என்று ஆட்பதிவு திணைக்களம் கேட்டிருக்கிறது.

உரிய காலத்திற்குள் விண்ணப்பித்தால் பரீட்சார்த்திகளினதும் ஆட்பதிவு திணைக்களத்தினதும் பணிகள் இலகுவாக அமையும் என்று ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் பீ. வி. குணதிலக தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகளில் 40 சதவீதமான விண்ணப்பங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கிடைத்த விண்ணப்பங்களில் சிலவற்றில் குறைபாடுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை விரைவாக அனுப்பி வைப்பதற்கு அதற்கு பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்!

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரை கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பல ஊடகங்களின் மட்டக்களப்புக்கான செய்தியாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் தலைவராகவும் செயல்பட்டுவரும் வாலசிங்கம் கிருஷ்ணகுமார் என்பவருக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பயங்கரவாத விசாரணை பிரிவு (TID) கல்முனை பொலீசாரின் ஊடாக விடுத்துள்ள அழைப்பு கடிதத்தில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் நடாத்தப்படும் விசாரணை ஒன்றிற்காக வாலசிங்கம் கிருஷ்ணகுமார் என்பவரிடம் வாக்குமூலம் பெறுவதற்காக கொழும்பில் உள்ள 2ம் மாடிக்கு எதிர்வரும் 22.06.2018 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வாக்குமூலம் எது சம்பந்தமானது என்று தனக்கு அறிவிக்கப்படவில்லை என அவர் கூறினார்.

## குடியேறிகளின் குழந்தைகளை பிரிக்கமாட்டோம் - டிரம்ப்

அமெரிக்கா வரும் குடியேறிகளை கைது செய்யும்போது குழந்தைகளை பெற்றோரிடமிருந்து பிரிக்காமல் இருதரப்பையும் ஓரிடத்தில் சேர்த்தே அடைத்து வைக்குமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிர்வாக உத்தரவொன்றை தொடர் அழுத்தத்தின் காரணமாக பிறப்பித்துள்ளார்.

ஆவணங்கள் இல்லாத குடியேறிகள் கைது செய்யப்படும்போது பெற்றோர் மற்றும் குழந்தைகள் தனித்தனியான இடத்தில் வைக்கப்படுவது குறித்து டிரம்பின் கொள்கைக்கு முன்னதாக சர்வதேச ரீதியாக பலத்த எதிர்ப்பு எழுந்தது.

டிரம்ப் பிறப்பித்துள்ள புதிய ஆணை எப்போதிலிருந்து அமுலுக்கு வரும் என்பது தெளிவாக தெரியவில்லை.

கடந்த மே 5-ஆம் தேதி முதல் ஜூன் 9-ஆம் தேதி வரை பெற்றோரிடம் பிரிக்கப்பட்டு சுமார் 2342 குழந்தைகள் தனி இடத்தில் அடைத்து வைக்கப்பட்டதாக அமெரிக்க குடியேற்றத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான புதிய உத்தரவொன்றில் புதன்கிழமையன்று கையெழுத்திட்ட டிரம்ப், ""குழந்தைகள் மற்றும் பெற்றோர் ஆகிய இருதரப்பும் ஓரிடத்தில் வைக்கப்படுவர்"" என்று தெரிவித்தார்.

"பெற்றோரை பிரிந்து குழந்தைகள் தனியாக அடைத்து வைக்கப்படும் காட்சியை எனக்கு காண பிடிக்கவில்லை" என்று குறிப்பிட்ட அவர், ஆனால் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்கு வரும் யாரையும் சட்டப்படி தண்டிப்பது மற்றும் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தனது நிர்வாகம் எவ்வித சகிப்புத்தன்மையும் காட்டாது என்றும் தெரிவித்தார்.

முன்னதாக, குடியேறிகள் தொடர்பான பிரச்சனையில் அதிகரித்து வரும் கண்டனங்களை மீறி அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக நுழையும் குடும்பங்கள் மற்றும் குழந்தைகளை தனித்தனியாக பிரிக்கும் தனது அரசின் கொள்கையை ஆதரித்து டிரம்ப் கருத்து வெளியிட்டார்.

## 'ஞானசார தேரருக்கு பிணை கிடைக்காவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம்'

சிறைவாசம் அனுபவிக்கும் பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வெள்ளிக்கிழமைக்குள் பிணை கிடைக்காவிட்டால், சாகும் வரையான உண்ணாவிரத போராட்டம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக பொதுபல சேன அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிணை மனு வெள்ளிக்கிழமை விசாரணை செய்யப்பட உள்ளதாக, குறித்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் விதாரன்தெனியே நந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பொதுபல சேன அமைப்பினர் கோட்டை ஆலமரத்தடியில் உண்ணாவிரத போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.
இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ‘அரச அதிகாரிகளில் பாதிக்கும் அதிகமானோர் சிறையில் இருக்க வேண்டும்!’

## இதை நாம் சொல்லவில்லை...



இலங்கையில் அரசியல் வாதிகளின் ஊழல்கள் குறித்து பலர் எழுதி வருகிறார்கள். நானும் எழுதியிருக்கிறேன். ஆனால், எங்கள் கண்களுக்கு பெரிதும் புலப்படாமல் இந்த விடயத்தில் விமர்சிக்கப்பட வேண்டிய, ஆனால், பெரிதும் கண்டுகொள்ளப்படாத ஒரு தரப்பு இங்கு இருக்கத்தான் செய்கிறது.

ஆம், அரச அதிகாரிகள் குறித்த ஊழல்கள் பற்றி பெரிதும் பேசப்படவில்லையோ என்பதுதான் எனது ஆதங்கம். என்ன இப்படிப் பேசுகிறீர்கள், செய்தியாளர்கள் குறைந்தவர்களா என்று என்னைப் பார்த்து யாரும் கேட்டால், என்னிடம் இருந்து மௌனம் மாத்திரமே பதிலாக வரும் என்பது வேறுவிடயம்.

சரி, நாம் அரச அதிகாரிகளின் விடயத்துக்கு வருவோம். அரச அதிகாரிகளின் ஊழல் குறித்த கருத்து என்னவோ எனது பொது அபிப்பிராயம் அல்ல. அல்லது நான் தற்போது வாழும் கிழக்கு மாகாணம் அதனை அண்டிய வடக்கு மாகாணம் ஆகியவற்றை மாத்திரம் இது இலக்கு வைத்ததும் அல்ல. இந்த ஆதங்கத்தை நான் வெளிப்படுத்துவதற்கான மூல காரணமும் ஒரு மூத்த அதிகாரியின் கூற்றுத்தான்.

‘ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர், லலித் வீரதுங்க மீதான ஊழலை விவகாரத்தை கையாண்டு அவருக்கு சிறைத்தண்டனை கிடைக்கச் செய்ததுபோல, ஏனையவர்களின் விடயமும் கையாளப்பட்டால் பாதிக்கும் அதிகமான அரச அதிகாரிகள் சிறையில்தான் இருப்பார்கள்’ என்று இலங்கையின் கணக்காய்வாளர் நாயகம் காமினி வீரசிங்க கூறியுள்ளார்.

அரச பணத்தை துஸ்பிரயோகம் செய்ததாக லலித் வீரதுங்க குற்றங்காணப்பட்டு அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவரது வழக்கை கையாண்டது போல ஏனையவர்களின் விடயத்தையும் கையாண்டால், இலங்கையின் அரச அதிகாரிகளில் பாதிப்பேர் சிறையில்தான் இருப்பார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

இலங்கை அரச அதிகாரிகளில் பாதிப்பேர்

**சீவகன் பூபாலரட்ணம்**

தமது உயர் அதிகாரிகளின் முறையான அனுமதி இன்றி அரச பணத்தை செலவிடுகிறார்கள் என்பது அவரது குற்றச்சாட்டு.

நூறு கோடிக் கணக்கான அரச பணம் பல நிறுவனங்களால் விரையம் செய்யப்பட்டுள்ளதாகவும், சுகாதாரத்துறையினால், காலாவதியான உபகரணங்களை இறக்குமதி செய்ய பெருமளவு பணம் விரையம் செய்யப்பட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

அதுமாத்திரமன்றி கல்வித்துறையில் முறையான மதிப்பீடு இன்றி கட்டிடங்களைக் கட்ட பணம் ஒதுக்கப்பட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

பல இடங்களில் தேவையில்லாத இடங்களில் பணம் விரையம் செய்யப்பட்ட வேளை, தேவையான இடங்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டு இருக்கின்றது. சில இடங்களில் அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தனியாருக்கு சென்று அடைந்தது குறித்தும் குற்றச்சாட்டு இருக்கின்றது.

இந்த முறைகேடுகளை களைய ஒரு கணக்காய்வுச் சட்டமூலம் தேவை என்பது கணக்காய்வாளர் நாயகத்தின் கோரிக்கை. நிதி முறைகேடுகள், அப்படியே நிலக்கரி கொள்வனவு ஊழலாக, அரிசி இறக்குமதி ஊழலாக பரிணாமம் அடைவதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

கணக்காய்வுச் சட்டம் மேம்படுத்தப்படுவதால், இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படலாமா இல்லையா என்ற வாதத்துக்கு இங்கு நான் வரவில்லை. திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பதுதான் நமது சித்தாந்தம். ஏனென்றால் திருடரைப் பிடிக்க நீங்கள் ஒரு வழி கண்டால், அதிலிருந்து தப்பிக்க அவர்கள் இன்னுமொரு வழியைக் காண்பார்கள்.

என்ன திருடர்கள் என்ற கணக்குக்கு எழுதத் தொடங்கிவிட்டோம் என்று சிலர் கேள்வி எழுப்பலாம். இங்கு நான் அதனைக் கூறவில்லையே. “பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல”, ஒரு உயர் அரச அதிகாரி, அதுவும் இந்தக் குற்றச்சாட்டை சுமத்த அருகதை, அதிகாரம் உள்ள ஒரு அதிகாரிதான் இதனைக் கூறியுள்ளார்.

எமது பிரச்சினை வேறு, அரச உயர் அதிகாரி குற்றத்தை தடுக்க சட்டத்தின் மூலம் வழி காண முயற்சிக்கலாம். ஆனால், அதனை வேறு வழியில் ஓட்டை கண்டு துஸ்பிரயோகம் செய்ய குற்றவாளிகள் முயற்சிப்பார்கள்.

ஆகவே, இங்கு பலன் தரக்கூடிய ஒரு வழி மனோநிலை மாற்றமே. இது பொதுமக்கள் பணம், தமக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் ஒரு பொறுப்போடு, பொறுப்புடமையோடு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அதிகாரிகள் உணர்ந்தாக வேண்டும். அதற்கான பயிற்சி அவர்களுக்கு அவசியம். இது அடிப்படையில் இருந்து, மூல வேரில் இருந்து மாற்றம் காணப்படவேண்டிய ஒரு பிரச்சினை. மாற்றம் என்பது பல சிக்கலான வழிமுறைகளின் ஊடாக வந்தடைய வேண்டிய ஒன்று. மாற்றம் வெறுமனே அதிகாரிகள் மத்தியில் மாத்திரம் உருவாக்கப்படக் கூடிய ஒன்றல்ல. அது அவர்கள் சார்ந்த சமூகத்தில் இருந்து, அது கொடுக்கும் அழுத்தங்களில் இருந்து, அவர்கள் கல்விபயின்று வந்த பள்ளிவாழ்க்கையில் இருந்து வரவேண்டியது.

மிக ஆழமான திட்டமிடல் இதற்கு அவசியம்.

அரங்கம்
செய்திகள்
தொடர்புகளுக்கு
ஆசிரியர்- பூ.சீவகன்
227, பார் வீதி, மட்டக்களப்பு

அரங்கம் பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர முகவர்கள்

| மட்டக்களப்பு | கொழும்பு |
| --- | --- |
| ARANGAM<br>071 399 9091<br>070 300 9001 | ARANGAM<br>arangamads@gmail.com<br>070 345 6800<br>071 399 9091 |
| EAST LINK AGENCY POST OFFICE<br>077 180 1400<br>196,TRINCO ROAD,BATTICALOA | |
| SHALOM DIGITAL STUDIO<br>077 632 1079<br>63,ST ANTONIS LANE,BATTICALOA | SIVA<br>077 503 8997<br>077 721 7341 |
| DINA ADVERTISING<br>077 712 0809<br>183/1,NEW KALMUNAI ROAD, KALLADY,BATTICALOA | J. PONNUTHURAI<br>077 187 7999 |
| ST.ANTONY<br>077 470 1373<br>MAIN STREET, VALAICHCHENAI | |
| TERRY<br>077 618 5 209 | S.K. RAMESH<br>077 360 0161<br>65,MANNING PLACE WELLAWATTA |

UK +44 776 935 409
+44 208 422 5917
67,KEMPTON AVENUE NORTHOLT,UB5 4HG,UK

## துரங்கம் நிறைந்த அரங்கம்

இலவச இதழாக இல்லங்களுக்கு
வருகிறாய்
பலவித நிகழ்வுகளை பவ்வியமாய்
தருகிறாய்
இரத்தினச் சுருக்கமாய் இனிமையாய்
வரைகிறாய்
நித்தமும் படிக்க புத்தியைத்
தூண்டுகிறாய்
மறைந்து செல்லும் மரபுகளுக்கு
மறுமலர்ச்சி ஊட்டுகிறாய்
சிதைந்து போகும் கலாசாரத்தை
சீர்படுத்து விருப்போடு முனைகிறாய்
உள நலம் பற்றி உயிரோட்டமாய்
எழுதுகிறாய்
கடுகுக் கதைகளை காரசாரமாய்
தருகிறாய்
மட்டக்களப்பின் மாண்புகளை
மணிமணியாய் தொடுக்கின்றாய்
அம்பாறைத் தமிழர்களின் அரசியல்
வெட்டுமுகத்தை
புள்ளி விபரங்களோடு புரியவைக்கிறாய்
தொன்மை வாய்ந்த இடங்களின்
உண்மையான வரலாற்றை ஊருக்கு
உணர்த்துகிறாய்
கூர்மையை கூராக்க குறுக்கெழுத்துப்
போட்டியை
குடும்பத்திற்கு ஏற்ப குறைவில்லாமல்
கொடுக்கிறாய்
வாரத்தில் மூவருக்கு வாஞ்சையுடன்
வழங்கி
வையகத்தில் நீயும் குபேரன் ஆகிறாய்
அரங்கம் எல்லாம் வாசகர் கரங்களில்
சராங்கமாய் வலம் வந்து
சுரங்கம் போல் தித்தித்து – என்
துரங்கம் நிறைந்த அரங்கம் நீ.

க.புண்ணியநேசன்
151, சாரதா வீதி,
காரைதீவு – 05

அரங்கம்
05
வெள்ளி, ஆனி 22, 2018.
இதழ் – 18



பட்டறிவு

# நவீன சேரி: கொழும்பின் தொடர்மாடி வீடுகள்



“நிலம் உங்களுக்கு அதிகாரம்; எங்களுக்கு வாழ்க்கை”

“காலா” திரைப்படத்தின் தாரகச் சுலோகம் அது. காலா திரைப்படத்தைப் பார்வையிட்ட கொழும்பு வாழ் அடித்தட்டு மக்கள் (குறிப்பாக “சேரி” வாழ் மக்கள் மற்றும் அரசாங்க தொடர்மாடிகளில் வாழ்பவர்கள்) அந்த திரைப்படத்தில் காண்பிக்கப்படும் பல முகங்களில் தங்கள் முகங்களைப் பொருத்திப் பார்த்திருப்பார்கள். அத்திரைப்படத்தில் பேசப்படும் பிரச்சினைகள் பல தமது பிரச்சினைகளும் தான் என்பதை அடையாளம் கண்டிருப்பார்கள்.

கொழும்பில் உள்ள சேரிகளில் பல தாராவியை விட மோசமான நிலையில் பல இடங்கள் உள்ளன. இவர்கள் மொத்த கொழும்பு வாழ் மக்களில் 51% வீதத்தினர் என்கிறார் துஷார சமரதுங்க (Thushara Samaratunga - High Density High Rise Vertical Living for Low Income People in Colombo, Sri Lanka: Learning from Pruitt-Igoe) தனது ஆய்வில் பெரும்பாலான இம்மக்கள் தாம் வாழும் இடங்களை அப்படிப்பட்ட “சேரி” என்று இனங்கான்பதில்லை. தாம் வாழும் இடங்கள் அப்படி அழைக்கப்படுவதை விரும்புவதும் இல்லை.

பெரும்பாலான தமது வாழ்விடங்களை “தோட்டம்” என்று அழைத்துக் கொள்வார்கள். வசதி குறைந்த இடத்தில், மக்கள் திரள் நெரிசலாக வாழும் இடங்களைத் தான் சேரி என்று அழைக்கிறார்கள். அதன் படி கொழும்பில் அப்படி பல வாழ்விடங்களை அடையாளம் காணலாம்.

அடித்தட்டு தொழிலாளர்களும், மத்தியதர வர்க்கத்துக்கு கீழே உள்ளவர்களும் சாதாரண மத்திய வர்க்கத்தினரும், பெரும்பாலான ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த விளிம்பு நிலையினரும் வாழும் இடங்கள் இவை.

“நகராக்கம்” நிகழ, நிகழ மக்கள் செறிவு அதிகரிக்கப்படுவதும், அவர்களுக்கான தேவைகளும், வளங்களும் கூடவே அதிகரிக்கப்படுவதற்கான போக்கு நிகழவே செய்யும். இதை உலகெங்கும் காணலாம்.

பொதுவாக பெருமளவு மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் நகரங்களில் சனத்தொகை பெருக்க விகிதாசாரமும் அதிகம். அதாவது ஏனைய பிரதேசங்களை விட இயல்பாக அங்கே சனத்தொகை பெருக்கவீதம் அதிகமாகவே இருக்கும்.
கொழும்பைப் பொறுத்தளவில் வெளி மாவட்டங்களில் இருந்து தலைநகரை நோக்கி படையெடுத்து பெருகுவது என்பது எங்கும் போல இங்கும் நிகழ்ந்திருக்கிறது. அடுத்ததாக யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் பெருவாரியாக கொழும்பை நோக்கியே கடந்த தசாப்தங்களில் பெருகினார்கள். யுத்தம் முடிந்த பின்னர் தமது பிரதேசங்களுக்கு திரும்பியவர்கள் குறைவே. அவர்களில் பெரும்பாலானோர் கொழும்புவாசியாகவே ஆனார்கள். ஆக கொழும்பின் சனநெரிசல் என்பதை இந்தப் பின்னணியுடன் தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

யுத்தத்தின் காரணமாக குடியேறி நிரந்தவாசியாக ஆனவர்களில் பெரும்பாலானோர் இந்த சேரி வாழ்க்கைக்குள் அகப்படவில்லை. அவர்களில் பெரும்பாலோனோரின் பொருளாதார காரணிகள் அந்த இடத்துக்கு அவர்களைத் தள்ளவில்லை. ஆனால் சேரி வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டவர்களும் கணிசமானவர்களும் உளர்.

**என்.சரவணன்**

கொழும்பு என்பது இலங்கையின் வர்த்தகத் தலைநகரம். அந்த வகையில் பல்வேறு தொழில்துறையை நிரப்பும் பெருமளவு தொழிலாளர் வர்க்கத்தினர் இங்கே தான் வாழ்கிறார்கள். உழைப்புச் சுரண்டலுக்கு அதிகமாக ஆளாகும் அவர்களின் வாழ்விடங்கள் இந்த சேரிகளும், அதை அண்டிய பகுதிகளுமாகத் தான் இருக்கமுடியும். அப்படித் தான் இருக்கிறது.



1978 இல் திறந்த பொருளாதாரக் கொள்கையின் வரவோடு இந்த வர்த்தகத் தலைநகருக்குள் பல்தேசிய கம்பனிகளினதும், கார்ப்பரேட் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கின. அந்நிய முதலீடுகளாலும் தொழிற்துறை பெருக்கத்தாலும் நிலம் அதிகளவு தேவைப்பட்டது. அதன் விளைவு கொழும்பின் மையத்திலிருக்கும் முக்கிய சேரிகளில் இருந்து மக்கள் அகற்றப்பட்டு தொடர்மாடிக் கட்டடங்களுக்குள் புகுத்தப்பட்டார்கள்.

இலங்கையின் 1953ஆம் ஆண்டு முதன் முதலில் தேசிய வீடமைப்புத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே படிப்படியாக வீடமைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. 1978க்குப் பின்னர் தான் இதன் வேகம் அதிகரிக்கப்பட்டது. இதெற்கென தேசிய வீடமைப்பு அதிகார சபையும் நிறுவப்பட்டது. ஐ.நா சபையும் இந்தத் திட்டத்துக்கு உதவியளித்தது. 1982ஆம் ஆண்டை “வீடற்றவர்களுக்கு வீடு” என்று ஐ.நா பிரகடனப்படுத்தியது. ஐ.நா சபையின் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் வீடுகள் அப்போது கட்டப்பட்டன. வீடமைப்பு அமைச்சராக இருந்த பிரேமதாசவின் திட்டத்தில் 1984-1988 காலப்பகுதிக்குள் மாத்திரம் “பத்து லட்சம் வீடுகள்” திட்டம் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டன. பிரேமதாச ஜனாதிபதியாக பதவி வகித்த 1989-1993 காலப்பகுதிக்குள் 1.5 மில்லியன் வீடுகள் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த திட்டங்களில் மக்கள் நலன் நிச்சயம் இருந்தாலும் காலப்போக்கில் பெறுமதியான நிலங்களை அரசு கையகப்படுத்தும் திட்டத்தின் அங்கமாக பரிமாற்றப்பட்டது. இதன் விளைவாக கொழும்பு சேரிப்புறங்களில் வாழ்ந்த மக்களின் நிலங்கள் பெறுமதி உயர்ந்திருந்த நிலையில் மகிந்த ராஜபக்சவின் ஆட்சி காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களை வலுக்கட்டாயமாக இராணுவத்தைக் கொண்டு அகற்றி வீதியில் விட்டார்கள். அவர்களுக்கு பின்னர் வழங்கப்பட்ட வீடுகள் அவர்களின் வாழ்ந்த நிலங்கள், வீடுகளின் அளவுக்கு பெறுமதியானவை அல்ல.

**“நிலம் உங்களுக்கு அதிகாரம்; எங்களுக்கு வாழ்க்கை” என்ற காலா திரைப்பட வசனம் கொழும்பு தோட்ட மக்களுக்கும் பொருந்தும்**

நிலத்தோடு வாழ்ந்த மக்கள் வசதிகள் குறைவாக இருந்தாலும் அந்த சிறு குடில்களில் மாடிகளைக் கட்டி பல குடும்பங்களும் வாழ்ந்தார்கள். ஆனால் அவர்களின் நிலங்களைப் பறித்த அரசு அவர்களை வீடமைப்புத் திட்டம் என்கிற பேரில் சிறு கூடுகளுக்குள் அடைத்தது. அதிகாரிகள், அரசியல்வாதிகள், தனியார் கொன்ராக்டர்களும், இடைத்தரகர்க்களுமாக நிதியின் பெரும்பகுதியை ஊழல்களால் பிரித்தெடுத்ததன் பின்னர் எஞ்சிய பணத்தைக் கொண்டு கட்டப்பட்டிருக்கும் இன்றைய தொடர்மாடிகள் தரத்தால் மிகவும் மோசமானவை. வீடுகள் வழங்கப்பட்டு ஒரு சில வாரங்களிலேயே அவற்றின் பராமரிப்புகள் கூட மோசமாக ஆகிவிடுகின்றன. வீடமைப்பு அதிகார சபையும், அமைச்சும், திணைக்களங்களும், உள்ளூராட்சி நிறுவனங்களும் மாறி மாறி ஒருவருக்கொருவர் பழியைப் போட்டு தப்பி விடுகின்றனர்.

இம்மக்களில் கணிசமானோர் தமது சொந்தத் தேவைகளை ஈடு செய்வதற்காகவும் தொழிலுக்காகவும் முச்சக்கர வண்டிகளை வைத்திருப்பவர்கள், அவற்றை நிறுத்துவதற்கும் எந்த வசதிகளும் இல்லை. சிறுவர்கள் ஒன்று கூடுவதற்கு போதிய வசதிகள் கிடையாது. பாடசாலை முடிந்து திரும்பும் சிறுவர்கள் வீடுகளுக்குள் அடைவதைத் தவிர அவர்களுக்கு தெரிவில்லை. வளர்ந்தவர்கள், வயோதிபர்கள் ஒன்று கூடுவதற்கான வசதிகளும் கூட உரிய முறையில் இல்லை. ஏன் வீட்டில் துவைக்கின்ற உடைகளைக் காயவைக்கக் கூட வசதிகள் கிடையாது. புதிய சீமெந்து தொடர்மாடி வீடு கச்சிதமான தோற்றத்துடன் காட்சியளித்தாலும் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் சிறு வீட்டுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிலர் கிடைத்த வீட்டை வாடகைக்கு கொடுத்துவிட்டு வசதி குறைந்தாலும் - இட வசதி அதிகமுள்ள இடங்களுக்கு மீண்டும் வாடகைக்குச் சென்றுவிட்டதையும் அவதானிக்க முடியும்.

இம்மக்கள் இருந்த நிலங்களை அரசு கையகப்படுத்தி மீண்டும் வேற்று முதலீட்டாளர்களுக்கு விற்றுவிடவோ, வாடகைக்கு விடவோ செய்கின்றனர். கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளும் இலவசமாக வழங்கப்படவில்லை மீண்டும் அவர்களிடம் பணம் அறவிடப்படுகிறது. நிலம் மக்களின் கைகளில் இருந்தவரைக்கும் வானமே எல்லை என்று அவர்களால் மேலே பெருப்பித்து வாழ முடிந்தது. ஆனால் இப்போது நிலம் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது. இனி அது கிடைக்கப்போவதுமில்லை.

கொழும்பின் தொடர்மாடிக் கட்டிடங்களுக்குப் போய்ப் பார்த்தால் தெரியும் அவை நவீன சேரிகளாக எப்படி உருவெடுத்திருக்கின்றன என்பது.

அவர்களின் வாழ்க்கையை தரமுயர்த்துவதாக சொல்லிக்கொண்டு தொடர்மாடி வீடுகளை கட்டிகொடுக்கும் அரசு குறைந்தபட்சம் அங்குள்ள அவர்களின் சுற்றுச் சூழலையும், சுற்றாடல், உட்கட்டமைப்பு விடயத்தில் கூட உரிய வழி காட்டியதாகத் தெரியவில்லை. கட்டிட மலைகளுக்குள் அவர்களைத் திணித்துவிட்டால் மாத்திரம் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரப் போவதில்லை. அவர்களின் அடிப்படை வாழ்க்கை வசதிகளும் சரி செய்யப்படவேண்டும்.

கொழும்பில் இன்னும் பல நிலங்களில் இருந்து மக்களை அப்புறப்படுத்த தயாராகி வருகிறார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்படவேண்டும். ஏற்கனவே தொடர்மாடி குடியிருப்புகளில் வாழ்பவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பலமான அமைப்பு இதுவரை இல்லை.

நிலம் நமதுரிமை.

# இலங்கை (யில்) தமிழர்கள் -- பகுதி 3

## மலைகளைப் பேசவிடுங்கள்

மலையகத்தில் இருந்து புலப்பெயர்வினால் வன்னிக்குச் சென்ற மலையக மக்கள் மாத்திரமல்ல மலையகத்திலேயே வாழ்ந்த மலையக மக்கள் மீதும் உள்நாட்டு யுத்தம் திணிக்கப்பட்டது. மலையக இளைஞர்கள் "ஈழ" யுத்தத்தின்பால் ஈர்க்கப்பட்டது ஒரு புறமிருக்க "தமிழ்" என்ற மொழியும் "தெமளுன்" என்ற சிங்கள இனவாதத்தின் பொதுவுணர்வும் இனம்சார்ந்த யுத்த பார்வைக்குள் மலையகத்தை கொண்டு சேர்த்தது.

மலையகம் நோக்கிய இலங்கை தமிழர்களின் வருகையினை சுருக்கமாகப் பார்த்தால் ஆசிரியர்கள் (ஆரம்பகாலம் முதல் இன்றுவரை) அரச ஊழியர்கள், தோட்ட உத்தியோகர்த்தர்கள், வர்த்தகர்கள் (ஆரம்பம் முதல் மலையக நகரங்களில் இருக்கும் புகையிலை, சுருட்டுக்கடைகள் பிரதானம்) என வளர்ச்சிப் பெற்று பின்னர் யுத்தகாரணத்தினால் பாதுகாப்பு கருதியும் இடம்பெற்ற இலங்கைத் தமிழர்களின்;

**ஈழ யுத்தத்தில் மலையக தமிழர் பங்களிப்பும் கணிசமானது**

'புகலிடம்' எனும் நிலையை மலையகம் அடைந்தது.

1980களிற்கு முன் வன்னி நோக்கிய மலையகத் தமிழர்களின் புலப்பெயர்வும் 1980களின் பின் மலையகம் நோக்கிய இலங்கைத் தமிழர்களின் புலப்பெயர்வும் புதுவிதமான இடைத் தொடர்பை இந்த மக்களிடையே ஏற்படுத்தியது.

வன்னிக்கு விவசாய தொழிலாளர்களாக, யாழ்ப்பாணத்திற்கு கடைச்சிப்பந்திகளாக, அரிசி ஆலைத் தொழிலாளர்களாக என மலையக மக்கள் இடம்பெயர்ந்ததோடு கல்வி பெறும் நொக்கிலும் (வெகு சிலர்) யாழ்ப்பாண கல்லூரிகளிற்கும் பல்கலைக்கழகத்திற்கும் சென்றனர். (உதாரணம் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் - பதுளையில் இருந்து யாழ் மகாஜன கல்லூரிக்கு கல்வி பெறச் சென்றவர்)

வடக்கு, கிழக்கு இளைஞர்கள் தங்களது ஆயுதப் போராட்ட ஆரம்ப கால கட்டத்திற்கு ஆட்பலம் தேடி மலையகத்துக்குள் ஊடுருவினர். இதற்கான ஆதாரங்கள் பல உண்டு. (உதாரணமாக பீதுறுதாலகாலமலை



ரூபவாஹினி தாக்குதல் முதல் அமரர் பெ.சந்திரசேகரன் கூட்டுப்படை தலைமையக குண்டுவெடிப்பு சூத்திரதாரி என அறியப்பட்ட வரதனுக்கு புகலிடம் கொடுத்து சிறை சென்றது வரை பல நிகழ்வுகளைச் சொல்லலாம்)



இந்த சந்தர்ப்பத்தில் வெறுமனே மலையகத்தினை ஆட்பலத்திற்காக மாத்திரமின்றி அரசியல் ரீதியான கோரிக்கைக்காகவும் சில இயக்கங்கள் முன்னெடுத்தன என்பதையும் மறுத்துவிட முடியாது. இனப்பிரச்சினை தீர்வு முயற்சியாக பூட்டான்-திம்பு பேச்சுவார்த்தையில் இலங்கைத் தமிழர்கள் தரப்பினரால் மலையக மக்களுக்கு நிரந்தர இலங்கை பிரஜாவுரிமை வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. குறிப்பாக ஈரோஸ் என்கிற விடுதலை இயக்கம் மலையக மக்களின் பிரச்சினையில் காட்டிய அக்கறையினால் தங்களுக்கு கிடைத்த பாராளுமன்ற ஆசனங்களில் ஒன்றை (தேசிய பட்டியல் - அமரர் இராமலிங்கம் -ராகலை) மலையக மக்களுக்கு ஒதுக்கியது. அமரர் பெ.சந்திரசேகரன் PLOTE (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்) சார்பாக நுவரெலியாவில் தேர்தல்களில் களம் இறங்கியமை என்பது போன்ற வரலாறுகளைக் கூறலாம்.

**வன்னியில் குடியேறிய மலையக விவசாயத் தொழிலாளிகள் மண்வெட்டியை மட்டுமே பிடித்துக்கொண்டிருந்தார்கள் என்று மட்டும் நம்பினால் அது நகைப்புக்கிடமான கருத்தாகிவிடும்**

மலையகத்தின் புவியியல் அமைப்பில் முக்கியத்துவம் பெறுவது இரயில் பாதை கட்டமைப்பு. பதுளையில் ஆரம்பித்து, நானுஓயா (நுவரெலியா) ஹட்டன், நாவலப்பிட்டி, கண்டி, என மலையகத்தை வட்டமிட்டு "பொல்காவலை" சந்தி ஊடாக கொழும்பை வந்தடையும். கொழும்பில் இருந்து வடக்குச் செல்லும் யாழ் தேவி "பொல்காவலை" சந்தி "மாகோ சந்தி" வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் செல்லும்.

மலையக ரயில் பாதைகளுக்கு "தேயிலை" ஏற்றிச் செல்லும் பொருளாதார நோக்கமே பிரதானம். அதே ரயில் வடக்கு கிழக்கு விடுதலை இயக்கங்களின் பொருளாதாரத்திற்கும் பலம் சேர்த்துள்ளது. மலையக நகர்கள் உட்பட இலங்கையின் தென்பாகங்களில் எல்லாம் வடமராட்சி "சுருட்டு"க்கடைகள் பிரபலமானவையாக இருந்தன. உடரட்ட மெனிக்கவும், பொடிமெனிக்கவும் (மலையகத்துக்கான ரயில்கள்) வளைந்து வளைந்து ஓடி புகையிரத நிலையங்களில் தரித்து செல்கையில் ரயிலில் பயணிக்கும் ஒரு குழுவுக்கும் புகையிரத நிலையத்தில் காத்திருக்கும் ஒரு குழுவுக்கும் "சுருட்டுக்" கட்டுகளின் பரிமாற்றம்; 1980களில் இடம்பெறும். அது பத்திரமாக பொல்காவலைச் சந்தியில் கைமாறி வடக்கு நோக்கி யாழ்தேவியில் செல்லும். யாழ்ப்பாணத்தில் இருந்து புகையிலைச் சுருட்டாக வந்த கட்டுகள் திரும்பவும் அதே புகையிலைச் சுருட்டுக்கட்டாகவே யாழ்ப்பாணம் சென்றன என நம்புவதற்கில்லை. மலையக மக்கள் அதிகம் வெற்றிலை, பாக்கு, புகையிலை உண்பவர்கள் என்பதுவும் சுருட்டு புகைக்கும் பழக்கம் உடையவர்கள் என்பதுவும் மறுப்பதற்கில்லை. பின்னாளில் மலையக நகரங்களில் அல்லாது அது கொழும்பைத் தளமாகக்கொண்டு அந்நியசெலாவணி கட்டுகளாய் மாறிப்போயின.

யாழ்ப்பாணத்து கடைச்சிப்பந்திகளான மலையக இளைஞர்கள் தொடர்ந்தும் கையில் தேனீர் தயாரிக்கும் கரண்டியை மாத்திரமே பிடித்துக் கொண்டிருந்தார்கள், தொடர்ச்சியாக வெதுப்பகங்களில் (பேக்கரி) பாண் மட்டுமே சுட்டுக் கொண்டிருந்தார்கள். வன்னியில் குடியேறிய மலையக விவசாயத் தொழிலாளிகள் மண்வெட்டியை மட்டுமே பிடித்துக்கொண்டிருந்தார்கள் என்று மட்டும் நம்பினால் அது நகைப்புக்கிடமான கருத்தாகிவிடும். அதேநேரம் இலங்கை இராணுவம் இவர்களை தரம்பிரித்து "வத்துகர தெமள" (தோட்ட தமிழர்கள்) என்றும் வட கிழக்கில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காலத்தில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் தமது தொப்புள் கொடி உறவு என்றும் வகைப்படுத்தியும் பார்த்தனர் என்று செல்வதும் நகைப்புக்கிடமானதே.

மலையகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வன்னிக்கு சென்று உள்நாட்டு யுத்தத்தின் கடைசித்தறுவாயில் அல்லலபட்ட மலையகத்தமிழர்கள் மீள்குடியேற்றத்தின் போதும் மலையகத்தமிழர்களாகவே பதியப்படுகின்ற ஒரு நிலை

**மல்லியப்புசந்தி திலகர்**

அவர்களுக்கான காணியுரிமை வடக்கில், வன்னியில் மறுக்கப்படுகின்ற நிலை தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது. அதே நேரம் மலையக மக்கள் மலையகத்தில் இன்றும் கூட வீட்டுரிமையற்று வாழும்நிலையில் மலையகம் நோக்கி புலம்பெயர்ந்த இலங்கைத்தமிழர்கள் மலையகத்தில் வீட்டுரிமையாளர்களாகவும் மலையகத்தை நிரந்தர வதிவிடமாக்கிக் கொண்டவர்களாகவும் உள்ள நிலைமை வளர்ச்சிபெற்றுள்ளது. அது மலையகத்தில் இருந்து இலங்கைத்தமிழர் ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக்கிப்பார்த்த மேலதிக வாக்குபலத்தையும் இலங்கை தமிழருக்கு கொடுத்துள்ளது போன்ற தகவல்களையும் இலங்கையில் தமிழர்கள் பற்றிய அக்கறையுடையோர் அவதானிக்கவும் ஆய்வு செய்யவும் தலைப்படுதல் பொருத்தமானது.

இந்த நிலைமையில் இலங்கையில் தமிழர்கள் என்போர் வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களும் மலையகத் தமிழர்களும்தான் என்பதையும் நடைபெற்ற யுத்தத்தின் விளைவுகள் எல்லோருக்குமானதுதான் என்பதையெல்லாம் இலங்கையில் வாழ்நிலையை கொண்டிராத அல்லது இலங்கைக்கே வந்திராத அல்லது இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடையே புரிந்துகொள்ளப்படவேண்டிய தேவை இருக்கிறது.

**சிறுநீரகம் தேவை**

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு : 0771837646



# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 07

1977ம் ஆண்டின் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகள் - தெரிவானவர்கள்.

அம்பாறை மாவட்டம்

| தேர்தல் தொகுதி | தெரிவான உறுப்பினர்கள் |
|---|---|
| பொத்துவில் (இரட்டை அங்கத்தவர் தொகுதி) இடைத்தேர்தல் 12.09.1977 | 1. எம்.ஏ.எம். ஜலால்டீன் (ஐ.தே.க)<br>2. எம். கனகரட்ணம் (த.வி.கூ) |
| கல்முனை | ஏ.ஆர்.எம். மன்சூர் (ஐ.தே.க) |
| சம்மாந்துறை | எம்.ஏ. அப்துல் மஜீத் (ஐ.தே.க) |
| அம்பாறை | பி. தயாரெட்ண (ஐ.தே.க) |

1977ம் ஆண்டின் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - பொத்துவில் தொகுதி முறைகள்

(இடைத்தேர்தல் 12.09.1977)

| இடம் | வேட்பாளர் | கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| 01 | எம்.ஏ.எம். ஜலால்டீன் | ஐ.தே.க | 30,315 |
| 02 | எம். கனகரட்ணம் | த.வி.கூ | 23,990 |
| 03 | எம்.எம். முஸ்தபா | ஸ்ரீ.ல.சு.க | 22,378 |

## அம்பாறைக்கு உழைத்த கனகரட்ணம்

பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியின் இரண்டாவது உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் எம்.கனகரட்ணத்திற்கும் மூன்றாவது இடத்தில் வந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் எம்.எம். முஸ்தபாவுக்கும் இடையேயுள்ள வாக்கு வித்தியாசம் ஆக 1612 மட்டுமே. இத் தேர்தலில் சுயேற்சை வேட்பாளராகப் போட்டியிட்ட என். தர்மலிங்கம் அவர்கள் இன்னும் கொஞ்சம் வாக்குகளைச் சிதறடித்திருந்தால் அல்லது முஸ்லிம்களினதும் சிங்களவர்களினதும் மொத்த வாக்குகள் ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கிட்டத்தட்டச் சம அளவில் அளிக்கப்பட்டிருந்தால் பொத்துவில் தொகுதியின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களுமே முஸ்லிம்களாக வந்திருப்பார்கள்.

தர்மலிங்கம் அவர்கள் இத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடக் காரணம் 1965ம் ஆண்டிலும், 1970ம் ஆண்டிலும் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் முன்னைய பொத்துவில் தொகுதியில் அதாவது பொத்துவில் ஒற்றை அங்கத்தவர் தொகுதியாக முன்பு இருந்த போது அவர் சுயேற்சை வேட்பாளராகப் போட்டியிட்ட வேளையில் ஒரேயொரு தமிழ் வேட்பாளரான அவரைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஆர்.டபிள்யூ. அரியநாயகம் அவர்கள் ஆதரியாமல் அவரை எதிர்த்து முஸ்லிம் வேட்பாளரான எம்.ஏ.அப்துல் மஜீத்தை ஆதரித்து தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டமையாலும் அதனைத் தமிழரசுக் கட்சி வேடிக்கை பார்த்தமையினாலும் எழுந்த அரசியல் பகைமையுணர்வேயாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்ட வட்டாரங்களின் முன்னைய யோசனைகளின்படி இத் தேர்தலில் மு.திருச்செல்வம் அவர்களோ அல்லது கவிஞர் காசி ஆனந்தன் அவர்களோ அல்லது மூதூர் அ.தங்கத்துரை அவர்களோ தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருப்பார்களேயானால் இவர்களில் எவருமே வெற்றியீட்டிருக்க முடியாது. இவர்கள் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பெற்றுப் பொத்துவில் தொகுதியின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம்களாகவே தெரிவு செய்யப்பெற்றிருப்பார்கள்.

தமிழரசுக் கட்சியின் புத்திசாலித்தனமற்ற - இராஜதந்திரமற்ற - இடம் பொருள் ஏவல் அறிந்து செயற்படும் அரசியல் தந்துரோபாயமற்ற வெறும் வடிகட்டிய கட்சி அரசியலால் - "ஏட்டுச்சுரைக்காய்" அரசியலால் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு ஏற்பட்ட – ஏற்படவிருந்த – சமூக பொருளாதார அரசியல் பின்னடைவுகளை மேற்கூறப்பெற்ற விடயங்கள் மூலமும் சம்பவங்கள் மூலமும் புரிந்துகொள்ள முடியும்.

திரு.எம்.கனகரட்ணம் அவர்களுக்கு வெற்றிவாய்ப்பைக் கொடுத்த மேலதிக 1612 வாக்குகளில் கணிசமானவை பொத்துவில் கிராமம் வாழ் முஸ்லிம்களிடையே இருந்த தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாக அவருக்கு அளிக்கப்பெற்ற முஸ்லிம் வாக்குகளே என்ற உண்மையும் இங்கு குறிப்பிடுதல் தர்மமாகும். தொழிலதிபராக விளங்கிய அவரின் தந்தை மயில்வாகனம் ஓவசியரிடமும் பின் தந்தையார் காலஞ்சென்ற பின்னர் அவரிடமும் அவர்களுக்குச் சொந்தமான வயலில், மாட்டுப் பண்ணையில், அரிசி ஆலையில், வீட்டில், கடைத் தொகுதிகளில் வேலைபார்த்துத் தங்கள் குடும்பங்கள் வாழ்வதற்குக் கனகரட்ணத்தின் குடும்பத்தில் தங்கியிருந்த ஏழை முஸ்லிம் குடும்பங்கள் தங்கள் நன்றிக்கடனைத் தீர்க்க அரசியல் வஞ்சகமற்று கனகரட்ணம் அவர்களுக்கு அளித்த வாக்குகளே இவை.

1977-1989 காலப்பகுதி

1977ம் ஆண்டு பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியிலிருந்து இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு.எம். கனகரட்ணம் வெற்றியீட்டியதன் மூலம் சுதந்திர இலங்கையில் முதன் முறையாக அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழர் ஒருவர் அரசியல் பிரதிநிதித்துவம் பெற்றார். இது முப்பது வருட காலம் அரசியல் பிரதிநிதித்துவமின்றி இருந்த காரணத்தால் சமூக, பொருளாதார அரசியல் பின்னடைவுகளுக்குள்ளாகிப் புறக்கணிக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்த அம்பாறைமாவட்டத் தமிழர்களுக்குப் பொதுவாகவும், பொத்துவில் தொகுதித் தமிழ் மக்களுக்குக் குறிப்பாகவும் ஓர் எதிர்கால நம்பிக்கையை ஊட்டியது. திரு. எம்.கனகரட்ணம் 1977ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக்குழுத் தீர்மானத்திற்கு மாறாக ஆட்சியிலிருந்த ஐ.தே.க அரசை ஆதரித்ததன் மூலம் அரசாங்கத்திற்கு மாறினார். அரச தலைவராக – பிரதமராக ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு.அ.அமிர்தலிங்கமும் விளங்கிய காலம் அது. இவரது இச் செய்கையால் ஆத்திரமடைந்த தீவிரவாத தமிழ் இளைஞர் கோஸ்டியொன்றினால் கொழும்பில் வைத்து 1978 ஜனவரியில் சுடப்பட்டுப் படுகாயமுற்று தீவிர சத்திரசிகிச்சையின் பின்னர் உயிர் தப்பினார். உமாமகேஸ்வரன் தலைமையிலான தீவிரவாத இளைஞர் குழுவே இவரைச் சுட்டது என்பது பின்னாளில் தெரியவந்தது. கிழக்கின் அதிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத் தமிழர்களின் யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொள்ளாத வடக்கின் மனோநிலையே இது.

பின்னர் ஜே.ஆர் அரசாங்கத்தினால் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பெற்றார். தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிட்டு வென்று அரசாங்கக் கட்சிக்கு அவர் மாறிய செயலைக் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாதுதான். அவரது இந்த நடவடிக்கை அரசியல் ரீதியாக விமர்சிக்கப்பட வேண்டியதொன்றாகும். எனினும் அவரது பதவிக்காலத்தில் பொத்தவில் தொகுதிவாழ் மக்களுக்கு அவர் ஆற்றிய தன்னலமற்ற சேவைகள் பின்னாளில் அவரது அரசியல் எதிரிகளாலும் அங்கிகரிக்கப்பெற்றன.

கட்சி மாறினாலும் கூட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக அவர் செயற்படாமையும் அரசாங்கக் கட்சியான ஐ.தே.க இன் கிளைகளை அமைத்தோ அல்லது ஐ.தே.க இற்காக அரசியல் பிரச்சாரம் செய்யவோ அவர் முனைப்புக் காட்டாமையும் கட்சி அரசியலுக்கு அப்பால் அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் நலன் கருதி அவர் செயற்பட்டமையும் இக் காலத் தமிழ் அரசியல்வாதிகளைப் போல் எதிர்காலத் தேர்தல் வெற்றியினைக் குறிவைத்து வாக்குச் சேகரிக்காமல் பெருமனத்துடன் தன்னைத் தெரிவு செய்த பொத்துவில் தொகுதி வாழ் மக்களுக்கு அவர் ஆற்றிய எதிர்பார்ப்புகள் எதுவுமற்ற சுயனலமில்லாத சேவையும் அவரை ஒரு வித்தியாசமான அரசியல்வாதியாகவே இனம்காட்டிற்று.

ஓர் அரசியல்வாதியாக அல்லாமல் ஓர் சமூக சேவையாளராகவே தன்னை வெளிப்படுத்தினார். அதனால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஒட்டுமொத்தமான தமிழ் தேசிய இனத்திற்கும் கட்சிமாறியதால் அவரால் அப்போது இழைக்கப்பட்டதாக வர்ணிக்கப் பெற்ற அரசியல் துரோகம் பின்னாளில் மறக்கப் பெற்று அவரைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் புரிந்துகொள்ளும் நிலைமையைத் தன்னுடைய கரங்களில் கறை படாத தன்னலமற்ற தாராள மக்கள் சேவையினால் ஏற்படுத்தினார்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்துக் கட்சி மாறிய அன்று பாராளுமன்றத்தில் இடி விழும் என அவரைப் பார்த்துத் திட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கமே பின்னாளில் அவரைப் புரிந்துகொண்டு தனது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற சகாக்களிடம் கனகரட்ணத்தைப் பற்றி ஒன்றும் பிழையாகப் பேச வேண்டாம் என்று கூறுமளவுக்கு அவர் நடந்துகொண்டார். சுமார் முப்பது வருட காலம் அரசியல் அனாதைகளாக்கப்பட்ட அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களை சமூக, பொருளாதார, மேம்பாடடையச் செய்வதற்கு நான் எடுக்கும் முயற்சிக்கு இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகள் முட்டுக்கட்டை போடுகிறார்கள். அதனை முறியடித்து

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

எனது மக்களுக்குச் சேவையாற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து முடியாது. வெறுமனே கோசம் போடவும் கொடி பிடிக்கவும் நான் அரசியலுக்கு வரவில்லை. எனக்குச் சிலுசிலுப்பு வேண்டாம். பலகாரமே தேவை. எதிர்காலத் தேர்தல் பற்றியும் எனக்கு அக்கறையில்லை. கட்சி அரசியலும் எனக்கு வேண்டாம். தற்போதுள்ள சூழ்நிலையில் எனது பதவிக் காலத்தில் என்னைத் தெரிவு செய்த மக்களுக்கு உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டுமென்றால் என்னையும் என் அரசியல் அணுகுமுறைகளையும் மக்கள் நலனுக்காக மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. அதைத்தான் நான் செய்தேன் என்றே அவருக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் நியமனம் பெற்றுக்கொடுத்ததிலிருந்து ஆரம்பித்து தேர்தல் வெற்றிவரை அவருக்காக உழைத்த இக்கட்டுரை ஆசிரியரிடம் அவர் கூறியிருந்தார். மக்களுக்காகத்தான் கட்சியே தவிர கட்சிக்காக மக்கள் அல்ல என்பதே அவரது அரசியல் அறமாக இருந்தது.

அவரது பதவிக் காலத்தில் பொத்துவில் தொகுதியில் பல தமிழ் பாடசாலைகள் பௌதீகவளங்களைப் பெற்றன. புதிய பாடசாலைகள், கிராமியப்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# தெய்வத்தின் ஊழியர்கள் : சில புலம்பெயர் மருத்துவர்கள்



டாக்டர்.(திருமதி) காந்தா நிரஞ்சன்

சென்ற பெரும்பாலானோருக்கு ஊருக்கு திரும்பி வருவது என்பது கொஞ்சம் வாஞ்சையான விடயந்தான். ஆனால், இங்கு வந்தாலும் தாமும் தமது நிபுணத்துவத்தை இலங்கையிலுள்ள மக்களுக்கு பணிபுரிய பயன்படுத்த வேண்டும் என்று நினைப்பது மகத்துவமானது.

இதற்கான திட்டமிடலும், உள்ளூரில் இருப்பவர்களுடனாக ஒருங்கிணைப்பும் மிகவும் பாரியது. அப்படியான ஒரு அரும்பணியை புலம்பெயர்ந்து வாழும் இலங்கை தமிழ் மருத்துவர்களின் இந்த அமைப்பு மிகவும் சிறப்பாக, அதேவேளை சுவடு தெரியாமல் செய்து வருகின்றது.

இந்த அமைப்பின் ஒரு முக்கிய உறுப்பினர் லண்டனில் பணியாற்றும் டாக்டர்.(திருமதி) காந்தா நிரஞ்சன், தனது கணவரான டாக்டர் நிரஞ்சனோடு சொந்த ஊரான மட்டக்களப்புக்கு வந்திருக்கிறார். ஆனால், இது அவருக்கு கேளிக்கையான ஒரு விடுமுறை அல்ல. அங்கும் இங்குமாக ஓடி ஓடி பணியாற்றுகிறார்.

மியொட் என்பது தமிழர்களின் மருத்துவ நிறுவனம் என்பதன் ஆக்கில வார்த்தையின் சுருக்கம். பெயர் செல்லமாக இருந்தாலும் அதன் கீழ் பணியாற்றும் மருத்துவர்களின் நோக்கம் கனிசமானது.



புலம்பெயர்ந்து சென்று, ஆங்கிலத்தில் தமது கல்வியையும் தொழிலையும் பல தசாப்தங்கள் ஆற்றிவிட்டுவந்த டாக்டர் காந்தா, நல்ல தமிழில், மிகுந்த சக்தியுடன் இங்கு ஆற்றிய உரைகள் மெச்சத்தக்கவை. எந்த சிக்கலான மருத்துவ விடயங்களையும் உள்ளூர் மருத்துவர்களைவிட சிறப்பாக தமிழில் விளங்கப்படுத்துகிறார்.

ஐரோப்பிய மண்ணில் தனது குடும்ப, சுகாதார, மருத்துவ அனுபவங்களை கிட்டத்தட்ட 80 களில் புலம்பெயர்ந்து அவர் இங்குள்ள மக்களின் தேவைக்காக வரையறுத்துப் பேசுகிறார். பட்ஸ் என்ற மட்டக்களப்பின் மேம்பாட்டுக்கான அமைப்பின் தலைவராகவும் அவர் செயற்படுகிறார். ஆகவே பணிகளின் அளவு இரட்டிப்பு.

இவர் தனது தோழியான டாக்டர் ராதா தர்மரட்ணத்துடன் சேர்ந்து கல்முனை மருத்துவமனையில், வைத்திய அத்தியட்சகர்களான இரா. முரளீஸ்வரன் (கல்முனை) குண.சுகுணன்(களுவாஞ்சிக்குடி) ஆகியோரின் ஏற்பாட்டில் ஒரு கண் கட்ராக்ட் சிகிச்சை முகாமை செய்திருந்தார். அதில் 75 பேர் பயன்பெற்றனர். கடந்த தடவை 150 பேருக்கு அவர்கள் சிகிச்சை ஏற்பாடுகளை செய்தனர்.

அமெரிக்காவின் சர்வதேச மருத்துவ மனிதாபிமான அமையத்தைச் சேர்ந்த டாக்டர் சுபத்ரா சிவகுமார் பொறியியலாளர் சிவகுமார் குடும்பத்தினர் இதற்கான



டாக்டர் ராதா தர்மரட்ணத்துடன்

செலவை ஏற்றிருந்தனர்.

களுவாஞ்சிக்குடி நலன்புரி அமைப்பினர் நோயாளர்களுக்கான போக்குவரத்து, உணவு தொடக்கம் அத்தனை நலன்புரி விடயங்களுக்கும் பொறுப்பாக இருந்து செயற்பட்டனர்.

அதேவேளை, லண்டனில் உள்ள அமைப்புக்கள் வழங்கும் உதவிகளை இங்கு விநியோகிப்பதிலும் டாக்டர் காந்தா மிகவும் வேகமாகச் செயற்பட்டார். கணவரான டாக்டர் நிரஞ்சன் அவரது உந்துசக்தியாகத் திகழ்கிறார்.

இவர்களின் பின்னணியில் இருந்து இவர்களை இயக்குபவர் மியொட் நிறுவனத்தின் செயலாளரான லண்டனில் வசிக்கும் டாக்டர் பூலோகநாதன். கிழக்கில் மாத்திரமல்லாமல் வடக்கிலும் மருத்துவத்துறை சார்ந்த பல உதவிகள் சென்று சேர இவரது பங்களிப்பு அதிகம்.

குறுக்கல்மடம், படுவான்கரை, களுவாஞ்சிக்குடி, கல்முனை என பல்வேறு இடங்களில் மருத்துவ உதவிகளுக்கான பல நிரந்தர ஏற்பாடுகளை இவர்கள் செய்து வைத்திருக்கிறார்கள். இவற்றில் முதியோரை பராமரிப்பதற்கான ஏற்பாடு, நீரிழிவு நோய்க்கான சிகிச்சைகள் என்பனவும் அடங்கும்.

டாக்டர் கந்தசாமி அருளானந்தம் மற்றும் ஞானச்செல்வம் கிசோகாந் ஆகியோரின் நீரிழிவு நோய் குறித்த நூல் ஒன்றினையும் இவர்கள் வெளியிட்டும் வைத்தனர். அதற்கான வெளியீட்டு நிகழ்விலும் இவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

டாக்டர் திருமதி காந்தா, மியொட் அமைப்பின் சார்பில் இலங்கையில் சுனாமி தாக்கிய காலம் முதல் வந்து பணியாற்றி வருகிறார். தனது இலங்கைக்கான கிழக்கு மாகாணத்துக்கான பணிகளை தன்னைப் பெற்ற சொந்த ஊருக்கான நன்றிக்கடனாக அவர் கணித்து வைத்திருக்கிறார். தனது தந்தையே இந்த விடயங்களில் தன்னை ஆரம்பம் முதல் ஊக்கப்படுத்தியதாக பெருமை கொள்கிறார்.

உண்மையில் தமது சொந்த ஊருக்கு ஆற்றும் உதவிகள் பெற்றோருக்கு செய்யும் நன்றிக்கடனுக்கு ஒப்பானவைதான்.

# ‘ஏறாவூர்ப்பற்றில் நுண்கடனை அறவிட வீடுகளுக்கு செல்ல முடியாது’



“மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் எக்காரணம் கொண்டும், எந்தவொரு நிதி நிறுவனமும், புதிதாக நுண்கடன் வழங்குவதற்கு அனுமதி இல்லை, ஏற்கனவே வழங்கப்பட்ட நுண்கடனை மீளப்பெறுவதற்கு வீடுகளுக்கு செல்ல முடியாது” என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் நுண்கடன் வழங்குவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராயும் கூட்டம் திங்கட்கிழமை (18) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ந. வில்வரெட்ணம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் உதவி பிரதேச செயலாளர் திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கருணாகரன், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேசத்தில் நுண்கடன் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நுண்கடனை மீளச் செலுத்த முடியாமல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆண்டு மாத்திரம் 80க்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துள்ளனர். இதில் ஏறாவூர்ப் பொலிஸ் பிரிவில் 20ற்கும் மேற்பட்ட தற்கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த நிலையில், நுண்கடன் கடன் வழங்கும் நிதி நிறுவனங்களை ஏறூாவூர்ப்பற்று பிரதேசத்தில் அனுமதிப்பதா? இல்லையா? எனத் தீர்மானம் எடுப்பதற்காக இந்த விஷேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையடலில் பின்வரும் விடயங்கள் தீர்மானிக்கப்பட்டன.

மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத அமைப்புக்கள் கடன் வழங்க முடியாது. வலிந்து உதவும் அமைப்புக்களாக பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் இனிமேல் கடன் வழங்கத் தடைசெய்ய வேண்டும் அவர்கள் இலாபம் ஈட்டும் வகையில் செயற்பட முடியாது.
மத்திய வங்கி சட்ட திட்டங்களை மீறும் நிதி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க முடியாது. ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமங்களில் நுண்கடன் பெற்றவர்களின் விபரங்கள் இரண்டு வார காலத்திற்குள் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

புதிதாக எவருக்கும் நுண்கடன் வழங்க முடியாது; வழங்கிய நுண்கடனை மீளப் பெறுவதற்கு வீடுகளுக்குச் செல்ல முடியாது. நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் கடமை நேரம் காலை 8.30 முதல் மாலை 4.30 மணிவரை வரையறுக்கப்பட்டுள்ளது. பயனாளிகளை தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு கடனை மீளப்பெற வேண்டும்.


நுண்கடன் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவம் தமிழில் தயாரிக்கப்பட வேண்டும். ஒருவர் எத்தனை நிறுவனங்களில் கடன் பெற்றுள்ளார் என்ற தகவல் பெறப்பட வேண்டும். கடன் பெறுபவர்களின் வருமானம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

கூட்டத்திற்கு சமூகமளிக்காத நிதி நிறுவனங்கள் பிரதேச செயலாளர் பிரிவில் செயற்பட தடை விதிக்கப்பட்டுள்ளது.



# மட்டக்களப்பு எட்டுப்பகுதியின் தேசத்துக்கோவில்!

## வரலாற்றில் திருக்கோவில் – பாகம் 03)




வி.துலாஞ்சனன்

வடபகுதி நண்பன் ஒருவனுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். பேச்சோடு பேச்சாக, “இலங்கையில் இன்று வழிபாட்டுக்குத் தகுதியாக எஞ்சியிருக்கும் புராதனமான சைவசமயக் கட்டுமானங்கள் மூன்றே மூன்று தான். ஒன்று இரண்டாம் சிவாலயம் என்று இனங்காணப்படும் பொலனறுவை வானவன் மாதேவீச்சரம்; இரண்டாவது திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்; மூன்றாவது சிலாபம் முன்னேச்சரம். மூன்றிலும் திருக்கோவிலும் முன்னேச்சரமும் தான் இன்றும் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த இரண்டில் கூட திருக்கோவிலே பழைமையானது.” என்றேன். அவன் “போடா” என்றான். “பொலனறுவையும் முன்னேச்சரமும் சரி. திருக்கோயில் எப்பிடி பழைய கோயிலெண்டு சொல்லுவாய்?” என்று கேட்டான். “கோட்டை, கண்டி மன்னர்களுடன் தொடர்புறும் வரலாறு அதற்கும் உண்டு.” நான் ஊர்ப்பற்றால் மிகைப்படுத்திப் பேசுகிறேன் என்ற அவநம்பிக்கை, அவன் முகத்தில் தெரிந்தது. “திருக்கோயில் மட்டக்களப்பெல்லோ? அங்கெப்பிடி கோட்டை – கண்டி மன்னனெல்லாம் வந்திருப்பான்?”

நம் கோவில் கட்டிடக்கலையில் காலத்தை ஓரளவு கணிப்பதற்கான அமைப்பு ஒன்று இருக்கிறது. அதன் பெயர் போதிகை. கருவறைச் சுவரில் பாதி புதைந்தது போன்ற தூண்களைக் கண்டிருக்கிறீர்களா? பாதி மறைந்திருப்பதால், அவற்றுக்கு ‘அரைத்தூண்’ என்று பெயர். இந்த அரைத்தூண்கள், சுவரின் மேற்பகுதியைச் சேரும் புள்ளியில் அமைந்திருக்கும் அலங்கார அமைப்பு தான் போதிகை. போதிகைகளை வைத்து, அவை எந்த மன்னர் காலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் என்று காலத்தைக் கணிக்கமுடியும்.

திருக்கோவிலின் கருவறைச் சுவரில் தென்படுபவை, முதலாம் இராஜராஜரால் (கி.பி 985 - 1014) அறிமுகப்படுத்தப்பட்ட வெட்டுப்போதிகைகள். அவை பிற்காலச் சீமெந்துப் பூச்சால் மழுங்கடிக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றில் மலர் அலங்காரம் இருந்ததா என்று தெரியவில்லை. அப்படி இருந்தால் அவை இரண்டாம் இராஜராஜர் (கி.பி 1146 - 1173) காலத்துக்குப் பிந்தியவை. ஆனால், முன்னேச்சரத்தில் இருப்பவை, விஜயநகரப் பேரரசின் (கி.பி 1336 - 1646) கலைப்பாணியில் அமைக்கப்பட்ட பெரிய பூமொட்டுப் போதிகைகள். ஆக, போதிகைகளின் அமைப்பின் மூலம், திருக்கோவிலின் இன்றைய கட்டுமானம், முன்னேச்சரத்தின் இன்றைய கட்டுமானத்தை விடப் பழையது என்பது நிரூபணமாகிறது.

எவ்வாறெனினும் போதிகைகளை வைத்துக் காலத்தைக் கணிக்கும் போது, நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது. அவற்றை அறிமுகப்படுத்தியவன் குறிப்பிட்ட மன்னனாக இருக்கலாம் என்று ஊகித்தாலும், அவனது காலத்திலேயே இது நிச்சயமாக எழுந்தது என்று கூறமுடியாது. அதே கலைப்பாணியில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் கூட ஒரு கோவிலைக் கட்டிவிட்டு, இது அந்த மன்னன் அமைத்தது என்று வாதாடலாம் அல்லவா? எனவே கோவிலின் ஏனைய கட்டுமானங்களையும் சேர்த்தே ஆராயவேண்டும். அந்த வகையில், பேராசிரியர்.கா.இந்திரபாலா, பேராசிரியர்.எஸ். பரணவிதான, பேராசிரியர்.சி.பத்மநாதன், என்று நிறையப்பேர் நமக்கு உதவிக்கு வருவதால், திருக்கோவில் கட்டுமானம், கி.பி 13ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது தான் என்று சொல்வதில் நாம் இறும்பூது எய்தலாம்.

அது இருக்கட்டும். திருக்கோவிலுடன் கோட்டை – கண்டி மன்னர் உறவு பற்றி பிறகொருமுறை பார்க்கலாம். திருக்கோவிலை ஆவணப்படுத்திய ஒரு ஒல்லாந்தரை, ஒரு போர்த்துக்கேயரை கடந்த வாரங்களில் பார்த்தோம். இந்த வாரம் நாம் பார்க்க இருப்பது ஒரு பிரித்தானியரை. பெயர் தோமஸ் கிறிஸ்ரி. பிரித்தானிய ஆளுநரான பிரடரிக் நோர்த், 1803ஆமாண்டு திருக்கோணமலையிலிருந்து கிழக்குக் கரையோரமாக மாத்துறைக்குப் பயணித்த போது, அவரோடு உதவியாளராகச் சென்றவர் இவர். 1803ஆமாண்டு மே 6ஆம் திகதியிட்ட அவரது நாட்குறிப்பில் பின்வரும் வரிகள் இருக்கின்றன.

“காலை ஐந்து மணிக்கு கருங்கொட்டித்தீவிலிருந்து புறப்பட்ட நாங்கள், ஏழே கால் அளவில் திருக்கோவிலை அடைந்தோம். இந்தப் பயணத்தின் முதல் அரைவாசித்தூரம் சிறிது விவசாயம் செய்யப்படும் திறந்தவெளியாகவும், அடுத்த அரைவாசித்தூரம் கடற்கரை ஓரமாகவும் அமைந்தது. ஒரு அளவான கிராமமான திருக்கோவிலில் மிகப்பழைமைவாய்ந்த இந்துக் கோவில் ஒன்று அமைந்துள்ளது. சுண்ணம் மற்றும் செங்கல்லால் கட்டப்பட்ட இக்கோவில் ஓரளவு பெரியது. பழைமை வாய்ந்தது. ஆனால் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதன் சுவரில் பல வகையான தேய்ந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. அதைச்சுற்றியுள்ள இரு வீதியிலும் நாங்கள் நடந்தோம். ஆனால் கோவிலுக்குள் நுழைய எங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. வீதிக்கு வெளியே ஒரு குடிலில் வைக்கப்பட்டிருந்த சுவாமியின் தேரில் இயற்கைக்கு மாறான பல மரச்சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன.”

இந்த விவரணத்தில் ‘கருங்கொட்டித்தீவு’ என்று சொல்லப்படுவது, இன்றைய அக்கரைப்பற்று நகர். திருக்கோவிலின் விமானம் பழுதடைந்து செங்கல் – சுண்ணம் என்பன வெளித்தெரிவதையும், சிற்பங்கள் தேய்ந்து போய் ஒழுங்கற்ற நிலையில் இருப்பதையும் தோமஸ் கிறிஸ்ரி அவதானித்திருக்கிறார் என்பது இருநூறு ஆண்டுகளுக்கு முன் திருக்கோவில் எப்படி இருந்திருக்கிறது என்பதைச் சொல்லப்போதுமானதாக இருக்கிறது. ஆனால் அங்கு தேரோட்டம், உற்சவம் எல்லாம் குறைவின்றி இடம்பெற்றிருக்கிறது என்பதற்கான ஆதாரம், அவர் குறிப்பிடுகின்ற தேர். அந்தத் தேரைக் காணும் பேறு நமக்கு இன்று கிடைக்கவில்லை.




இந்த இடச்சு – போர்த்துக்கேய – பிரித்தானிய சான்றுகளோடு ஐரோப்பிய ஆவணங்களை மூட்டை கட்டி வைத்துவிடுவோம். சொல்லுங்கள், நம்மிடம் திருக்கோவில் பற்றிய என்னென்ன ஆவணங்கள் இருக்கின்றன? உப்புச்சிரட்டைக்குள் தான் தலையைப் புகுத்தவேண்டும். சத்தியமாக இன்று ஒன்றுமே இல்லை. 2004 கடற்கோள், காணாமல் போதல் என்று கோவில் தொடர்பான பெறுமதி மிக்க நிறைய ஆவணங்கள் இன்று இல்லாமல் போய்விட்டன. ஆபத்பாந்தவனாக ஒரேயொருவர் கைநீட்டுகிறார். உண்மையில் அவருக்குத் கோவில் அருங்காட்சியகத்தில் ஒரு சிலை அமைத்துக் கும்பிட்டாலும் தகும். அன்னார் அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த பெருமகனார் அமரர்.சி.கணபதிப்பிள்ளை.

அவரது “பூர்வீக சப்தஸ்தலங்கள்” என்ற நூல் இன்று கிடைக்காவிட்டால், மிக அருமையான வரலாற்றுத் தகவல்களை இழந்திருப்போம். கி.பி 1803இற்கும் 1820இற்குமிடையே திருக்கோவிலில் இடம்பெற்ற ஒரு கொள்ளைச்சம்பவம் முறியடிக்கப்பட்டதையும், அதில் மீட்கப்பட்ட பெருமளவு செல்வங்களையும் ஒரு ஏட்டுச்சுவடியில் கண்டபடி அப்படியே பதிவுசெய்திருக்கிறார் அவர். 1823இல் கோவிலில் ஒரு தீவிபத்து இடம்பெற்றதையும், 1826 நவம்பர் 06ஆம் திகதி, குடமுழுக்கு இடம்பெற்றமையும், 1851 ஒக்டோபர் 30ஆம் திகதி இன்றுள்ள மகாமண்டபம் கட்டிமுடிக்கப்பட்டதும் அவரது நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

“சுத்துப்பட்டு எட்டுக்கிராமத்துக்கும் நாட்டாமையாக” இருந்தவர்கள் பற்றி தமிழ்த் திரைப்படங்களில் கேள்விப்பட்டிருப்பீர்கள். நமது சித்திரவேலாயுதனும் அப்படி பெரிய நிலப்பரப்புக்கு ‘நாட்டாமை” தான். அதனால் தான் சுத்துப்பட்டு எட்டுப்பகுதியை – சுற்றியுள்ள எட்டுப்பற்றுக்களை - ஆள்கின்ற அவன் கோவில் தேசத்துக்கோவில் ஆனது. இன்று மட்டக்களப்பு, அம்பாறை என்று இரு மாவட்டங்களாகப் பிரிந்துள்ள பழைய மட்டக்களப்புத் தேசம், பதினொரு பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றில், ஏறாவூர், மண்முனை, போரதீவு, எருவில், கரைவாகு, சம்மாந்துறை, அக்கரை ஆகிய ஏழு பற்றுக்களே காலனிய ஆட்சியில் மட்டக்களப்பு என்று குறிப்பாக அறியப்பட்டன. பாணமை, நாடுகாடு, கோரளை, விந்தனை ஆகிய எஞ்சிய நான்கு பற்றுகளும் மட்டக்களப்பின் ஆட்சியின் கீழேயே வந்தாலும், சனச்செறிவு மிக்கவையாக முற்சொன்ன ஏழு பற்றுகளே விளங்கின. அந்த ஏழு பற்றுகளில் ஏறாவூர்ப்பற்றைத் தவிர்த்து, நாடுகாடுப்பற்றையும் பாணமைப்பற்றையும் சேர்த்து, திருக்கோவிலை தேசத்துக்கோவிலாகக் கொண்டாடியவர்களாக “மட்டக்களப்பு எட்டுப்பகுதி மக்கள்” என்று அறியப்பட்டார்கள்.

மட்டக்களப்பு எட்டுப்பகுதி மக்கள் ஒன்றுகூடி 1870இல் இங்கு தேரோட்டத் திருவிழா செய்திருக்கிறார்கள். 28.12.1952 திகதியிட்ட கோவில் ஆவணமொன்றில், அவ்வாறு திருக்கோவிலில் உரிமை கொண்டாடிய இந்த எட்டுப்பகுதியைச் சேர்ந்த முப்பது வட்டாரங்கள் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. பாணமை, பொத்துவில், கோமாரி, திருக்கோவில், தம்பிலுவில், தம்பட்டை, பனங்காடு, கோளாவில், அக்கரைப்பற்று, பனையடிப்பிட்டி, மல்வத்தை, அம்பாறை, மல்லிகைத்தீவு, சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருதூர், கல்முனை, சவளக்கடை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, பெரிய நீலாவணை, மகிழூர், எருவில், களுதாவளை, பெரிய போரதீவு, கோவிற்போரதீவு, பழுகாமம், வெல்லாவெளி, நாவற்குடா என்பவை அவை. கிழக்கிலங்கையின் குடித்தொகைப் பரம்பல் தொடர்பாகவும், இந்த வட்டாரத்தகவல் இன்னொரு விதத்தில் மிக முக்கியமான ஆவணமாக விளங்குகின்றது. உதாரணமாக இன்று - வெறும் அறுபதாண்டுகளில் - பனையடிப்பிட்டி என்ற ஒரு ஊரே இல்லை. பின்னாளில் மீனோடைக்கட்டு என்று அறியப்பட்டு, இன்று அடியோடு

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# புதியதொரு வீடு : புதியதோர் உலகம் படைக்கட்டும்

## அரங்க ஆய்வுகூடமும் எங்கள் ஆசான் அரங்கியல் கலைப்பீடமும் இணைந்து வழங்கிய புதியதொரு வீடு நாடகம் பற்றிய ஒரு பார்வை

குளிரூட்டப்பட்ட திரையரங்கில் ரஜினியின் "காலா" திரைப்படத்தை ஓட்டுவதற்கே கஸ்டப்படும் காலத்தில், பள்ளிக்கூட மாணவர்களைக் கொண்டு நாற்பதுகளில் நடந்த கதையை வைத்து, குளிரூட்டிகள் இல்லாத மண்டபத்தில், அதுவும் சில நிமிடங்களாவது மின் விசிறி கூட இல்லாமல், நாடகம் போட வைத்ததே பேராசிரியர் மௌனகுருவின் சவால் குணத்தைக் காட்டுகின்றது.

ஆனால், எல்லோரும் நேரத்துக்கு வரவேண்டும், இல்லாவிட்டால் அரங்கின் கதவு அடைத்துவிடும் என்ற அறிவிப்பும், நேரம் தாழ்த்தி வந்து, இடம் கிடையாமல் நின்றவர்கள், 'நிலத்தில் இருந்து பார்க்க வேண்டும் அல்லது வெளியே போய், அடுத்த காட்சிக்கு வரலாம்' என்று மேடையில் அறிவித்தது, அவரது வித்தகச் செருக்கு.

நான் நாடகம் பார்க்கச் சென்ற வேளை காலைக்காட்சி, மாணவர்களுக்கானது. பார்வையாளர்களான மாணவர்களை ஒருநிலைப்படுத்தி நாடகத்தை பார்க்க வைப்பதே அங்கு பெரும் சவாலாகத்தான் இருந்தது.

மகாகவியின் கதை எழுதப்பட்டது 1970களில். தொடர்புகள் குறைந்த காலம். கதையும் கொஞ்சம் மாணவர்களுக்கு மாணவ நடிகர்கள் நல்ல முதிர்ச்சியுடன் மேடையில் வாழ்ந்தனர். கறுப்பு ராஜா சிவப்பு ரோஜா என்ற சீரியஸான நாடகத்தை எழுபதுகளின் இறுதியில் பார்த்ததற்குப் பிறகு சீரியஸான ஒரு நாடகத்தை, அதுவும் மாணவர்களின் நாடகத்தை நான் மட்டக்களப்பில் பார்த்தது இதுதாம் இரண்டாவது தடவை. ( அது எனது தவறு. நான் ஊரில் இருக்க முடியாமல் ஓடியது காரணம்).

கதாநாயகன் மேடைக்கு ஏற்ற முகவாகைக் கொண்டவர். பளிச்சென்று அழகாகத் தெரிந்தார். (அவருக்கான ஒலிபெருக்கி இன்னும் கொஞ்சம் சீர் செய்யப்பட வேண்டும். அவரது குரலுக்கு அது கொஞ்சம் சுருதி பேதம் காட்டியது.) அவர் சிரித்த நேரம், பயந்த நேரம், அதிர்ந்த நேரம், அழுத நேரம் அனைத்தையும் பளிச்சென்று வெளிப்படுத்தினார். நாடக இயக்குனர்கள் கவனிக்கவும்.

கதாநாயகி, ஆனந்தராகம் படத்தில் வந்த ராதா மாதிரி தெரிந்தார். அழகை முகத்தினுள் அடக்கி வைத்திருந்தார். அதேபோல அழுகை மற்றும் சிரிப்பு, கொஞ்ச நேர சிருங்காரம் எல்லாவற்றையும் அடக்கியே வைத்திருந்தார். ஆனால் இந்த நாடகத்துக்கு இவையெல்லாம் அவருக்கு பொருந்திப் போயின. இவர்களின் மகனாக

சமயங்கள் அதிகம். இவர்களை இந்த நாடகத்தில் வெறும் கருவேப்பிலையாக மாத்திரம் கொள்ள முடியாது. பல இடங்களில் நாடகத்தை தூக்கிப் பிடித்தவர்கள் இவர்கள்.

மேடையலங்கார யுக்திகளும் சிறப்பாகவே இருந்தன.



ஒலி, ஒளி அமைப்புக்கள் இன்னும் நிறைய முன்னேற வாய்ப்பு இருக்கின்றது. நாடகத்தில் ஒலி, ஒளி அமைப்பு ஒரு தனிக்கலை. அதிக நாடகங்கள் தொடர்ச்சியாக வரும் போதுதான் அவையும் நிறைய முன்னேற முடியும். ஆனாலும்

அவர்கள் சோடைபோகவில்லை. பின்னணி பாடியவர்களில் கோரஸ் பாடியவர்கள் மைக்கை நடுவில் வைத்துப் பாடவேண்டும். சில சமயங்களில் ஒருவரின் குரல் மாத்திரம் தூக்கலாக கேட்க ஏனையவர்களுடையவை தூரக் கேட்டன.

நடிகர்கள் எல்லோரும் முன்னர்

**பூபாலரட்ணம் சீவகன்**

சொன்னதுபோல முதிர்ச்சியுடன்

சிறிது நேரத்துக்கு பின்னர் கதை எழுதிய மகாகவியோ அல்லது பேராசிரியர் மௌனகுருவோ கண்ணில் தெரியவில்லை. அந்த மீனவக் குடும்பமும், அதன் சோகமும், கொஞ்சம் வித்தியாசமான காதலும், அதுபடுத்தும் பாடும், அவற்றில் இருந்து அவர்கள் தப்பிக்க அவர்கள் போராடுவதுந்தான் பெரிதாக மனதை பாதிக்கத் தொடங்கிவிட்டன.

நாடகம் முடிந்து வெளியே வந்தபோது 80 களில் ராஜேஸ்வரா தியேட்டரில் மெட்னி காட்சி பார்த்துவிட்டு வெளியே வந்த உணர்வுதான் இருந்தது. அந்த கதாநாயகியும், இரு கதாநாயகர்களும் அவர்களின் சோகமும்தான் இந்த குறிப்பை எழுதும்

**மகாகவியை, மௌனகுருவை மறைத்து, நெஞ்சில் நிழலாடும் நடிகர்கள்**

(தற்கால சுப்பர் ஹீரோக்களுக்கு பழக்கப்பட்ட மாணவர்களுக்கு) கனதியானது. கொஞ்சம் தவறினாலும் விரசமாகிவிடக் கூடிய கதை. அதிலும் நடித்தவர்கள் மாணவர்கள். அவர்கள் தம்மை அடையாளப் படுத்திக்கொண்டது கூட தமது பள்ளிக்கூடங்களின் ஊடாகத்தான். அதுவே இப்போதைக்கு அவர்களுக்கு அடையாளம். ஆனால், அவர்களிடம் ஒரு முதிர்ச்சி தெரிந்தது. உறவு முறைகளுக்குள் நடந்த ஒரு விபத்தால் ஏற்பட்ட விளைவுகள், உணர்வுச் சிக்கல்கள் குறித்த கதை, எந்த இடத்திலும், விரசத்தில் சிக்கிவிடாமல் கதை கவனமாக நகர்ந்தது. ஆனால், அங்கு தவறு ஏதும் நடக்காமல் இருந்ததற்கு கதையை



எழுதிய மகாகவியோ அல்லது பேராசிரியர் மௌனகுருவோ மாத்திரந்தான் காரணம் என்று கூறிவிட்டு என்னால் சென்றுவிடவும் முடியவில்லை.

வந்த சுள்ளான் நல்ல சுட்டியாகத் தெரிந்தான்.

மைத்துனனாக வந்த நடிகர் தனது பங்கை சரியாகச் செய்தார். வயதான ஜோடியும் அப்படித்தான். கிழவி எவ்வளவு வெடுக்கென்று சிரிக்கிறாரோ, கிழவர் அடக்கமாக வாசிக்கிறார்.

இவர்கள் மாத்திரமல்ல, நாடகம் தொடங்கி முடியும் வரை மேடையிலேயே இருந்து, சிறு நண்டு பாட்டுப் பாடி, நாயாக குரைத்து, குயிலாகக் கூவி, வானொலியாக ஒலித்த அந்த பத்துப் பேரும் நாடகத்துக்கு பெரும் பலம். நாடகக் காட்சிகளின் மாற்றத்துக்கு

இவர்களின் பங்களிப்பு மிகச் சிறப்பு. அதுமாத்திரமல்ல, காட்சிகள் தொய்ந்துபோக எத்தனித்த போது குறுக்காக இவர்கள் வந்து அதனை தூக்கி விட்டு ஓடிய



காணப்பட்டனர். மௌனகுரு சேரின் கைவண்ணம் என்று நினைக்கிறேன். மௌனகுரு சேர் மாத்திரந்தான் சிறு பையன் போல அங்கும் இங்கும் பதற்றத்துடன் ஓடி ஓடி ஏற்பாடுகளை கவனித்துச் சென்றார். டியூஷன் வகுப்புகள் போன்ற பலவித சிக்கல்களுக்கு மத்தியில் இவர்களை ஒன்று சேர்ப்பதே சிரமமாக இருந்ததாக அவர் கூறினார். இவர்களை இப்படியாக கூட்டி பயிற்றுவிக்க ஏற்பாடு செய்த மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் பாஸ்கரன் பாராட்டுதலுக்குரியவர்.

எனக்கு என்னமோ நாடகம் தொடங்கி

வரை நெஞ்சில் ஆடிக்கொண்டிருக்கின்றன. இது 70களின் இறுதியில் மீனவர் காதலைச் சொல்லும் ஆனந்தராகம் படம் பார்த்துவிட்டு வந்து இரு நாட்களுக்கு இருந்த உணர்வு. வேறு சிலருக்கு இது செம்மீன்கள் பார்த்த உணர்வை தந்திருக்கலாம். அவரவர் ரசனையைப் பொறுத்தது இது. இதுதான் இந்த நாடகத்தைத் தந்த இளைஞர்களின் இப்போதைக்கான வெற்றி என்று நினைக்கிறேன். புதியதொரு வீடு புதியதோர் உலகம் படைக்கட்டும். காத்திருப்போம்!



# நடந்தாய் வாழி களனி கங்கை ...... அங்கம் 06

## முகத்துவாரத்தில் குடியிருக்கும் ஆனைக்குட்டி சாமியார்

உலகம் தோன்றியது முதல் சாமியார்களும் தோன்றிவிட்டனர். இவர்கள் தான் சமயங்களையும் தோற்றுவித்தவர்கள். முற்றும் துறந்த துறவிகளையே சாமியார்கள் என அழைக்கின்றோம். யேசுவும் புத்தரும் அவர்களின் பின்னர் தோன்றிய அவர்களின் மார்க்கத்தை பரப்பியவர்களும் சாமியார்களானார்கள். புத்தசமயத்தில் அவர்களை பிக்குகள் எனவும், கத்தோலிக்க சமயத்தில் சாமியார், அருட் தந்தை, அருட் சகோதரர் எனவும் அழைக்கிறார்கள்.

இந்து சமயத்தில் தோன்றிய பல சாமியார்களும் முற்றும் துறந்த முனிவர்கள் போன்று ஆசா - பாசங்களை புறம்ஒதுக்கிவிட்டு, சித்தம்போக்கு சிவன் போக்கு என வாழ்ந்து முத்தியடைந்துள்ளனர்.



**பொன்னம்பலவானேசர் கோயில்**

இக்காலத்தில் காவியுடுத்த பல போலிச்சாமியார்களும் மக்கள் மத்தியில் வலம் வருகின்றனர். இவர்களின் லீலைகள் ஊடகங்களில் செய்தியாகவும் காணொளிகளாகியும் இருக்கின்றன.

களனி கங்கை இலங்கைத்தலைநகரில் கடலுடன் சங்கமிக்கும் முகத்துவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீவெங்கடேஸ்வரா மஹா விஷ்ணு தேவஸ்தானம், சிவாலயமான அருணாசலேஸ்வரர் ஆலயம், காளி அம்மன் ஆலயம் என்பனவற்றின் வரலாற்றின் பின்னணியில் ஐதீகக்கதைகள் பலவுள்ளன.

முன்னொரு காலத்தில் இந்தப்பிரதேசத்தில் வாழ்ந்த ஆனைக்குட்டிச்சாமியாரின் சமாதி இங்குதான் அமைந்துள்ளது எனவும் கூறப்படுகிறது. இந்தச்சாமியார் சித்துவிளையாட்டுக்களும் செய்வார் எனவும், நிஷ்டையில் ஆழ்ந்து யோக நிலையிலுமிருப்பார் எனவும் சொல்வார்கள்.

முற்காலத்தில் தோன்றிய ஆலயங்கள் பெரும்பாலும் கங்கைக்கரைகளில் அல்லது குளம் - கேணிகள் - கடற்கரையோரங்களில்தான் எழுந்தருளியிருக்கின்றன.

திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், திருச்செந்தூர் முருகன், தொண்டமனாறு செல்வச்சந்நிதி, மாணிக்க கங்கை கரையிலிருக்கும் கதிர்காமம் முதலானவற்றை உதாரணமாகக் கூறலாம்.

கொழும்பு முகத்துவாரத்தில் களனியும் கடலும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள ஆலயத்தின் வரலாற்றின் பின்னணியில் இலங்கையில் புகழ்பூத்த ஒரு குடும்பத்தினரும் இருக்கிறார்கள்.

சேர். பொன்னம்பலம் அருணாசலம் என்ற பெரியவர் பற்றி அறிந்திருக்கின்றோம். இவரது முயற்சியால் இலங்கையில் பல பணிகள் நடந்திருக்கின்றன. யாழ்ப்பாணம், மானிப்பாயில் பொன்னம்பலம் முதலியார் - செல்லாச்சி தம்பதியரின் மூன்றாவது மகனாக 1853 ஆம் ஆண்டில் பிறந்தவர். இவரது அண்ணன்தான் சேர். பொன். இராமநாதன். இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றிருக்கும் அருணாசலம், சட்டத்துறையில் நூல்களும் சமய இலக்கிய நூல்களும் எழுதியிருக்கிறார். நீதியரசராக பணியாற்றியவர். இவரது சேவைக்கு இங்கிலாந்து ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் பக்கிங்ஹாம் மாளிகையில் சேர் பட்டம் வழங்கினார்.

இலங்கை தேசிய காங்கிரஸ் என்னும் இயக்கத்தை 1919 இல் தொடக்கியவர். அதன் பின்னர், தமிழர் மகாஜனா அமைப்பையும் தோற்றுவித்து அதன் தலைவரானார்.

1924 ஆம் ஆண்டு, தனது 71 வயதில் மதுரையில்தான் மறைந்தார். இவரது மகன்தான் பின்னாளில் இலங்கை அரசியலில் பிரபலம் பெற்ற அருணாசலம் மகாதேவா.

கொழும்பு காலிமுகத்தில் அமைந்துள்ள பழைய நாடாளுமன்றமாகவும் தற்போதைய ஜனாதிபதி செயலகமாக அமைந்துள்ள கட்டிடத்தின் முன்பாக சேர். பொன். இராமநாதன் - சேர். பொன். அருணாசலம் ஆகியோரின் சிலைகளைப்பார்க்கலாம்.


பேராதனை பல்கலைக்கழகத்தில் ஒரு மண்டபத்திற்கும் அருணாசலம் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கொழும்பு கொச்சிக்கடையில் அமைந்துள்ள ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலயத்திற்கும் முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கும் இராமநாதன் - அருணாசலம் சகோதரர்களே முன்னர் அறங்காவலர்களாக இருந்தார்கள்.

இன்று இந்த ஆலயங்கள் சமயத்திற்கு மாத்திரமின்றி அரசியலுக்கும் முக்கியத்துவம் பெற்றிருப்பதை ஊடகங்களில் பார்க்கின்றோம்.

இலங்கையில் தேர்தல்கள் நடந்து வெற்றிபெறும் தமிழ் - சிங்கள அரசியல் பிரமுகர்கள் இந்த ஆலயங்களுக்கு வந்து பூசை செய்து, பிரசாதமும், பொன்னாடைகள், மாலைகள் பெற்றுச்செல்வதை அவதானித்திருப்பீர்கள்.

அவர்களுக்கு அரசியலில் ஏதும் பாதிப்பு ஏற்பட்டாலும் அவர்கள் முதலில் ஓடிவருவது இந்த ஆலயங்களுக்குத்தான். சில வருடங்களுக்கு முன்னர், பொது எதிரணியினர் பந்துல குணவர்தன தலைமையில் வந்து முகத்துவாரம் காளி கோயிலில் கற்பூரம் கொளுத்தி தேங்காய்



**Sir Ponnambalam Arunachalam**

உடைத்து தற்போதைய நல்லிணக்க அரசுக்கு எதிராக பிரார்த்தனை செய்தனர்.

சரத் பொன்சேக்கா சிறையில் அடைக்கப்பட்டிருந்த தருணத்தில் அவரது மனைவி அனோமா பொன்சேக்காவும் இதே காளி கோயிலுக்கு வந்துதான் அன்றைய அரசுக்கு எதிராக தேங்காய் உடைத்து பிரார்த்தனை செய்தார்.

அங்கு எழுந்தருளியிருக்கும் காளி அம்மன் இவ்வாறு எத்தனைபேரின் பிரார்த்தனைகளைத்தான் செவிமடுப்பார்!?

2008 ஆம் ஆண்டு பிறந்தவேளையில் கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசர் ஆலயத்திற்கு பிரார்த்தனை செய்யவந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்து கலாசார அமைச்சருமான மகேஸ்வரன் இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

**ரஸஞானி**

இயற்கை மரணமோ, செயற்கை மரணமோ, தற்கொலை மரணமோ எது நடந்தாலும் மரணித்தவரின் உடல் தகனம் செய்யப்பட்டதும், களனியும் கடலும் சங்கமிக்கும் முகத்துவாரத்தில்தான் அவர்களின் அஸ்தி கரைக்கப்படுகின்றது.

இவற்றை இங்கு எழுந்தருளும் தெய்வங்களும் முகத்துவாரமும் பார்த்துக்கொண்டுதானிருக்கின்றன. அவற்றுக்கு பேசும், எழுதும் சக்தியிருக்குமானால் எமக்குத்தெரியாத இன்னும் பல கதைகளை நாம் தெரிந்துகொள்ளமுடியும்.

( தொடரும்)

# சேனையூர் வர்ண குளப் பிள்ளையார் கோயில் வருடாந்த கொடியேற்ற திரு விழா

(சேனையூர் நிருபர்)



தொல்லியல் வரலாறு மிக்க சேனையூர் கிராமத்தில் அமைந்துள்ள சேனையூர் வர்ணகுலப் பிள்ளையார் ஆலயம் நீண்ட வரலாறு கொண்டது. இலங்கையில் செப்புப் பட்டயம் உள்ள ஆலைய சாசனங்கள் மிகக் குறைவு. அந்த வகயில் ஐநூறு வருடகளுக்கு முந்தய செப்புப்பட்டயம் இந்த ஆலையத்தின் வரலாற்று பழமையை சொல்லி நிற்கிறது. 1897 ஆம் ஆண்டு முதல் குட முழுக்கு கண்ட இந்த ஆலையம் வர்ணகுலத்தாரின் மரபு முறைமைகளையும் அதன் பழமையயையும் பேசுகிறது.

முத்துலிங்க சுவாமியால் கண்டறியப்பட்ட முனிவர்கள் ஆசிகள் பெற்ற சித்தர் பரம்பரையுடன் தொடர்புபட்ட ஆலயம்.
வருடாந்த திருவிழா 21.06.2018 வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒன்பதாம் திருவிழா தேரோட்டத்துடனும் பத்தாம் நாள் தீர்த்தோற்சவத்துடனும் நடைபெற்று பதினொராம் நாள் பூங்காவனத் திருவிழாவோடு முடிவடைகிறது.









விளம்பர அனுசரணை
அமரர் க. சந்திரசேகரம் குடும்பத்தினர்
3ஆம் குறுக்குத்தெரு, கல்லடித்தெரு, மட்டக்களப்பு






# சாதி என்பதே தமிழ்ச் சொல் அல்ல! தமிழருக்குள் சாதி ஒரு வந்தேறுகுடி!

இந்துக்களைப் பொறுத்தவரையில் அங்கிங்கு எண்ணாதபடி எங்கும், எல்லாவற்றிலும், நீக்கமற நிறைந்திருக்கும் சாதியானது தமிழர்களையும் விட்டுவைக்கவில்லை. “இப்போதெல்லாம் யார்தான் சாதி பார்க்கிறார்கள்” என்று மேம்போக்காகப் பேசுபவர்களின் முகத்திலடித்தாற்போல இந்தக் கிழமை நடைபெற்ற கச்சநந்தம் சாதிய வன்முறையும் (சிவகங்கை மாவட்டம்-தமிழகம்), யாழில் வரணி அம்மன் தேரினை கனரகப் பொறி மூலம் இழுத்த நிகழ்வும் காணப்படுகின்றன.

இவ்வாறு இன்று தமிழர்களைப் பிடித்தாட்டும் சாதியானது தமிழர்களிடம் தோன்றிய வரலாற்றினைப் பற்றிய ஒரு ஆய்வாகவே இக் கட்டுரை அமைகின்றது.

சாதியில்லாத சங்ககாலத் தமிழர்கள்:

--------------------------------------------------------------

சாதியானது தமிழர்களிடையே தொடக்கம் முதலே இருந்துவந்துள்ளதா? என்ற கேள்விக்கான பதிலினைப் பார்த்தால், இதற்கான பதில் என்பது சாதி என்ற சொல்லிலேயே உள்ளது. அதாவது சாதி என்ற சொல்லே தமிழல்ல. அது ஜாதி என்ற வடசொல்லின் கிரந்தம் நீக்கிய வடிவமே (ஜாதகம்- சாதகம் போன்று). ஜா என்பது ஜனனம் (பிறத்தல்) என்பதுடன் தொடர்புடையது. ஜாதி/ சாதி என்ற சொல் தமிழல்ல என்பது மட்டுமல்ல, அதற்கு இணையான தமிழ்ச்சொல் வேறு எதுவும் கூட வழக்கில் இல்லை(குலம், குடி போன்ற தமிழ்ச்சொற்களின் பொருளினைப் பின்பு பார்ப்போம்). தமிழிலுள்ள சாதி என்ற மற்றொரு சொல் உயர்திணையுடன் அறவே தொடர்பில்லை (சாதிமுத்து, சாதிமல்லி போன்றன).

சொல்லின் பொருளைப் பார்த்தோம், இப்போது இலக்கியச் சான்றுகளைப் பார்ப்போம். சாதி என்பது பிறப்பினடிப்படையிலானது என முன்னரே பார்த்தோம். இந்த நிலையில் பின்வரும் குறளினைப் பாருங்கள்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்” !!

இக்குறளானது பிறப்பினால் அனைவரும் ஒருவரே. பிறப்பில் வேறுபாடு இல்லை என்பதை உலகிற்கு உரக்க உரைத்திற்று. அடுத்ததாக சங்க இலக்கியத்தில் குறுந்தொகையிலுள்ள ஒரு பாடலைப் பாருங்கள்



“யாயும் ஞாயும் யாரா கியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்,
யானும் நீயும் எவ்வழி யறிதும்,
செம்புலப் பெயனீர் போல,
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே”

இப்பாடலானது தமிழர்களிடையே புறமணமுறை காணப்பட்டதனை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது. புறமணம் உள்ள ஒரு சமூகத்தில் சாதியமைப்பு இருப்பதற்கான சாத்தியமேயில்லை. இந்த ஒரு பாடல் மட்டுமன்றி சங்கப் பாடல்களில் பலவற்றிலும் ஒரு ஆயத்திலுள்ள தலைவியினை ஆயத்திற்கு வெளியேயிருந்து வரும் ஒரு



தலைவனே விரும்புகிறான். அதனால் சங்ககாலத்திலிருந்தது புறமணமுறையே என கா.சிவத்தம்பி “சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும்” எனும் நூலில் 85-86 பக்கங்களில் நிறுவுகிறார் .

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கீழடி அகழ்வாயில் இதுவரை கண்டு எடுக்கப்பட்ட 7000 இற்கும் அதிகமான பொருட்களில் ஒன்று கூட எந்தவிதத்திலும் சாதி - மதத் தொடர்புடன் காணப்படாமை இலக்கியச் சான்றுகளை மேலும் மெய்ப்பிக்கின்றது.

தமிழர்களிடம் சங்ககாலத்தில் காணப்பட்ட குலக்குழுக்கள் (tribes), குடிகள் என்பவற்றைச் சாதியுடன் போட்டுக்குழம்பத்தேவையில்லை ,

ஏனெனில் அவை உலகெங்கும் பழங்குடி மக்களிடையே காணப்பட்ட பிரிவுகள் போன்றனவையே. அவை பிறப்பு அடிப்படையையும் அகமணமுறையையும் சாதியைப்போன்று இறுக்கமாகக் கடைப்பிடிப்பனவல்ல. (எடுத்துக்காட்டாக நக்கீரப்புலவரிற்கோ புலவர் பணி தந்தைக்கோ கணக்காயர் பணி, புலவரான சீத்தலைச் சாத்தனாரின் தந்தை கூலவாணிகர்).

பறையன் என்ற குடி கூட அக்காலத்தில் இப்போதுள்ள சாதிப் பொருளில் குறிப்பிடப்படவில்லை. அப்போது அரசனின் செய்திகளை மக்களிடம் பறைதல் (சொல்லல்), போரில் பறை ஓசை எழுப்புவது மட்டுமல்லாமல் குடி காத்த மறவர்களும் அவர்களே, அவர்களல்லாமல் வேறு சிறப்பான குடியுமில்லை, அவர்களில் நடுகல்லான வீரர்கள் தவிர வேறு கடவுளேயில்லை என்கிறது புறநானூறு 335.

துடியன், பாணன், பறையன், கடம்பன்,
என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை;
ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி,
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து
வீழ்ந்தெனக்,
கல்லே பரவின் அல்லது,
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே.

இறுதியாக சாதியமைப்பு பேணப்படும் இடங்களிலெல்லாம் பெண்களிந் உரிமையும் மறுக்கப்பட்டேவரும். ஏனெனில் பெண்களைக் கட்டுப்பாட்டில் வைப்பதன் மூலமே காதல் போன்றவற்றைத் தவிர்த்து அகமணமுறையினைப் பேணலாம். சங்ககாலத்தில் பெண்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததை சங்ககாலப் புலவர்களில் குறைந்தது 36 பேராவது பெண்பாற் (வேறெந்த மொழியிலும் அக்காலத்தில் அவ்வாறில்லை) புலவர்களாகவிருப்பதும், ஔவை மன்னனுடன் சேர்ந்து கள்ளுண்டமை போன்ற நிகழ்வுகளிலும், கீழடி மட்பாண்ட எழுத்துக்களிலும் காணலாம் (மட்பாண்டங்களைப் பயன்படுத்துவோரே தமது பெயர் முதலானவற்றை அவற்றில் எழுதியிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் பெண்களே என்ற அடிப்படையில் பெண்களின் கல்வியறிவினை உய்த்துணரலாம்) .

இதுகாறும் சங்ககாலத்தில் தமிழரிடையே சாதிகள் இல்லை எனப் பார்த்தோம். சாதி என்ற சொல்லே சங்கமருவிய காலத்திலேயே முதன்முதலில் சிலப்பதிகாரத்தில் வர்ணங்களை குறித்தே வருகின்றது.
“நால்வகை சாதியும், நலம்பெற நோக்கி “ (வேனில்காதை41)
அடுத்ததாக மணிமேகலையில்
“நாமம் சாதி..கிரியையின் அறிவது ஆகும்.” (சமயக்கணக்கர்23)
இவ்வாறு சங்கமருவிய காலத்தில் தமிழரிடம் அறிமுகமாகும் சாதியானது எங்கிருந்து வந்தது என இனிப் பார்ப்போம்.

தமிழர்களிடம் எங்கிருந்து சாதி வந்தது?

--------------------------------------------------------------

பார்ப்பனர்களின் தமிழக வருகையுடனேயே சங்கமருவிய காலத்தில் சாதி வருகின்றது. பார்ப்பனர்களிடமும் முதலில் வர்ணங்களே தோன்றுகின்றன. இதனை ரிக் வேதம் புருச சூத்திரம் மூலம் அறிந்துகொள்ளலாம். வர்ணங்கள் எவ்வாறு சாதியாக மாறுகின்றது என்பதனை அம்பேத்கார் சிறப்பாக Revolution and Counter-Revolution in Ancient India, Annihilation of Caste எனும் நூல்களில் விளக்கியிருப்பார். வர்ணங்கள் மேலும் பிரிவுகளாகப் பிளவுற்ற பின் ஜாதி என்ற சொல் முதன்முதலில் பகவத்கீதையில் (1: 42) “ உத்ஸாதயந்தே ஜாதி தர்மா சாஸ்வத” என வருகின்றது. இவ்வாறு வைதீக மதத்தினூடாகவே சாதி தமிழரிடையே புகுத்தப்பட்டது.

இப்போதெல்லாம் மதவாதிகளில் சிலர் பகவத்கீதை கூறும் வர்ணங்கள் ஜாதிகள் என்பன பிறப்பினடிப்படையிலானதல்ல அல்ல, அவை குணத்தினடிப்படையிலானவை எனப் புதிய விளக்கம் கொடுக்கிறார்கள். இதற்கு இவர்கள் காட்டும் சுலோகம் “குண-கர்ம விபாசக” (4-13) என்பதாகும். இங்குள்ள குண கர்ம என்பது சாதிக்கு விதித்த வேலையின் குணம் என்பதே. இதற்கு உரை எழுதிய ஆதிசங்கரரும் “ பிறப்பால்” என்றே எழுதியுள்ளார்.

கீதையின் 18 இயலின் 44-47 வது பாடல்களில் நாலு வருணங்களின் பெயர் குறிப்பிடப்பட்டு அவற்றிற்கான தொழில்களும் குறிப்பிடப்படுகிறது. கீதையின்படி ஒரு வர்ணத்தை சேர்ந்த ஒருவர் வேறு ஒரு தொழினை சிறப்பாக செய்வார் எனினும் தனது குலத்தொழிலினைவிட வேறு தொழில் செய்யக்கூடாது ((ஸ்ரோயான் ஸ்வ-தர்மா விகுண. பர தர்மாத் ஸ்வ-அனுஸ்திதா). மேலும் இன்னொரு சுலோகமானது (வர்ண சங்கரோ நரகாயைவ, பித்ரு லுப்த பிண்டோதம் க்ரியக) கலப்புமணம் செய்தால் பிண்டம் கூட உங்களிற்கு வந்து சேராது, நரகமே செல்வீர்கள் எனக் கூறுவது. இவற்றின் மூலம் கீதை சொல்வது பிறப்பினடிப்படையிலான, அகமணமுறையினை வலியுறுத்தும் சாதியமைப்பினையே என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு பார்ப்பனர்களினால் புகுத்தப்பட்ட வருணாச்சிர சாதியமைப்பினை எவ்வாறு நாம் ஒழிக்கலாம் எனப் பார்ப்போம்.

சாதி ஒழிப்பு:

--------------------------------------------------------------

சாதி ஒழிப்பின் முதற்படி தனது சொந்தச் சாதி மீதான பற்றை விட்டொழித்தலாகும். என்னதான் முற்போக்குப் பேசினாலும் பலரிற்கும் தமது சாதியினைப் பற்றி யாராவது குறைவாகக் கூறினால், உடனே சினம் வந்துவிடுகின்றது. இந்தச் சாதிப்பற்றை விட்டுவிடுவதுடன் தேவைப்படும் போதெல்லாம் தமது சாதியினை விமர்சிப்பதற்கும் தயாராகவிருப்பது சாதி ஒழிப்பின் முதற்படியாகும். சாதியின் வரலாறு, அதனூடான கொடுமைகள், அடுக்கின் மேலே பார்ப்பனியம் இருந்துகொண்டு ஏனையோரை தமக்கிடையே மோதவிடும் தந்திரம், தமிழர்களது விடுதலைக்கும் ஒற்றுமைக்கும் தடையாக சாதி செயற்படும் விதம், பெண்கள் மீதான சாதிய ஒடுக்குமுறைகள் என்பன பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவது இச் செய்முறையின் இரண்டாவது படிநிலையாகும்.

சாதியை வலியுறுத்தும் மத நம்பிக்கைகளை கேள்விக்கு உட்படுத்துவது (பார்ப்பனர்களின் கருவறைத் தீண்டாமை ஒழிப்பு உட்பட) இதன் அடுத்த படியாகும். இச் செய்முறையின் இறுதியானதும் முதன்மையானதுமாக புறமணமுறை (சாதி மறுப்புத் திருமணங்கள்) அமையும். இத்தகைய செயற்பாடுகள் மூலம் தமிழர்களின் தலையில் இடையில் சுமத்தப்பட்ட சாதிச்சுமையினை இறக்கிவைக்கலாம்.

இவ்வாறு சாதி ஒழிப்பு பற்றிய சிந்தனைகள் /உரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இதே காலப்பகுதியில், பாரிசாலன் போன்ற தமிழ்த்தேசிய சிந்தனைக் கோமாளிகள் சிலர் சாதி மூலம் “யார் யாரெல்லாம் தமிழர்கள்” எனக் கண்டுபிடிக்க முனைவதுதான் வேடிக்கை. சாதியே ஒரு வந்தேறியாகக் காணப்பட, அதனைக்கொண்டு இவர்கள் வந்தேறி மனிதர்களைக் (இவர்களுடைய மொழியில்) கண்டுபிடிக்கப்போவதாகக் கூறுவதனை என்னவென்று சொல்வது!.

நன்றி : இனியொரு



# பெண்ணின் பெயர் இல்லா திருமண அழைப்பிதழ் : இது பாகிஸ்தானில்

பாகிஸ்தானின் கைபர் பாக்துங்க்வா மாகாணத்தின் சார்ஷ்தா மாவட்டத்தை சேர்ந்த ரெள.்.ப் கான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறார். அவருக்கு திருமணமாகி ஒரு வருடம் ஆகிவிட்டது.



வெளிநாட்டில் பணிபுரியும் அவரது மனைவிக்கு, பாகிஸ்தான் மற்றும் பணிபுரியும் நாட்டில் வசிப்பதற்கான இரு நாட்டு குடியுரிமை இருக்கிறது. திருமணத்திற்கு பின் மனைவியுடன் வெளிநாட்டில் வசிப்பதுதான் அவர்களுடைய முடிவு. ஆனால் அதற்கான ஆவணங்களில் ஏற்பட்ட சிக்கல் கணவன் மனைவியை ஒன்று சேரவிடாமல் தடுக்கிறது.

விசா பெறுவதற்கு தேவையான ஆவணங்களில் திருமண அழைப்பிதழும் ஒன்று. ஆனால், ஆண் ஆதிக்க சமுதாயத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதில்லை. திருமண அழைப்பிதழில் மணமகனின் பெயர் இடம்பெறும். ஆனால் மணமகளின் பெயருக்கு பதிலாக, அவரது தந்தையின் பெயர் இடம்பெறும். அதாவது குறிப்பிட்ட ஒருவரின் மகளுக்கு திருமணம் என்பதுதான் திருமண அழைப்பிதழில் இடம்பெறும்.

திருமண அழைப்பிதழை பார்ப்பவர்களுக்கு அது அந்த தந்தையின் மூத்த மகளா, இளைய மகளா இல்லை இரண்டாம் தாரத்து மகளா என்பது தெரியாது. அது அவசியமும் இல்லை என்பதே அந்த பகுதியில் சம்பிரதாயமாக தொடர்கிறது.

ரெள.்.ப்பின் திருமண அழைப்பிதழிலில் அவரது பெயரும், அவரது மாமனாரின் பெயரும் இடம்பெற்றிருக்கிறது. மணப்பெண்ணின் பெயர் இடம்பெறாததால் விசா பெறுவதில் ஏற்பட்ட சிக்கல், தம்பதிகளை ஒன்றாக சேரவிடாமல் தடுக்கிறது.

நீங்கள் படித்தவர்தானே? அதிலும் உங்கள் மனைவி வெளிநாட்டில் வேலை செய்கிறார். ஏன் மனைவியின் பெயரை திருமண அழைப்பிதழில் போடவில்லை என்று கேட்டோம்.

சற்று சிந்தித்த பிறகு பதிலளிக்கும் ரெள.்.ப், சமூகத்தில் இருக்கும் வழக்கத்தை எப்படி மாற்றுவது என்று கேட்கிறார். எந்த குடும்பத்தில் இருந்து பெண் எடுக்கிறோம் என்பது தெரிந்தால் போதும், பெண்ணின் பெயரோ அடையாளமோ தேவையில்லை என்பது எங்கள் சமூகத்தின் வழக்கம். இதுபோன்ற சிக்கல்கள் ஏற்படும் என்று தோன்றவேயில்லை, தெரிந்திருந்தால் என் மனைவியின் பெயரை அழைப்பிதழில் போடச் சொல்லி கட்டாயப்படுத்தியிருப்பேன் என்று சொல்கிறார்.

மணமகளின் பெயர் மட்டுமல்ல, அவரது தாயின் பெயரும் திருமண அழைப்பிதழில் இடம்பெறாது என்கிறார் ரெள.்.ப். அதாவது இந்த ஆணின் மகளுக்கு திருமணம் என்ற அளவுக்கு மாத்திரமே தகவல் தெரிவிக்கப்படும். மூத்த மகளா, இளைய மகளா, மனைவியின் பெயர் என்ன, முதல் மனைவியா, இரண்டாவது மனைவியா என்ற தகவல்கள் யாருக்கும் தேவையற்றவை.

இதுபற்றி, பெஷாவரில் பிரிண்டிங் பிரஸ் நடத்திவரும் ஜாவேத் கானிடம் இதுதொடர்பாக பேசினோம். அச்சடிக்கப்படும் 80 சதவிகித திருமண அழைப்பிதழ்களில் மணமகளின் பெயர் இடம்பெறுவதில்லை

**‘பெண்ணின் அடையாளம் ஆணைச் சார்ந்தே இருக்கவேண்டும் என்ற ஆணாதிக்க சமுதாயத்தின் வெளிப்பாடுதான் இது’**

என்பதை அவர் ஒப்புக்கொள்கிறார்.



**சில இடங்களில் ஒரு பெண்ணின் அடையாள அட்டையில்கூட அவளது பெயர் இடம்பெறாது, தந்தை அல்லது கணவரின் பெயர்தான் இடம்பெறும்**



பரவாயில்லையே, மீதி 20 சதவிகித அழைப்பிதழ்களில் பெண்களின் பெயர் இடம்பெறும் அளவுக்கு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்று விசாரித்தோம். ஆனால் மிஞ்சியது ஏமாற்றமே. ஆங்கிலத்தில் அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்களில்தான் மணமகளின் பெயர் இடம்பெறும் என்று சொல்லும் அவர், அதுபோன்ற குடும்பங்கள் மெத்தப்படித்த குடும்பங்களாகவோ அல்லது நவீனமான, பணக்கார குடும்பங்களாகவோ இருக்கும் என்கிறார்.

ரெள.்.ப் பட்டப்படிப்பு படித்தவர், அவரது குடும்பத்தில் பலர் படித்தவர்கள். ஆனால், பெண்ணின் பெயர் அழைப்பிதழில் இடம்பெறுவது தரக்குறைவான செயல் என்ற எண்ணம் தொடர்வதை மாற்றமுடியவில்லை. சமூகத்தில் புதிய பழக்கத்தை அறிமுகப்படுத்துவதற்கு தயக்கம் இருப்பதை அவர் ஒப்புக்கொள்கிறார்.

இந்த மனநிலை குறித்து பெஷாவரில் தொலைகாட்சி நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஜீவத் பீப் என்ற பெண்ணிடம் பேசினோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தனக்கு திருமணம் நடைபெற்றதாக கூறும் அவர், தனது திருமண அழைப்பிதழில் தனது பெயர் இடம்பெற்றதாக சொல்கிறார்.

தந்தை அல்லது கணவரின் சொத்தாகவே ஒரு பெண் பார்க்கப்படுவதாகவும், பெண்ணின் அடையாளம் ஆணைச் சார்ந்தே இருக்கவேண்டும் என்ற ஆணாதிக்க சமுதாயத்தின் வெளிப்பாடுதான் இது என்றும் கூறுகிறார் ஜீவத்.

இதைவிட கொடுமையான விஷயம் என்னவென்றால், சில இடங்களில் ஒரு பெண்ணின் அடையாள அட்டையில்கூட அவளது பெயர் இடம்பெறாது, தந்தை அல்லது கணவரின் பெயர்தான் இடம்பெறும் என்று அவர் சொல்வதை கேட்கவே அதிர்ச்சியாக இருக்கிறது.

இந்த மனப்பாங்கை மாற்றுவது அவசியம் என்று கூறுகிறார் லீலி ஷா நவாஸ் என்பவர். ”பெண் என்பவர் ரத்தமும், சதையும் கொண்ட ஒரு ஜடப்பொருள் அல்ல; மனமும், உணர்வும், உணர்ச்சிகளும் கொண்ட, சக உயிர் என்பதை ஆண்களுக்கு உணர்த்த வேண்டும். அதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியது காலத்தின் கட்டாயம்” என்கிறார் அவர்.

--- இஜ்ஹார் உல்லாஹ் - பிபிசி

## வந்தாறுமுலை ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்ததான வருடாந்த பெருவிழா



கிழக்கின் திருப்பதியாக விளங்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமுலை ஸ்ரீ தேவி பூ தேவி சமேத ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தான வருடாந்த பிரம்மோற்ஷவ பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இவ் உற்சவம் ஆனி மாதம் 14 ஆம் நாள் பௌர்ணமி தினத்தில் 28.6.2018 வியாழக்கிழமை சூரிய உதயத்தில் களுவன்கேணி கடலில் நடைபெறும் சமூத்திர தீர்த்த உற்சவத்துடன் விழா இனிதே நிறைவு பெறும்.

# மூதாதையரின் காலடிகள்

## சேற்று வில் சேருவில ஆன கதை

"திருகோணமலையில் இருந்து மட்டகளப்புக்கு போகும் பதையில் 40 கி மீ தூரத்தில் கந்தளாய் குளம் தாண்டியவுடன் வரும் கிராமம் சேருவாவில. வாவி என்பது குளத்தைக் குறிக்கும் இலங்கையின் நீண்ட நதியான மகாவலி



கங்கை, இக்கிராமத்துக்கு அருகே ஓடி கடலுடன் மூதூர் அருகே சங்கமமாகிறது. இக்கிராமத்தில் பழமையான கட்டிட சிதைவுகளும். புராதான கற்குகைகளும் உண்டு.

1887 ல் தோற்றுவித்த வன இலாக்காவுக்கு வனத்துக்கு அதிகாரியாக (Forest Ranger) இருந்தவர் மைக் தோம்சன் என்ற பிரித்தானியர் . கண்டிப்பான அதிகாரி. இயற்கை விரும்பி

வனப்பிரதேசங்களை அண்மித்த பிரதேசங்களில் வாழுகின்ற மக்களின் மரபு ரீதியான உரிமைகள், கலாசார விழுமியங்கள் மற்றும் சமய ரீதியான நம்பிக்கைகள் என்பன இலங்கை அரசினால் வனக் கொள்கையின் மூலம் இனங்காணப்பட்டு அவற்றிற்கு மதிப்பளிக்கப்பட்டது.

முக்கிய சூழலியல் முறைமைகளின் நீண்டகால நிலைத்திருக்கும் தன்மை மற்றும் வன உற்பத்திகள், சேவைகளின் வழங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதனை உறுதி செய்யும் வகையில் சகல வனங்களும் அந்த நாட்களில் பாராமரிக்கப்பட்டன. ""இயற்கை வனப்பு மிக்க ஒரு பிரதேசம் சேற்று வில். தாமரையும் அல்லியும் நீராம்பலும் நிறைந்து அழகு சேர்க்கும் வரலாற்று தடங்கள் நிறைந்த பகுதி."

ஈழத்தில் தமிழ் பௌத்தத்தின் மற்றொரு புகழ்பெற்ற டகோபாவும் அதனைச் சூழ உள்ள இடமும் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு காலத்தில் கட்டப்பட்டதாக நம்பப்படும் மங்கள ரஜா மகா விகாரை.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் இரண்டாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னரான நீர்ப்பாசன முறைகள் பற்றி ஆராய்ந்த போதே, மாகாவலி ஆற்றின் நீரேந்து பகுதியாய் சேறும் சகதியுமாய் இருந்த உள்ளூர் மக்களால் சேற்று வில் என அழைக்கப்பட்ட இந்த பகுதியின் முக்கியத்துவத்தை அவர் கண்டறிந்தார். இது பற்றி தன் குறிப்புகளில் அவர் கூறியுள்ளார்.

1922 ஆம் ஆண்டு இலங்கை தொல் பொருளியல் திணைக்களத்தின்



பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசாரப் புலம்

அனுசரணையுடன் தம்பசேகர தேரர் இப்பகுதியில் இருந்த டகோபாவையும் அதனைச் சூழ உள்ள தொல்லியல் சின்னங்களையும் கண்டுபிடித்தார். பின்னர் 1931ம் ஆண்டளவில் இதன் புனரமைப்பு வேலைகள் முடிவுற. தொடர்ச்சியாக சிங்கள பௌத்தர்களின் யாத்திரை தலமாக படிப்படியாக மாறும் காட்சிகள் நீண்டன.

1948 அல்லை குடியேற்றத் திட்டத்தின் மூலம் இங்கு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். 1962 ஆம் ஆண்டு டகோபாவை சூழ 85 ஏக்கர் நிலம் அரசுடமையாக்கப்பட்டு அங்கு பரம்பரையாக இருந்த தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அல்லைக் கந்தளாய் திட்டம் உருவாகியது .

1970ஆம் ஆண்டு சேரு நுவர எனும் பெயரில் புதிய நகர அமைப்பு பூர்த்தியாகியது. பின்னர் இந்த இடம் பௌத்தர்களின் முக்கிய யாத்திரை தலமாக மாறியது. பிரமதாச தன் பங்கிற்கு "கம் உதாவ" திட்டத்தில் இதனை நவீன வசதிகள் கொண்டதாக மாற்றினார்.


கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்கு உரியதாய் இருந்தாலும் தமிழ் மன்னர்கள் இப்பிரதேசத்தில் குறிப்பாக ராஜ ராஜ சோழன் காலத்தில் இந்த விகாரையை புனரமைத்ததற்கான கல்வெட்டு சான்றுகள் இங்கிருந்தன. ஆனால் அந்தக் கல் வெட்டுக்கள் பின்னைய நாட்களில் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொலன்நறுவை தொல்லியல் நகரத்தைப் போல சிவ ஆலயம் இருந்தததற்கான அடையாளங்களும் தென்னிந்திய திராவிட கட்டிட கலை சார்ந்த வேலைப்பாடுகளுடனான தூண்களும் வாசல் படிகளும் இப்போதும் தமிழர் கட்டிடக் கலையை பறை சாற்றி நிற்கின்றன.

இந்த இடத்தில் ஒரு அரண்மனை இருந்தததற்கான அழிபாடுகளும் பொலன்நறுவையில் உள்ளதை போலான நீச்சல் தடாகமும் உள்ளன அது அரச மரபு சார்ந்ததாகவும் திராவிடக் கலை மரபை பிரதி பலிப்பதாகவும் உள்ளது.

# கடுகுக்கதை

## இடையனின் இயற்கை அறிவு



பொது அறிவுக் களஞ்சியமென பெயர் பெற்றவர் குமரபுரம் குமரேச முதலியார்.

உலகிலுள்ள பொது அறிவு முழுவதையும் தானே சேகரித்து அதன் பின் அவைகளை மக்களுக்கு பகிர்வதால் பணத்தையும், புகழையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று எண்ணினார்.

தன்னிடம் விளம்பரங்கள் எழுதவும், அஞ்சலிக் கவிதைகள் புனையவும், துண்டுப்பிரசுரங்களுக்கு ஆலேசனை பெறவும், அரசியல்வாதிகள் தங்களுக்கு தேவையான தரவுகளை பெற்றுக்கொள்ளவும் வருவார்கள்.

அவர்களிடம் கட்டணம் வசூலித்து பெரும் செல்வத்தை ஈட்டலாம் என எண்ணிய குமரேச முதலியார், தான் சேகரித்த பொது அறிவுகளை உயரமான மரமொன்றில் மறைத்துப் பாதுகாக்க, மூட்டையாகக் கட்டி அவைகளை தோல் பையில் இட்டு, அதன் நாடாவை கழுத்தின் முன் பக்கமிட்டு பொது அறிவுத் தோல்பை வயிற்றில் பட்டபடி மரத்தில் ஏறத் தொடங்கினார்.

ஆனால் அவரால் மரத்திலேற முடியவில்லை. முன்பக்கமிருந்த தோல்பை இடைஞ்சலைக் கொடுத்தபடியே இருந்தது.

அவ்வேளை அப்பகுதியால் ஆடுகள் மேய்த்துக்கொண்டு வந்த சிறுவன் இவரின் முட்டாள் தனமான விடாமுயற்சியைக் கண்டு ஐயா! பெரியவரே! மரத்திலேற வேண்டுமென்றால் முன்னால் தொங்குகின்ற பையை முதுகுப்பக்கம் மாற்றிவிட்டு



அல்லவா ஏற வேண்டும். நீர் என்ன முட்டாள் மனிதராய் இருக்கிறாய் என்று சிரித்தபடி ஏளனம் செய்தான்.

எவ்வளவோ பொது அறிவை களஞ்சியப்படுத்திய எனக்கு இடையனின் பொது அறிவு தட்டுப்படவில்லையே என்று, வெப்புசாரத்தில் பையை தாறுமாறாகக் கிழித்து பொது அறிவுகளை காற்றில் பறக்கவிட்டபடி மரத்திலிருந்து இறங்கினார் குமரேச முதலியார்

கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா

**சேகரிக்கும் அறிவு
பகிர்ந்து கொள்ள
உதவும்
இயற்கை அறிவு
இதைவிட உயர்வு**



# குழந்தைப் பிறப்பு வீதம் குறைந்து போன படுவான்கரை

'இலங்கை நாட்டில் தற்கால சூழலில் சனத்தொகையடிப்படையில் தமிழர்கள் இரண்டாவது இடத்தில் இருந்தாலும், இன்னும் ஓரிரு தசாப்தங்களில் சனத்தொகையிருப்பில் மூன்றாம் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுவிடுவார்கள் போன்றுதான்



தென்படுகின்றது' என மாவடிமுன்மாரி சந்தியில் நின்று கணேசபிள்ளை சிதம்பரநாதனுடன் பேசிக்கொண்டிருந்தான்.

மூன்று தசாப்த கால யுத்தத்தினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்துள்ளனர். இன்னும் சிலர் புலம்பெயர்ந்து, புலம்பெயர் நாடுகளில் வசித்துக் கொண்டிருக்கின்றனர். எதிலிகளாகவும் இன்னும் சிலர், வேறு சில நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில், தமிழர்களது

## தமிழர் சனத்தொகை குறைவது நல்லதா அல்லது கெட்டதா?

சனத்தொகைவீதம் வெகுவாக குறைவடைந்துள்ளது. இதனால் இலங்கை நாட்டிலே மூன்றாம் நிலை பிரதிநிதிகளாக தமிழ் மக்கள் ஓரிரு தசாப்தங்களில் உருவாகக்கூடும் என்ற ஐயப்பாட்டில் கணேசபிள்ளை பேசிக்கொண்டிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். ஆனாலும் தற்கால சூழலில் தமிழர்களின் பிறப்பு வீதம் வெகுவாக குறைவடைந்து வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில்தான் மாவடிமுன்மாரி பகுதி அமைந்துள்ளது. குறித்த மாவடிமுன்மாரி பகுதியில் ஒரு சிறிய பகுதியாக பனிச்சையடிமுன்மாரி கிராமம் உள்ளது. இங்கு 14விதவைகள் உட்பட 101 குடும்பங்களைச் சேர்ந்த 363 நபர்கள் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இக்கிராமத்தில் 2012ம் ஆண்டு தொடக்கம் 2018 மே மாதம் வரை 38 பிள்ளைகளே பிறந்துள்ளனர். குறிப்பாக 2012ல் நால்வரும், 2013ல் 13பேரும், 2014ல் ஐவரும், 2015ல் இருவரும், 2016ல் ஏழு பேரும், 2017ல் ஆறு பேரும், 2018ல் இதுவரை ஒரு பிள்ளையுமே பிறந்துள்ளனர். கடந்த ஆறு வருடத்திற்குள்ளும் 2013லேதான் அதிகமான பிள்ளைகள் பிறந்துள்ளனர். இத்தரவுகள் பிள்ளைப்பேறின் குறை நிலையையே எடுத்துக்காட்டுகின்றன.

'ஒரு குடும்பத்தில் ஆறு பேருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களே, இரு தசாப்த காலங்களுக்கு முன்னர் வாழ்ந்தனர். குறிப்பாக ஒரு குடும்பத்தில் 12 பிள்ளைகள், 10 பிள்ளைகள், 9பிள்ளைகள், ஐந்து பிள்ளைகள், 6 ஆறு பிள்ளைகள் என பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். பிள்ளைகளையே செல்வமென நினைத்தனர். இதனால் குடும்பத்தில் கலகலப்பிருந்தது. கஸ்டங்கள் இருந்தாலும் வாழ்ந்து காட்டினர். வைத்தியசாலை வசதி வாய்ப்புக்களும் மிகக்குறைவு, மருத்துவிச்சியே மருத்துவம் செய்தார். சுகப்பிரசவங்களே நடந்தன' என சிதம்பரப்பிள்ளை தமது பழைய அனுபவங்களைக் கொட்டித்தீர்த்தார்.

அக்காலத்தில் ஏதோ இயற்கையில் கிடைக்கும் பொருட்களையும் உண்டு உயிர்வாழ்ந்துவிடுவர். தொழிலும் இருந்தது. வேறு நாடுகளை நாடவேண்டிய நிலையிருக்கவில்லை. இப்பெல்லாம், வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால்

## வெளிநாட்டு தொழில் தேடி ஓடுவதும், காலம் தாமதித்த திருமணமும் காரணமாகின்றன

அதிக பணம் வேண்டும். பொருட்களின் விலைவாசியும், நவீன உலகு என்பதனால் அவற்றிற்கு ஈடுகொடுக்க அதிகம் உழைக்க வேண்டும். அவற்றிற்கு ஈடு கொடுப்பதற்கேற்ற ஊதியத்தினைப் பெறுவதற்கான தொழில்துறைகள் இன்மையினால் மத்திய கிழக்கு நாடுகளுக்கு, தொழிலுக்காக பெண்களும், ஆண்களும் செல்கின்றனர். அவ்வாறு சென்றால் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் தொழில் புரிந்துவிட்டே தம்நாட்டிற்கு

படுவான் பாலகன்

திரும்புகின்றனர். தாம் பட்டுச்செல்லும் கடனை அடைப்பதற்கே ஓரிரு வருடங்கள் வேண்டும். அதற்கு பிறகுதான் தமது குடும்பத்தை கவனிக்க வேண்டியுள்ளது. இதனால்தான் ஐந்திற்கு மேற்பட்ட வருடங்கள் தொழில் புரிந்ததன் பிற்பாடு, திரும்பிவந்து பின்பு மீண்டும் செல்கின்ற நிலையுள்ளது. இதன் காரணமாகவும் பிள்ளைப்பேறு குறைவடைகின்றது. என்பது கணேசமூர்த்தியின் கருத்தாகின்றது.

அக்கருத்தையும் உண்மையில்லை என்று ஒதுக்க முடியவில்லை. திருமணம் செய்து ஒரு சில நாட்களிலே வெளிநாடு சென்றுவிடுகின்றனர். அவ்வாறு 30வயதில் வெளிநாடு செல்கின்றவர், இருமுறை வெளிநாடு சென்று திரும்பினால், 50வயது கடந்துவிடும். இதற்கு இடையில் திருமணம் செய்து குடும்பத்தோடு இருக்ககூடியது ஒரு சில மாதங்களே.


நவீன வைத்தியத் துறைச் சேவை பரவலாக்கப்படாத சூழலில் சுகப்பிரசவங்கள் நடைபெற்ற நிலையில், வைத்தியத்துறை சேவை பரவலாக்கப்பட்டு, வைத்தியசாலைகள் செல்வாக்கு பெற்றுள்ள தற்காலத்தில் அறுவைச் சிகிச்சைகள் மூலம் பல பிள்ளைகள் பெற்றெடுக்கப்படுகின்றனர். இதனாலும் பிள்ளைப்பேறு குறைவடைந்திருக்கின்றது. தற்போதைய தாய், தந்தையர்களிடத்தில் ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் போதுமென்ற மனப்பாங்கும் உருவாகியுள்ளது. குறிப்பாக ஒரு குடும்பத்தில் தாய், தந்தையுடன் சேர்த்து மூவர் அல்லது நால்வரே உள்ளமையே இங்கு யதார்த்தம்.

வாழ்க்கைச் சுமையினால் பிள்ளைகளை பெற்றெடுப்பதற்கு அச்சமுறுகின்றனர். அரச, அரசார்பற்ற தொழில்களில் ஈடுபடுகின்றவர்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் சிரமங்களை எதிர்கொள்வதினாலும், பிள்ளைப்பேறுகளை குறைத்துக் கொள்கின்றனர். இரண்டிற்கு மேற்பட்ட பிள்ளைகளை பெறுவது அநாகரீகம் என்ற மனநிலையும் பலரிடம் உருவாகியுள்ளது. அதேவேளை நீண்ட வயது சென்று திருமணம் செய்வதன் விளைவாகவும் பிள்ளைப்பேறு குறைவடைகின்றது. இதனால் தமிழ் மக்களின் பிறப்பு வீதம் இலங்கை நாட்டிலே குறைவடைந்து செல்கின்றது. இதனால் சில பாடசாலைகள் மூடப்பட்டும் உள்ளன. இன்னும் சில மூடப்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

இரண்டு பிள்ளைகளே போது என்ற அரசாங்கத்தின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை தமிழர்கள் முழுமையாக ஏற்று நடப்பது ஒரு புறம் உண்மைதான். அது நாட்டுக்கும் உகந்ததுதான். ஆனால், ஏனைய இனங்கள் சடுதியாக எண்ணிக்கையில் வளர, தமிழர் தேய்ந்து செல்லும் நிலை அவர்களை சனத்தொகையில் மூன்றாம் இடத்துக்குத் தள்ளி பின்தங்க வைத்துவிடுமோ என்ற அச்சமும் இங்கு எழாமல் இல்லை. இத்தனைக்கும் போரினாலும் பெரும் சனத்தொகையை இவர்கள் இழந்துபோய் நிற்கிறார்கள்.

இது சரியா, பிழையா என்பது குறித்து குழப்பமான நிலையில் கணேசபிள்ளை ஆதங்கப்படுகிறார்.

# திரௌபதை அம்மன் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா - 2018



இந்து மகா சமுத்திரத்தின் மத்தியில் முத்தென திகழும் சிவபூமி, சக்திபூமி எனப் பெயர் கொண்டும் சக்தி வடிவிலான அன்னையின் ஆலயங்களை தன்னகத்தே சிறப்புற கோயில் கொண்டும் காணப்படும் இலங்கைத் திருநாட்டில் செவ்வானம் மலரும் கிழக்கெனும் பரந்த தேசத்தில் மாசிலா மக்களோடு மீனினம் சிந்து பாடும் மட்டுமாநகரின் மத்தியின் கண்ணே அருள் வளமும், திருவளமும் நிறைந்து விளங்கும், செந்தமிழ் மாட்சியும், சைவத்தின் உயர்நெறி கமழும், தொன்மை வாய்ந்த அழகு நிறை புளியந்தீவு எனும் புண்ணிய ஷேத்திரத்தில் கல்லடித்தெரு பாஞ்சாலிபுரத்தின் பதிமேயு அரசியாம், பன்னெடுங்காலமாக திருக்கோயில் கொண்டு அருள்ஜோதி வீசும், மானிடர்களும் தெய்வமாகலாம் என்று உலகறியச் செய்த பஞ்ச பாண்டவர்களின் தர்ம பத்தினியாம் அன்னை ஸ்ரீ திரௌபதை அம்மனுக்கும் மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட அன்னையின் ஏனைய பரிவார மூர்த்திகளுக்குமான கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழாவின் கிரியாரம்ப பூஜை நிகழ்வுகள் எதிர்வரும் 22/06/2018 வெள்ளிக்கிழமை காலை 7.50 மணியளவில் ஆரம்பமாகவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எண்ணெய்க் காப்பானது 23/06/2018 சனி மற்றும் 24/06/2018 ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணிவரைக்கும் இடம்பெறவுள்ளது. மேலும் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பஷ்ட பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழா நிகழும் மங்களம் நிறைந்த விளம்பி வருடம் ஆனி 11ம் நாள் திங்கட்கிழமை 25/06/2018 திரயோதசி திதியும் அனுஷ நட்சத்திரமும் சித்த யோகமும் சேர் நன்நாளாம் காலை 9.38 மணிமுதல் 11.25 மணிவரை வரும் சிங்க லக்ன தேவப் பிரதிஷ்டை சுபமுகூர்த்த வேளைதனில் மஹா கும்பாபிஷேக குட முழுக்கு பெருவிழா நடைபெற அன்னை ஸ்ரீ திரௌபதை அம்பாளின் திருவருளும், குருவருளும் கிடைத்துள்ளதால் அடியார்கள் அனைவரும் வருகை தந்து கும்பாபிஷேக பெரும் சாந்தி பெருவிழாவினை சிறப்பித்து அம்பாள் தரிசனத்தில் அருள்பெற்று இவ்வுலகில் இப்பேறு கிடைத்தது என எண்ணி வாழ்வாங்கு வாழ வேண்டுகின்றோம்.

இதனைத் தொடர்ந்து 12 நாட்கள் இடம்பெறும் மண்டலாபிஷேக பூஜைகளிலும் அதன்பின் இடம்பெறும் நவோஸ்தர (1008) சங்காபிஷேக பூஜையிலும் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பித்து எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ திரௌபதை அம்பாளின் திருவருளை பெற்றேகுமாறு இறையன்புடன் அழைக்கின்றோம்.

--- ம.பகீரதன் ஆலய நிர்வாக சபைச் செயலாளர்

# அறிவியல் உலகின் நவீன போக்குவரத்து முயற்சிகள்

போக்குவரத்தின் நவீன வசதிகள்தான் உலகின் அடுத்த இலக்கு. அதிநவீன போக்குவரத்தின் மூலம் உலகத்தை சுருக்குவது அதன் நோக்கம்.

அதற்காக விஞ்ஞானிகள் இரவு பகல் பாராது உழைக்கிறார்கள். ஓட்டுநர் இல்லாத கார், அதிவேக ரயில், விண்வெளிச் சுற்றுலா, சுத்தமான குறைந்த விலையிலான எரிபொருள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வதுதான் அவர்கள் முயற்சி.



ஓட்டுநர் இல்லாத கார்கள்

---

ஓட்டுநர் இல்லாத வாகனங்களை உருவாக்குவதற்குப் பல நிறுவனங்கள் பரபரப்பாக இயங்கி வருகின்றன. ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போர்களின் போது அமெரிக்க இராணுவத்திடம் இருந்து இந்த யோசனை தொடங்கியது. நவீன தாக்குதல் ஆயுதங்களிடன், வெடிக்கும் சாதனங்களிடம் சிக்கி, அமெரிக்க படையினர் இறப்பதையும், காயமடைவதையும் தடுக்கும் முயற்சியாக இது உருவாக்கப்பட்டது. ஓட்டுநர் இல்லாத கார்களை உருவாக்குவதற்கு, விஞ்ஞானிகளுக்கு அமெரிக்க பாதுகாப்புத் துறை ஒரு போட்டி வைத்தது. அப்போது முதல் ஊபர், ஜெனரல் மோட்டர்ஸ், கூகுள் போன்ற நிறுவனங்கள் ஓட்டுநர் இல்லாத கார்களை உருவாக்கி வருகின்றன.

இதில் சிரமம் இல்லாமல் இல்லை. இந்த வருடத் தொடக்கத்தில், அமெரிக்காவில் ஊபர் நிறுவனத்தின் ஓட்டுநர் இல்லாத கார் மோதி 49 வயது பெண் பலியானார். இதனால், ஊபர் இத்திட்டத்தை இடைநிறுத்தியுள்ளது.

மீள்சுழற்சி வாய்ப்புள்ள சக்தி மிக்க மின்கலம்

---

மின்கல வாகனங்கள் விற்பனை அதிகரித்து வருகிறது. இதன் எரிபொருள் விலை மலிவாகவும், பராமரிப்பு குறைவாகவும் இருப்பதால் விற்பனை இன்னும் அதிகமாகும் என நிபுணர்கள் நம்புகின்றனர். வழக்கமான கார்களை விட மின்கல கார்கள் சற்று விலை அதிகமானதாக இருக்கலாம். மின்கலங்களின் விலை குறைந்து வருவதால், கார்களின் விலையும் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கான பெட்ரோல், டீசல் கார்களை விட மின்கல கார்கள் நீண்ட தூரம் போகாது என்ற அச்சத்தில் இருந்து வாகன ஓட்டிகள் வெளிவர வேண்டும். ஒரு முறை சார்ஜ் செய்தால் 300 மைல்கள் பயணிக்கக்கூடிய திறன் சில மின்கல கார்களுக்கு உள்ளது.

அதிக வேக ரயில்

---

சுமார் 1,123 கிலோமீட்டர் வேகத்தில் ஒரு குழாயின் வழியாகச் சீறிப்பாயும் ஹைப்பர்லூப் என்னும் அதிநவீன போக்குவரத்து உலக போக்குவரத்து துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது.



ஹைப்பர்லூப் தொழில்நுட்பத்தின் யோசனையை முதல் முறையாக முன்வைத்தவர் உலகின் முன்னணி தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் முன்னணி எலக்ட்ரானிக் கார் தயாரிப்பு நிறுவனமான டெஸ்லா ஆகிய இரண்டு மிகப் பெரிய நிறுவனங்களின் தலைமை பொறுப்பிலுள்ள எலான் மஸ்க் ஆவார்.

காந்த விசையை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் "மாக்லெவ்" ரயில் முறையை அடிப்படையாகக் கொண்ட இந்த ஹைப்பர்லூப் தொழில்நுட்பத்தில், மாக்லெவ் போன்ற ரயில்கள் ஒரு குழாயினுள் செலுத்தப்பட்டு கிட்டதட்ட 1,123 கிலோமீட்டர் வேகத்தில் செலுத்தப்படும்.

விண்வெளி பயணம்

---

"∴பால்கோன் ஹெவி" என்ற உலகின் மிகவும் சக்திவாய்ந்த ராக்கெட் ஸ்பேஸ் எக்ஸ் என்ற தனியார் நிறுவனத்தால் இந்த வருடத்தின் தொடக்கத்தில் விண்ணில் ஏவப்பட்டது.

ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவனம் அமெரிக்காவைச் சேர்ந்த, தொழில்முனைவர் எலான் மஸ்க்குக்கு சொந்தமானதாகும். எலான் மஸ்க்குக்கு சொந்தமான சிவப்பு வண்ண காரே ராக்கெட்டில் பறந்து சென்றது.

சுற்றுலாப் பயணிகளை விண்ணிற்கு அனுப்பத் திட்டமிட்டுள்ள ஸ்பேஸ் எக்ஸ், 2022ல் செவ்வாய்க்குச் செல்லவும் திட்டமிட்டுள்ளது.

நன்றி பிபிசி

## 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவியை வைத்துக் கொண்டு அதற்கெதிராகப் பேசுவது யோக்கியமான அரசியல் அல்ல'

தொடர்ச்சி...



மட்டும் ஒற்றுமைப்பட்டு ஒன்றாகச் சேர்ந்து முதலமைச்சர் வர முடியுமா என்றால் அது முடியாது.

ஏனெனில் 37 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாகாணசபையில் நாங்கள் ஒரு முதலமைச்சரை உருவாக்க வேண்டும் என்றால் 19 உறுப்பினர்கள் தேவை. ஆனால் 19 தமிழ் உறுப்பினர்களை நாங்கள் கிழக்கில் ஒரு போதும் தெரிவு செய்ய முடியாது. அதை எவ்வாறு பெற்றுக் கொள்வது யாரிடம் கேட்பது. சிங்கள உறுப்பினர்களிடம் கேட்போமாக இருந்தால் அவர்கள் எங்களுக்கு ஆதரவு தந்து எங்களை முதலமைச்சராக்குவதற்கு ஒருபோதும் தயாராக இல்லை. இம்முறை ஆட்சி மாற்றத்தின் போதும் ஐக்கிய தேசியக் கட்சியின் தயாகமகே அவர்கள் தன்னை முதலமைச்சராக்குமாறே கோரினார். கிழக்கு மாகாணத்தைப் பொருத்தமட்டில் தமிழ் பேசும் ஒருவர் தான் முதலமைச்சராக வர வேண்டும். இங்கு தமிழர்களும் முஸ்லீம்களும் கிட்டதட்ட சமமான வீதத்திற்கு வந்துள்ளோம். இன்னும் நாங்கள் கவனமாக இல்லாது விட்டால் இன்னும் குறைந்து போகக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. அவ்வாறாயின் ஒரு தமிழர் அல்லது முஸ்லீம் தான் முதலமைச்சராக வர வேண்டும்.

கிழக்கு மாகாணத்திலே ஒரு முதலமைச்சர் வருவதென்றால் அவர் தமிழ் சிங்கள, முஸ்லீம் ஒற்றுமையின் மூலம் தான் வர முடியும். ஏதோவொரு இணக்கப்பாட்டின் மூலம் தான் வர முடியும். ஆனால் நாங்கள் புத்திசாலித்தனமாக இருந்தால் எமது உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் அதிகரிக்கலாம். அந்த நேரத்தில் நாங்கள் இராஜதந்திரமாக நடந்து பேரம் பேசுதல் போன்ற நிகழ்ச்சி நிரலுக்குச் செல்லலாம்.

நாங்கள் எது பலமாக நம் மத்தியில் இருக்கின்றதோ அந்தப் பலத்தைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் அனைத்து மக்களும் ஒற்றுமையாக இருந்தால் தான் அனைவருக்கும் சமமாக வேலை செய்யக் கூடிய ஒரு முதலமைச்சர் உருவாக முடியும். அந்த இலக்கை நோக்கித் தான் நாங்கள் செல்ல வேண்டும்.

முஸ்லீம்கள் எவ்வாறு அரசியலுக்குள் சேர்ந்து கொண்டு தங்கள் மக்களை வளப்படுத்தகின்றார்களோ அதே போன்று நாங்கள் அரசியலமைப்புச் சட்டத்தை பெற்றுக் கொண்டு எங்களுடைய உரிமையையும் அபிவிருத்தியையும் பெறக் கூடிய விதமான சமாந்தரமான செயற்பாட்டிலே தற்போது சென்று கொண்டிருக்கின்றோம்.

நாங்கள் நல்லதையே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நாட்டு மக்கள் அனைவரும் சுயமரியாதையுடன் வாழக் கூடியதான அரசியலமைப்புச் சட்டம் வருகின்ற போது நாங்களும் எமது பிரதேசத்தை வளம்கொழிக்கச் செய்யலாம்.

ஆனால் தற்போது என்ன நடைபெறுகின்றது. எங்களுடைய பக்கத்தில் இருந்து எங்களுக்கே எதிரான கருத்துக்களை எங்களது உறுப்பினர்கள் சிலர் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இதன் காரணமாக நாங்கள் பலவீனப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஒரு அணியாக நாங்கள் வேலை செய்கின்ற போது அந்த அணிக்குத் தோல்வி வரக்கூடிய விதத்திலே சேம்சைட் கோல் போடுகின்ற வேலையை மனச்சாட்சி உள்ள உறுப்பினர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். என்று பேசினார்.



## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# செல்லையா இராஜதுரை வாழ்வும் பணிகளும்

முருகபூபதி – அவுஸ்திரேலியா

## பத்திரிகை உலகிலிருந்து அரசியலுக்கு வந்து ஆன்மீகவாதியான மட்டுநகர் மைந்தன்

"அத்திக்காய் காய் காய் ஆலங்காய்
வெண்ணிலவே இத்திக்காய் காயாதே
என்னைப்போல் பெண்ணல்லவோ
நீ என்னைப்போல் பெண்ணல்லவோ" என்ற பாடலை எமது மூத்த தலைமுறையினர் மறந்திருக்கமாட்டார்கள்.



செல்லையா இராசதுரை

1962 ஆம் ஆண்டில் பி.ஆர். பந்துலு இயக்கிய பலே பாண்டியா படத்திற்காக கவியரசு கண்ணதாசன் இயற்றி, மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையமைத்த பாடல். "இந்தப்பாடலில் நிறைய காய்கள் வருவதனால், சென்னை கொத்தவால் சாவடியிலிருக்கும் மரக்கறி சந்தையையே கவியரசர் கொண்டுவந்துவிட்டார். இந்தப்பாடல் மக்கள் மத்தியில் எடுபடாது" என்றார் விஸ்வநாதன்.

தத்துவப்பாடல்களும் இயற்றியிருக்கும் கண்ணதாசன், பட்டினத்தார், காளமேகப்புலவர், பாரதியார் மற்றும் சித்தர் பாடல்களையும் தனது திரைப்படப் பாடல்களில் பயன்படுத்தியிருப்பவர். மேற்குறித்த பாடலில் வரும் காய்களில் ஒரு சிலவற்றை குறிப்பிட்டு முன்னரே கவிதை எழுதியவர்தான் காளமேகப்புலவர்.

எழுத்தாளரும் பத்திரிகையாளருமான ஒருவர் கண்ணதாசனின் நெருங்கிய நண்பர். அத்துடன், மக்கள் திலகம் எம்.ஜி. ஆர். மற்றும் தி.மு.க.தலைவர்களுடனும் நட்புறவிலிருந்தவர். குறிப்பிட்ட அத்திக்காய் பாடலின் ரிஷிமூலமும் தெரிந்துவைத்திருந்தவர்.

அவர்தான் மட்டக்களப்பின் முடிசூடா மன்னர் என்ற பெயரைப்பெற்று நீண்ட காலம் அந்தப்பிரதேசத்தின் நாடாளுமன்ற பிரதிநிதியாகவும் பின்னர் பிரதேச அபிவிருத்தி, தமிழ் மொழி அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சராகவும் அதன் பின்னர் மலேசியாவில் இலங்கைக்கான தூதுவராகவும் விளங்கிய செல்லையா இராஜதுரை.

மீன்பாடும் தேன் நாடு மட்டக்களப்பில் 1927 ஆம் ஆண்டு பிறந்து, ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையிலும் மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் கல்வி கற்று, எழுத்தாளராகவும் ஊடகவியலாளராகவும் தமிழ் மக்களிடம் அறிமுகமானவர். தந்தை செல்வா தொடங்கிய தமிழரசுக்கட்சியில் இணைந்து மட்டக்களப்பு மாநகர முதல்வராகவும் தெரிவாகி, 1956 ஆம் ஆண்டு முதல் பல ஆண்டுகள் தோல்வியையே சந்திக்காமல் தொடர்ச்சியாக அந்தப்பிரதேசத்தின் நாடாளுமன்ற பிரதிநிதியாக விளங்கியவர்.

இவரை அரசிலுக்கு அறிமுகப்படுத்திய தந்தை செல்வா, மற்றும் ஜீ.ஜீ. பொன்னம்பலம், அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் முதலானோர் இவர் எம்.பி.யாக இருந்த காலங்களில் நடந்த தேர்தல்களில் தோல்வி கண்டுள்ளனர்.

ஆனால், இவரை தோல்வியடையச் செய்வதற்காகவே இவர் ஆரம்பம் முதல் இணைந்திருந்த தமிழரசுக்கட்சியினரே இவருக்கு எதிராக, இவருக்கே நன்கு தெரிந்த கவிஞர் காசி ஆனந்தனை நிறுத்தினர்.

"தனக்கு மூக்குப்போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைக்கவேண்டும்" என்று தப்புக்கணக்குப் போட்டார் தளபதி அமிர்தலிங்கம். இறுதியில், 1989 ஜூலை மாதம் 13 ஆம் திகதி அவர் உணர்ச்சியூட்டி வளர்த்து ஆளாக்கிய தனயர்களின் கைகளினாலேயே சுடுபட்டு இறந்தார்.

இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக்களப்பில் ஒரு தமிழரும் ஒரு முஸ்லிம் உறுப்பினருமே தெரிவாகிவந்தனர். அவ்வாறிருக்கையில் தேசிய சிறுபான்மை இனங்களில் ஒன்றான முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் பொருட்படுத்தாமல், மட்டக்களப்பு தொகுதியில் இரண்டு தமிழர்களை அன்றைய தமிழரசுக்கட்சி தீர்க்கதரிசனம் அற்று முன்மொழிந்தது.

எனினும் நீண்ட காலமாக அங்கு தெரிவாகியிருந்த இராஜதுரையைத்தான் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையும் ஆதரித்து மேடைகளில் பிரசாரம் செய்தார்.

இராஜதுரை அரசியல்வாதியாக இருந்தபோதிலும் தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்களுடன் நெருக்கமாக இருந்தவர். சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலிருந்தவர். சுதந்திரன் பத்திரிகையில், எஸ். டி. சிவநாயகம், பிரேம்ஜி ஞானசுந்தரன், அ.ந. கந்தசாமி, சில்லையூர் செல்வராசன் ஆகியோரும் அதன் இறுதிக்காலத்தில் கோவை மகேசனும் இடம்பெற்றவர்கள்.

கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தையிலிருந்துதான் சுதந்திரன் பத்திரிகை வெளியானது. மட்டக்களப்பிலிருந்து அந்தப்பத்திரிகையில் பணியாற்ற வந்திருக்கும் இராஜதுரை தமிழக திராவிடக்கழக பாரம்பரியத்தில் வந்த தலைவர்களுடனும் நெருக்கமான நட்புறவுகொண்டிருந்தவர்.

கவிஞர் கண்ணதாசனின் குடும்ப நண்பருமாவார். இராஜதுரையின் புதல்வி பூங்கோதை தமிழ்நாட்டில் படிக்கின்ற காலத்தில் அவருக்கு பாதுகாவலராக இருந்தவர் கண்ணதாசன்.

மக்கள் திலகம் எம்.ஜீ.ஆர். எப்பொழுதும் வெள்ளை நேஷனல் அணிபவர். அவரது இடதுகையை அவதானித்தால் அவர் கைக்கடிகாரம் அணிந்திருக்கும் தோரணை ஆச்சரியம் தரும். அவர் அந்த நேஷனலின் மணிக்கட்டின் பகுதியில் அந்த உடையின் மீதே கடிகாரம் அணிந்திருப்பார். அந்தப்பாணியைப்பின்பற்றியே இராஜதுரையும் தனது கைக்கடிகாரத்தை அணியும் பழக்கமுள்ளவர்.

இலக்கியவாதியாக, சிறந்த பேச்சாளராக, பத்திரிகையாளராக, அரசியல் தலைவராக, நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, இறுதியில் வெளிநாட்டின் நல்லெண்ணத்தூதுவராக தனது வாழ்வையும் பணிகளையும் தொடர்ந்திருக்கும் அவர் இறுதியில் ஆன்மீகத்தின் பக்கம் தீவிரமாகத் திரும்பி அரசியல் பேசுவதையே முற்றாக தவிர்த்திருப்பவர்.

இலங்கையில் ஒரு இலக்கிய மேடையில் கவிஞர் கண்ணதாசனின் அத்திக்காய் பாடலின் உண்மையான அர்த்தத்தை நயமுடன் சொல்லி சபையோரை வியக்கவைத்தவர்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுடனும் இராஜதுரைக்கு நட்பிருந்தது. இராஜதுரையும் முன்னர் ஒரு இலக்கிய இதழ் நடத்தியிருப்பவர். அதற்காக ஒரு சிறிய அச்சுக்கூடமும் வைத்திருந்தார். அவர் வெளியிட்ட இதழ் நின்றதும், அந்த



அச்சுக்கூட சாதனங்கள், வெள்ளீய தமிழ் அச்சு எழுத்துக்களையும் மல்லிகை ஜீவாவுக்கு வழங்கும் எண்ணத்திலும் இராஜதுரை இருந்தார்.
ஒருநாள் மாலை கொழும்பு ஜிந்துப்பிட்டியிலிருந்த தினபதி - சிந்தாமணி ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அவர்களின் இல்லத்திலும் இராஜதுரையை நானும் மல்லிகை ஜீவாவும் சந்தித்துபேசியிருக்கின்றோம். அக்காலப்பகுதியில்தான் எம். ஜீ. ஆரை. தி.மு.க. வெளியேற்றியிருந்தது. அக்கட்சி பிளவு பட்டதனால் இராஜதுரை பெரிதும் வருந்தி எம்முடன் அதுபற்றி உரையாடினார்.

அதன்பின்னர், 1977 இற்குப்பிறகு இவரும் தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேறினார்.

தமிழரசுக்கட்சியிலும் தமிழர் விடுதலைக்கூட்டணியிலும் நீண்டகாலம் அங்கம் வகித்த அரசியல்வாதியாக இவர் இருந்தமையாலோ என்னவோ இவரது அரசியலுடன் எனக்கு இணக்கம் இருக்கவில்லை. எனினும் இவரும் ஒரு கலை, இலக்கியவாதி, இதழ் நடத்தியிருப்பவர், அத்துடன் சில சிறுகதைகள், இலக்கியப்புதினங்களும் எழுதியிருப்பதனால் அந்த அடிப்படையில் விருப்பத்திற்குரியவரானார். அமைச்சரானதன் பின்னர் எமது எழுத்தாளர்கள் தமது நூல் வெளியீடுகளுக்கு அவரையே அழைக்கும் மரபும் கொழும்பில் உருவானது.

ஒரு கவிஞரின் கவிதை நூல் வெளியீட்டு அரங்கு கொழும்பு கோட்டை தப்ரபேன் ஹோட்டலில் நடந்தபோது அமைச்சரின் தலைமையில் நானும் உரையாற்ற நேர்ந்தது.

அந்த நிகழ்வில் பேசிய கவிஞர் கலைவாதி கலீல், "அமைச்சருக்கு இரண்டு மனைவியர்" என்று சொன்னதும் சபையிலிருந்தவர்களின் முகம் துணுக்குற்றது. அடுத்த நொடிப்பொழுதில், " ஒன்று தமிழ்" என்றார். கரகோஷம் எழுந்தது. அமைச்சரின் முகத்திலும் பிரகாசம் தோன்றியது.

அவர் தமிழர் விடுதலைக்கூட்டணியின் போக்குப்பிடிக்காமல் அன்றைய ஜே. ஆர். ஜெயவர்தனாவின் பதவிக்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்ததும், உடனடியாகவே அவருக்காகவே புதிதாக உருவாக்கப்பட்டதுதான் இந்து கலாசார அமைச்சு. அதனுடன் தமிழ் மொழி அமுலாக்கல், பிரதேச அபிவிருத்தி அமைச்சும் அவரிடம் தரப்பட்டது.

தொடக்கத்தில் அவருக்கென தனியான அமைச்சு அலுவலகமும் அமைந்திருக்கவில்லை. காலிமுகத்தில் அன்றைய நாடாளுமன்றத்திற்கு சமீபமாக இருக்கும் செலிங்கோ ஹவுஸ் கட்டிடத்தின் 13 ஆவது மாடியில்தான் அவரது அமைச்சு அலுவலகம் முதலில் தற்காலிகமாக இயங்கியது.

அங்கிருந்த வசதிக்குறைபாடுகள் காரணமாக நாடாளுமன்ற கட்டிடத்தொகுதியில் ஒரு அறையிலிருந்தும் தன்னை சந்திக்கவருபவர்களுடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித்தருவார்.

எங்கள் ஊரில் இந்துவாலிபர் சங்கத்தின் பெயர் இந்து இளைஞர்

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 17

தேவதை என்ற பெயரில் ஒரு பெண் எழுத்தாளர். இவள் மட்டக்களப்பு போராளிதான், இந்த மட்டக்களப்பு போராளியள் தொகையா வரக்கு முன்னமே இவள் இஞ்சதான் வெளியீட்டுப்பிரிவில இருந்தாள். இவள் பெரிதாக எழுதி எதையும் கிழிக்கவில்லை என்றாலும், அந்தத்துறையில பயின்றிருந்தாள். அதால பல எழுத்தாளர்களின் தொடர்பு இருந்துது. இந்த அனுபவங்களும் அறிமுகங்களும் மட்டக்களப்பு படையணி தனிய ஒரு புத்தகம் வெளியிட நினைச்சபோது அந்தவேலை இவளின்ர கைக்கு வந்துது.

சும்மா சொல்லக்கூடாது, ஆரிட்ட எதைப்பற்றிக் கேக்கலாம்; ஆர் எதை எழுதினா சிறப்பா இருக்கும்; ஆரை எந்த சந்தர்ப்பத்தில பேட்டி எடுக்கலாம்; எந்த விசியத்தை விவாதத்துக்கு உட்படுத்தலாம் எண்டதையெல்லாம் கச்சிதமாக கணித்துச் செய்தாள். ஒருகட்டத்தில இவளுக்கு முப்பது வயதுக்குமேல் ஆயிட்டதால, இவளை திருமணம் செய்து கொள்ளச் சொல்லி பொறுப்பாளர்கள் கேட்டதால இவள் அதுக்கு சம்மதிச்சாள்.

திருமணப் பேச்சு வார்த்தை என்பது இயக்க பெண் போராளிகளுக்கு விடுதலைப்பத்திரம் போல. அதனால் ஆரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொண்டு கெடுபிடியளில் இருந்து விடுபடவே அவர்களில் பலர் விரும்பிச்சினம். அதேபோலதான் இவளுமா என்பது தெரியேல்லை. ஆனால் இவள் திருமணத்துக்காக தானே திரிந்து அழைப்புகளை கொடுத்தாள். அப்போது நான் கேட்டேன் யார் மாப்பிள்ளை இங்கேயா வெளியிலா? என்று. அவள் விரக்தியாக "தெரியல அன்ரீ, காட்டினாங்க நான் சரியாப்பாக்கலை" . என்றாள்.

திருமணநாள் நான் அவளுடைய நட்பு காரணமாக நேரத்தோடு போயிருந்தேன். மணமகள் அலங்காரம் நடந்து கொண்டிருந்தது. பெருமளவு பூக்களே அலங்கரிக்கும் பொருட்கள்.

பொதுவாக இயக்கத்தில் திருமணத்துக்கு போராளிகள் எப்படி அலங்காரம் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. சில மணமகள்கள் பெரிய பணக்கார குடும்பத்தை சேர்ந்திருந்ததால் அவளுடைய பெற்றோர் பெருமளவு நகைகளைக் கொண்டுவந்து தமது பெண்களை அலங்கரித்தார்கள். அதேசமயம் ஏழைக்குடும்பத்தில் பிறந்த பெண்களோ அல்லது பெற்றோரை தொடர்பு கொள்ள முடியாத குடும்பத்துப் பெண்களோ மிகவும் மலிவான ஆடையை உடுத்தும், கழுத்தில் கவரிங் நகைகளைப்போட்டும் மணமேடையில் அமர்ந்தனர். எனவே இந்த ஏற்றத்தாழ்வைப் போக்க மணமகள் அலங்காரம் எதுவரை என்பதில் ஒரு வரையறை செய்யவேண்டியதாயிற்று. அதை பெண் பொறுப்பாளர்களே கூடிச் செய்தனர். ஒரு காஸ்மீர் நூல்சேலை . கழுத்தில் ஒருபட்டுச் சங்கிலி, தோடு, கையில் ஒரு சோடி காப்பு தலையில பூ இவ்வளவுதான் மணமகள் அலங்காரம். பின்ன தேவதைக்கும் இதுதான்.

எல்லா அலங்காரமும் முடிய பொம்பிளை ஆயித்தம், ஆனா நெத்தியில பொட்டு வைக்கெல்ல. " இன்னும் அக்காவ காணல்ல வந்தாதானே"" அந்த முகாம் வாசலுக்கை போய் எட்டிப்பாக்கிறதும் திரும்பி வாறதுமா பெரிய ஆரவாரமாக்கிடக்கு. கடைசியா ஒரு



பஜீரோ வந்துது.

"ஆ....அக்கா வந்திட்டா அக்கா வந்திட்டா" எண்டு முகாம் கப்சிப்பாயிட்டுது. அந்த அக்காவ நானும் பாக்க ஆவலா எழும்பி வாசலுக்க போனன், அது கருணாம்மான்ர பெண்சாதி நிரோதான் பெரிய வரவேற்போட உள்ளுக்க போய் மணமகளின்ர அலங்காரத்தில அங்க தொட்டு இஞ்ச தொட்டு சில திருத்தங்களை செய்து போட்டு தன்ர கையால ஒரு பொட்டு வைச்சா. இப்பதான் மணமகள் அலங்காரம் நிறைஞ்சிட்டுது.

அப்பிடியே வாசலுக்குவர ஒரு ஆலாத்தி சுத்தி அதிலயும் ஒரு சின்ன பொட்டு. மணமகளை அழைச்சுக் கொண்டு மற்றாக்கள் பந்தலுக்கு போக பினானாலயே போய் வாசலடியில நிண்டு, தன்ர கையால அணைச்சு அந்த பொம்பிளைய கொண்டே கதிரையில இருத்தினா. பதிவாளர் வந்து கலியாணப்பதிவு முடியுமட்டும் பொம்பிளைக்கருகில வீடியோவில அவதான் நிண்டா. அவவோட ஆரையும் ஒட்டவோ உரசவோ விடயில்ல. அந்த கலியாணம்

**தமிழ்க்கவி**

முடிஞ்ச பிறகு அந்தப்பொம்பிளைய அவ கண்ணாலயும் கண்டாவோ தெரியா. கட்டின மாப்பிளை கொஞ்சம் வயதானவரா தெரிஞ்சாலும் நல்ல அன்பான மனிசன். கொஞ்க நாளைக்குள்ளயே ஒரு அழகான கொழுகொழெண்டு பையன் பிறந்தான்.

ஏன் இதை விலாவாரியா சொல்லுறனெண்டா.... கடைசியா வடக்கும் கிழக்கும் பிரியேக்க தேவதை வடக்கில நிக்க வேண்டியதாப்போச்சு. மட்டக்களப்பு போராளியளில விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்கே இஞ்ச நிண்டவை. அதிலும் அங்கால போய், அங்கயிருந்து கொழும்புக்கு ஓடி கொழும்பால வன்னிக்க வந்தவையும் அடக்கம். கடைசிப்போர் நடந்த போது இவளும் எங்களுடன் தான் நின்றாள். தன் நான்கு வயது மகனுடன், அந்தத் துயரம் அடுத்த கட்டுரையில பாப்பம்....

# மூத்த எழுத்தாளர் கேணிப்பித்தன் மருத்துவமனையில் அனுமதி



மூத்த எழுத்தாளர் கேணிப்பித்தன் என்று இலக்கிய உலகில் அறியப்படும் கவிஞர் ச. அருளானந்தம் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி எரியுண்ட நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் திருகோணமலை உவர்மலையில் அவரது வீட்டில் குப்பை எரித்துக் கொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட திடீர் சுழிக்காற்றினால் அள்ளி எறியப்பட்ட தீ இவரது உடலில் தீப்பற்றிக் கொண்டது. வலது கை, வலது கால், வயிற்றுப் பகுதி மற்றும் முகத்தின் ஒரு பகுதி எரியுண்ட நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

10 நாட்களாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் இவரின் உடல் நிலை குணமடைந்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவரின் மகன் டாக்டர் அருள் முரளியும் இதனை உறுதிப்படுத்தினார். எழுத்தாளர்கள் நேரடியாக வைத்தியசாலை விடுதிக்கு வந்து ஆறுதல் கூறி வருகின்றனர் என குழந்தை எழுத்தாளரும் அவரின் நண்பருமான டாக்டர் ஓ.கே. குணநாதன் தெரிவத்தார்.



# பெரும் வீழ்ச்சியை நோக்கி இலங்கைப் பொருளாதாரம்?

தொடர்ச்சி...



நாணய மதிப்பிறக்கம் காரணமாக இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என்ற சாக்கு கூறப்பட்டாலும், அதனைவிட விட பன்மடங்காக இலங்கை இறக்குமதிகளுக்கு செலவிட நேரிடும் என்றும் கணேசமூர்த்தி கூறுகிறார்.

இதனால், தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்க்கைச் செலவினம் அதிகரிக்கும் என்றும், ஏற்கனவே வாழ்க்கைச் செலவின அதிகரிப்பால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இது பெரும் பாரமாக அமைந்துவிடலாம் என்றும் அவர் எச்சரிக்கிறார்.

அதேவேளை, வெளிநாட்டு நாணய வருவாயை அதிகரிப்பதற்கான இன்னுமொரு வழியாக வெளிநாட்டு முதலீட்டை அதிகரிப்பது காணப்படுகின்ற போதிலும், இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்பதற்கான சாதகமான சூழலோ அல்லது ஸ்திரமான அரசியல் நிலவரமோ காணப்படவில்லை என்ற கவலை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலைமைகள், இலங்கையின் பொருளாதாரத்தை பெரும் வீழ்ச்சிக்கு கொண்டு செல்லலாம் என்றும் அவர் அச்சம் பெளியிட்டுள்ளார்.



# சமூகத்தினடியாக கிளர்ந்தெள வேண்டிய அரங்கு

சமூக மாற்றத்திற்காக நிறைய முயற்சிகள் நடந்து வருகின்றன. அதில் அரங்க முயற்சியும் ஒன்றாகும். அரங்கில் எது மக்களுக்கு தெரியுமோ அதை மக்களுக்குச் சொல்ல வேண்டிய கடமை நாடகக்காரர்களுக்கு இருக்கிறது. சமூகத்தில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகளை எடுத்தியம்புகின்ற சமூக மாற்றத்திற்கான வடிவமாக அரங்க அளிக்கை முகிழ்க்க வேண்டும்.

"மக்கள் அரங்கு" உண்மையில் மக்களின் அரங்காக இருக்க வேண்டும். ஒடுக்குமுறையாளர்களின் அதிகார ஆசையால் ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் அரங்காக இருக்க வேண்டும். மக்களுக்குப் போதனை செய்கின்ற அரங்காக இல்லாமல் அவர்களுக்கு வழியூக்கியாக செயற்படக் கூடிய அரங்காக இருக்க வேண்டும்.

இதற்கான காரணம் என்னவெனில் ஒன்று இப்பிரச்சினை பற்றி பிற சமூகத்தவர்களுக்கு எடுத்தியம்புவதோடு வரமுன் காப்பதுமாகும். மற்றயது, குறித்த சமூகத்தில் இப்பிரச்சினை பற்றிப் பேசி, மனப்பாங்குகளில் மாற்றங்களைக் கொண்டு வர முயற்சிப்பதுமாகும். சில சந்தர்ப்பங்களில் தீர்வாகவும் அது அமைந்து விடுகின்றன. இங்கு ஒரு சமூகத்தவரது பிரச்சினைகள் மற்றைய தரப்பினருக்கு, அது பொதுப் பிரச்சினையாக இருந்தாலும் தனக்குத் தனக்கு வராத பட்சத்தில் எந்த அளவில் பாதிப்பை கொடுக்கக்கூடியதாகவும் சிந்தித்துப் பார்க்க கூடியதாக இருக்கும் என்பதும் கேள்வியே.



ஆர்ப்பாட்டங்களும் கோசங்களும் தான் பிரச்சினைக்குரிய முழுமையான தீர்வைப் பெற்றுத்தரும் என்பதும் அப் பிரச்சினை தொடர்பான முழுமையான அறிவைப் பெறாதவிடத்து தோன்றுவதேயாகும். இது பிரச்சினைக்கான தீர்வின் முதற்படியாக எப்போதும் இருந்து விடுவதில்லை. இத்தன்மையே ஒடுக்குவதற்கும் ஒடுங்கிப் போவதற்குமான அடிப்படையாக அமைகின்றது.

கால காலமாக ஏதோ ஒரு வகையில், அடங்கியும் அடக்கப்பட்டும், பாடுகளை சுமந்து வாழ்ந்து வருகின்றோம். ஆகவே செயல் ஒன்றின் இயலாமை என்பது வாழ்விற்கான ஒட்டு மொத்த சுழியமாக அமைந்து விடுவதில்லை. ஒன்றிற்கான பேறு இல்லை என்றவுடன் தமது ஒட்டு மொத்த வாழ்க்கையையும் தொலைத்து வாழத்தான் வேண்டுமா? என்கின்ற கேள்விகளை எழுப்பி விடுகின்றனர்.

இதன் உச்சகட்டம் தற்கொலை நோக்கிப் பயணிப்பதாகவும் அமைந்து விடுகின்றது. அச்சமயத்தில் பிரச்சினை தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் இருக்கின்ற பட்சத்திலும், தன்னைச் சார்ந்தவர்களால் உருவாக்கப்படுகின்ற போதிலும்; தாமே தற்கொலை செய்கின்ற அதற்கான முயற்சிகளை எடுக்கின்ற இக்கட்டான சூழ்நிலையை இன்றைய சமூக கட்டமைப்பும் சமூக அடக்குமுறையும், சமூக பொதுபுத்தியும் உருவாக்கி விடுகின்றன.

உதாரணமாக பரீட்சைகளை எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்கள் வெளியாகிய தமது பெறுபேற்றின் திருப்தியின்மை காரணமாக தன்னாலும் தன்னைச் சார்ந்தவர்களாலும்

**சிறீசகி**

மனவிரக்திக்குள்ளாகி தவறான முடிவுகளை எடுப்பதை நாம் அவதானித்து வருகின்றோம். இச் சமூகமே மிக மோசமான நிலையில் அவர்களை தாழ்வுச் சிக்கலுக்குரியவர்களாக மாற்றியமைத்துள்ளது. அவர்களுக்கான இன்னொரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு மறுத்துவிடுகின்றது. ஆகையால் இத்தகைய நிலையில் இருப்பவர்களை அதில் இருந்து வெளிக் கொண்டுவருவதற்கான நிலை மாற்றுச் செயல்களே இன்றைய அரங்கின் நோக்கங்களில் ஒன்றாகவும் இருந்து வருகின்றது.

இதனால் சமூக மாற்றத்துக்கான அரங்க முயற்சிகள் மூலம் அவர்கள் பற்றிய மனப்பாங்குகளில் மாறுதல்களை கொண்டு வருவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். இதன் முயற்சியாக இங்கு சமூக வல்லமை பெறச் செய்தலுக்கான அரங்கின் அவசியமானது முக்கியமானதாக அமைகின்றது. இதன் அடிப்படையாக அமைவது யாருடைய பிரச்சினைகளைப் பேசப்போகின்றோம் எனும் போது, அதை அவர்களுக்காகப் எப்படிப் பேசுவது என்பதும் அளிக்கையைப் பொறுத்து அமைந்து விடுவதைக் காணலாம். மக்களின் பிரச்சினைகளை அவ்வாழ் மக்களின் கலை வடிவமாக ஆற்றுகை செய்யும் போது அதை அம்மக்கள் புரிந்து கொள்ளுகின்ற நிலமையை அரங்கானது அவர்களின் உள்ளுணர்வுகளில் தங்கி அளிக்கின்றது. அத்தோடு மக்கள் தாமாகவே முன்வந்து கலந்து கொள்ளவும் உறவு கொள்ளவும் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளவும் செயற்படவும் உரிய அரங்காக இது இருக்க வேண்டும்.

ஆகவே நமக்குத் தேவைப்படும் அரங்கு நமது மண்ணிலிருந்து கிளர்ந்தெழுகின்ற நமக்குப் பொருத்தமான அரங்காக இருக்க வேண்டும். அரங்கு மேற்கின் மேலாண்மைக்குட்பட்டதும் சமூக மேலோங்கிகளின் கைகளில் அடக்கப்பட்டு இருத்தல் என்பதும் அரங்கை மக்களிடமிருந்து அந்நியப்படுத்துகின்ற இன்னுமொரு பிரச்சினையாகும். இத்தன்மையிலிருந்து விடுபட்டு நமது மக்களுக்குப் பரிச்சயமான அரங்காக அதை



மாற்றியமைக்க வேண்டும்.

இன்று அரங்க உருவாக்க நடைமுறை பற்றி இருவேறு விதமான கருத்தோட்டங்கள் நிலவி வருகின்றன. ஒன்று நமது மரபுவழி அரங்கை அடிப்படையாகக் வைத்து நமக்குத் தேவையான அரங்கை உருவாக்குவோமென்பது. மற்றையது மேற்கத்தைய பாணிகளை அடியொற்றி நமது அரங்கை உருவாக்கலாமென்பது. இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தக் காணப்படுகின்ற அரங்கப் பிரச்சினைகளாகும். ஆனால் கலைஞர்களின் பண்பாட்டு அரங்கப் பரிச்சய அடிப்படையிலிருந்து நாங்கள் புதிய அரங்கை உருவாக்குகின்ற போது எந்த விடயம் பற்றிய தயாரிப்பிலீடுபடப் போகிறார்களோ அந்த விடயம் பற்றிய ஆழமான உள்ளுணர்வோடு சிந்தித்துக் கொள்வதற்கான சமூக மாற்றத்திற்கான ஒரு அரங்கை உருவாக்க வேண்டும். இது பங்கு பற்றுகின்ற ஒவ்வொரு கலைஞராலும் உணரப்பட வேண்டும்.

அரங்கானது மற்றெந்த கலைகளிலும் இல்லாத அளவிற்கு ஒரு தனிப்பார்வைக்குப் பதிலாக பல பரிமாணங்களையுடைய பார்வையை வெளிப்படுத்துகின்றது. புதிதளித்தல் மூலம் பார்வையாளர்கள் தாமே முன்வந்து பங்கு பற்றக்கூடியதான விவாதிக்கவுமான முறையில் அரங்கு அவர்களது சமூக மாற்றத்திற்கானதாக இருக்க வேண்டும். அரங்கானது பரந்து பட்ட மக்களை கவர்ந்திழுக்கின்ற கவர்ச்சி வன்மையுடையதான ஜனரஞ்சக அரங்காக இருக்க வேண்டும்.

இத்தகைய அரங்க செயற்பாடுகளை தற்காலத்தில் பல அரங்க நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்ற போதிலும் அவை இன்றைய சமுதாயத்திற்குப் போதுமானவையாக இல்லை. பிரச்சினை ஒன்று நிகழ்ந்த பின்னர் அதைப்பற்றிப் பேசிப் பயனில்லை. வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும் என்பதற்கிணங்க அரங்கு சமூகத்தை தேடி நோக்கிப்பயணிப்பதாக இருக்க வேண்டும். பல்கலைக்கழங்களிலும் பாடசாலைகளிலும் வருடா வருடம் நாடக அளிக்கைகள் போட்டி நிகழ்வாகவும், பரீட்சை நோக்கிலும் அரங்கேறி வருகின்ற போதிலும் இவை சமூக நலன் நோக்கிப் பயணிப்பதென்பது மிகக் குறைவான அடைவு மட்டத்தையே அடைந்து வருவதென்பதும் குறிப்பிடத்தக்கது. மாணவர்களை சமூகத்தின் இயங்கு தளத்தில் இயங்க வைத்து குறித்த சமூகத்திலுள்ள பிரச்சினைகளை அரங்கினூடாக சமூகத்தில் எடுத்தியம்புவதோடு சமூக மாற்றத்திற்கான சிந்தனையை உருவாக்க வேண்டிய மிகப் பெரிய கடப்பாடு இன்றைய கல்விச் சமூகத்திற்கு உள்ளது என்பதும் விடுக்க வேண்டிய இவ் எழுத்தின் நோக்கமாக உள்ளது. இதுவே இன்று அரங்க உலகிற்கும் தேவையானதாக உள்ளது.


## களுதாவளை பிள்ளையார் தீர்த்தம்



மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத்திருவிழாவின் தீர்த்தோற்சவம் வியாழக்கிழமை நடந்தபோது பிடிக்கப்பட்ட படம்.



# கட்டிளமைப் பருவ உளநலம்



## கட்டிளமைப்பருவ நாளாந்த செயற்பாடுகள்

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

ஒரு நாளின் இருபத்துநான்கு மணி நேரங்களை சரியாகப் பயன்படுத்துவதில் வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது. இந்த நேரத்தைச் சரியாக முகாமைத்துவம் செய்து வெற்றி பெற்றவர்களின் அனுபவத்தை உற்று நோக்கினால் அதில் அவர்களின் தூக்கம், கல்விச் செயற்பாடு, தனிநபர் செயற்பாடு, குடும்பச் செயற்பாடு, விளையாட்டு, பயனுடைய பொழுதுபோக்கு, தொலைக்காட்சி பார்த்தல், குடும்பம் / நண்பர்களுடன் அளவளாவுதல், ஆன்மீகச் செயற்பாடுகள் என ஒரு நாளை மிக பயனுடையதாக பயன்படுத்தியிருப்பர். மறுதலையாக நேர முகாமைத்துவம், பிழைத்தவர்களின் எதிர்காலம் ஒரு கேள்விக் குறியாக, இது வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளியான சமிக்கைகளும் உண்டு.



ஒருங்கிணைந்த நாளாந்த செயற்பாடுகள் :

---

இங்கு ஆக்கபூர்வமான சிந்தனையுடன் பெற்றோர், ஆசிரியரின் வழிகாட்டலில் ஒரு கட்டிளமைப்பருவ மாணவன் / மாணவி தனக்கென ஒரு ஒழுங்கான நாளாந்த செயற்பாடுகளை வரைந்து செயற்படுத்தினால் அது அவர்களை ஒரு முழு மனிதனாக்குவதோடு, திட்டமிட்ட தனது இலக்கினை விரைவாகக் கடந்து வாழ்க்கை வெற்றிகரமாக அமைவதற்கு உதவியாக அமையும். வெற்றி பெற்ற பல மாணவர்களுடன் நாங்கள் அளவளாவியதற்கு அமைய கண்டறிந்த மிகப் பயனுடைய மனித செயற்பாடு ஒழுங்கமைக்கப்பட்ட நாளாந்தச் செயற்பாடுகள் ஆகும். இந்த நாளாந்த செயற்பாடுகளில் மிக முக்கியமான உயிரியல் தேவையான நித்திரையில் இருந்து இது ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் தனிநபர் செயற்பாடுகள், கற்றல் செயற்பாடுகள், குடும்பச் செயற்பாடுகள், ஆன்மீக செயற்பாடுகள் சமூக செயற்பாடுகள், உடற்திறன் செயற்பாடுகள், பயனுடைய பொழுதுபோக்கு, தொடர்பாடல் செயற்பாடுகள் எனப் பல செயற்பாடுகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்ததாக அமைய வேண்டும்.

தனிநபர் செயற்பாடுகள்

---

தற்சுத்தம், உணவு அருந்துதல், உடை கழுவுதல், உலர்த்துதல், சுயமாக பாடசாலை மற்றும் பிரத்தியேக வகுப்பிற்கு சென்று வருதல், தமக்கு தேவையானதை தாமாக வாங்குதல், தனது படுக்கையை தானாக பராமரித்தல், கழிவறை சுத்தம் என்பவற்றில் கட்டிளமைப்பருவத்தினர் சுயமாக ஈடுபடுவதற்கு பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் உதவ வேண்டும். பெரும்பாலான நகர்புற பிரதேசங்களில், கட்டிளமைப்பருவத்தினர் பெற்றோரில் அல்லது வேறு ஒரு நபரில் தங்கி இருப்பது அவதானிக்கப்படுகின்றது. தற்துணிவு, சுயமாக முடிவெடுத்தல், தன்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை போன்ற பல்வேறு விடயங்கள் தனி நபராகச் செய்யும்போது ஏற்படுகின்றது. பாடசாலை, கல்லூரி படிப்பிற்கு பின் பெரும்பாலும் கட்டிளமைப் பருவத்தினர் பெற்றோரில் இருந்து சற்று விலகி மாணவர் விடுதிகள், தனி அறைகளில் இருக்கும் போது அவர்கள் கற்றுக்கொண்ட தனிநபர் செயற்பாடுகள் அவர்களுக்கு மிகப்பயனுடையவையாக அமையும்.

இவற்றை செய்ய முடியாதவர்கள் பல்கலைக்கழகம், உயர்கல்விக்காக பெற்றோரைவிட்டு பிரியும்போது ஆரம்பத்தில் மிகவும் கஸ்டப்படுவர், அல்லது தமது கல்வி செயற்பாடுகளை நிறுத்தக்கூட விளைவார்கள்.

குடும்பச் செயற்பாடுகள்

---

நாளாந்த வீட்டுச்சுத்தம். சமையலறைச் செயற்பாடுகள், வெளிப்புறச்சுத்தம், பூந்தோட்ட / வீட்டுத்தோட்ட பராமரிப்பு, சந்தை / கடைகளில் பொருட்கள் வாங்குவது, உறவினர் வீடுகளிற்கு தேவைகளிற்கு சென்று வருவது, ஆடைகள் வாங்குவது, ஆலய வழிபாடுகள் போன்ற செயற்பாடுகளில் கட்டிளமைப்பருவ வயதினரை பெற்றோர் சுயமாக ஈடுபடுத்த வேண்டும். சமநிலையான வாழ்க்கைக்கு குடும்ப செயற்பாடுகள் மிகப் பிரதானமானவை. நேரத்தை சரியான முறையில் நல்ல விடயங்களில் செலவழிப்பதன் மூலம் அனாவசியமாக தொலைக்காட்சி, இலத்திரனியல் பொருட்களுடனான அதிக ஈடுபாட்டை குறைப்பதற்கும் இவை உதவும். அத்துடன் இச்செயற்பாடுகள் எந்த வகையிலும் அவர்களின் கல்வி / பரீட்சைகள் உள்ளடங்களான கற்றல் செயற்பாடுகளை பாதிக்கப்போவதில்லை.

சமூக / ஆன்மீக செற்பாடுகள்

---

ஒரு நாளில் சில மணிநேரங்களையாவது அவர்கள் சமூக / ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது மிகப்பயனுடையது. குறைந்தது வீதியை கடக்க நினைக்கின்ற பார்வை இழந்தவரை மறுமுனைக்கு கொண்டுசெல்ல உதவுவது கூட அவர்களின் மன மகிழ்ச்சிக்கும், மற்றவர்களின் தேவைகளை இனங்காண்பதற்கும். தான் அவ்வாறான குறைபாடு இல்லாமல் இருப்பதற்கு இறைவனுக்கு நன்றி கூறுவதற்கும் உதவும். தற்கால கட்டிளமைப்பருவத்தினரில் சமூக செயற்பாடுகள் மிக குறைவாக அமைவதை காணக்கூடியதாகவுள்ளது. மறுதலையாக “ரவுடி“ச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை காணலாம். யுத்தகால கட்டிளமைப்பருவத்தினர், ஒருசாரார் நேரடியாக யுத்த செயற்பாடுகுளில் ஈடுபட இன்னொரு பகுதியினர் குருதிக்கொடை, காயப்பட்டவர்களை பராமரித்தல், இடம்பெயர்ந்து வருபவர்களிற்கு உதவுதல், அகதி முகாம்களில் பல்வேறு பணிகளில் உதவுதல், முதலுதவி செயற்பாடுகள், சிரமதானங்கள், நிதி சேகரிப்பு போன்ற பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள்.

பயனுடைய பொழுதுபோக்கு / விளையாட்டுச் செயற்பாடுகள்

---

பரத நாட்டியம் பழகுதல், அரங்கேற்றம், மேற்கத்தைய, கீழைத்தேய இசைக்கருவிகளை கற்றல், பன்நாட்டு மொழிகளை கற்றல், பத்திரிகைகள் / சஞ்சிகைகளிற்கு கவிதை கட்டுரை எழுதுதல், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தல், பாடசாலை அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுதல் என தமது சுய ஆளுமைசார் விருத்திகளை மேற்கொள்வதோடு தடகள விளையாட்டுக்கள், உதைப்பந்து, கிரிக்கெட், எறிபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, வலைப்பந்து, கிளித்தட்டு உட்பட பாரம்பரிய விளையாட்டுக்கள் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவது உடல், உள ஆற்றலை மேம்படுத்த உதவும். நீச்சல், டெனிஸ், உள்ளக விளையாட்டுக்களின் ஆர்வமுடன் பங்குபற்றும் கட்டிளம்பருவத்தினர் மிகக்குறைவு.



முன்னர் பெற்றோர் ஆசிரியர் இவற்றிற்கு உதவினார்கள். தற்கால பெற்றோர்களின் பரீட்சைகளை மட்டும் மையப்படுத்திய செயற்பாடுகளால் இவற்றை புறம்தள்ளுகிறனர். குறிப்பாக ஆண்டு – 04 வரை பரதம், இசை என்பவற்றை கற்று வருகின்ற மாணவர்கள், புலமைப்பரிசில் பரீட்சையென்றதும் அவற்றிற்கு இடைவெளி கொடுக்கின்றனர். பரீட்சை / பெறுபேறு என்பவற்றின் பின் பெற்றோரும், மாணவரும் களைப்படைய அச்செயற்பாடுகள் அவ்வாறு கைவிடப்படுகின்றன. மீண்டும் தொடர்வது குறைவு. பொருத்தமான பொழுதுபோக்குகள், குழுச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற மாணவர்களின் புத்திக்கூர்மை, மீதிறன், உற்சாகம், தலைமைத்துவ மனப்பாங்கு, வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளுதல், விட்டுக்கொடுத்தல் போன்ற பல்வேறு, நேர்முக விழுமியங்கள் காணப்படுவதுடன் இவர்களில் போதைபொருள் பாவனை வேண்டத்தகாத சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுதல், தற்கொலை முயற்சி, இளவயது திருமணம் போன்ற பல்வேறு எதிர்முக செயற்பாடுகள் குறைவாக இருப்பதை எமது சேவை நாடி வருபவர்களிடம் காணக்கூடியதாக உள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல:–05 இன் விடைகள்

அரங்கம் இரா. தவராஜா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | ங் | 2 கா | டி | ■ | 3 சா | மி |
| நி | ■ | ண் | ■ | 4 க | லி | 5 மா |
| யா | ■ | ம | ■ | ட | 6 வா | ■ |
| மை | 7 து | 8 ப | ■ | 9 மை | க | டு |
| ■ | 10 தி | ன் | னி | ■ | ன | ■ |
| 11 கா | க் | ■ | ன் | ன | ன் | 12 க |
| 13 டு | கை | க் | 14 உ | ■ | ■ | டி |

சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் மூவர்:-

01. திருமதி. ஜெ.செல்வசாச்சியார் (திருகோணமலை)
02. அ.ஆன்மரி (இருதயபுரம்)
03. க.ஜெபரெட்னம் (திருகோணமலை)

-- இவர்களுக்குரிய பரிசுப் பணம் அனுப்பி வைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.



# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 07

தொடர்ச்சி...

பாதைகள், வீடமைப்புத்திட்டங்கள் உட்பட பல அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பெற்றன. அக்கரைப்பற்றுத் தொகுதியிலே பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக விளங்கிய கஞ்சிகுடிச்சாற்றுக் குளம் மேலும் உயர்த்தப்பெற்று மேலதிக நீர்ப்பாசன வசதி அளிக்கப்பெற்றது. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பல நிறைவேற்றப் பெற்றன. பல இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பெற்றன.

1977ம் ஆண்டின் நாடளாவிய இனக்கலவரத்தின் போது தென்னிலங்கையில் இருந்து அடித்துவிரட்டப்பட்டு அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தனாமன்வெல உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் அமைந்த தஞ்சை நகர் எனும் கிராமத்திலிருந்து அகதிகளாக வந்த தமிழ் மக்களைப் பொத்துவில் தொகுதியிலே சங்கமன்கண்டி, உமிரி ஆகிய இடங்களில் குடியமர்த்தினார். இக்குடியேற்றச் செயற்பாடுகளில் இக் கட்டுரை ஆசிரியர் பாரிய பங்களிப்புச் செய்தார்.

அம்பாறை மாவட்டத் தமிழர்கள் எதிர்காலத்தில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக வளர்ச்சியுறுவதற்கு அவர்களுக்கென்று தனியான தமிழ்ப் பெரும்பான்மை நிர்வாக அலகுகளும், உள்ளூராட்சி சபைகளும் அவசியம் என்பதை உணர்ந்து முதல்வேலையாக 05.01.1980 இல் திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவை ஏற்படுத்தினார்.

அவருடைய பதவிக்காலம் அம்பாறைமாவட்டத் தமிழர்களுக்குக் குறிப்பாகப் பொத்துவில் வாழ் தமிழ் மக்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டியது. தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட அவருக்கு வேட்பாளர் நியமனம் பெற முக்கிய பங்கேற்று அவரை அரசியலுக்கு இழுத்து வந்ததோடு தேர்தல் காலத்தில் முழுநேரமும் அவருடனிருந்து அவரது வெற்றிக்கும் முழுமூச்சாக உழைத்தவன் என்ற ரீதியிலும் அவர் பின்பு கட்சி மாறியதால் சில காலம் அவருடன் கொள்கைரீதியாக முரண்பட்டு நின்றும்கூட பின்பு அவரது நோக்கங்களைப் புரிந்துகொண்டு, அவர் ஆற்றிய பணிகளுக்குப் பக்கபலமாக நின்று அவரோடு நெருங்கி உழைத்தவன் என்ற ரீதியிலுமே மேற்சொன்ன அவரைப்பற்றிய மதிப்பீடுகள் இக்கட்டுரையாசிரியரால் காய்தல் உவத்தலின்றி எடுத்துக்கூறப் பெற்றுள்ளன.

அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்படாத கனகரட்ணம் போன்ற மக்கள் செயற்பாட்டாளர்களே இன்று தமிழ் அரசியலுக்குத் தேவை.

கனகரட்ணம் அவர்கள் 20.04.1980 அன்று மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் காலமானார். அவரது மரணத்தைத் தொடர்ந்து அவரது தங்கை திருமதி. ரங்கநாயகி பத்மநாதன் அவர்களை அன்று அமுலிலிருந்த தேர்தல் சட்டவிதிகளின்படி கனகரட்ணம் அவர்களின் மரணத்தினால் காலியான பொத்துவில் தொகுதியின் இரண்டாவது ஆசனத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆனையாளரிடம் சிபாரிசு செய்தது. அதன்படி திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் அவர்கள் 1981 இலிருந்து பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார். அமரர் கனகரட்ணம் அவர்கள் தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளராக நின்று தெரிவு செய்யப்பெற்றிருந்த போதும் அவர் மரணிக்கும் போது ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொண்ட உறுப்பினராகத் திகழ்ந்த காரணத்தினாலேதான் ஐ.தே. கட்சியின் சிபாரிசினை ஏற்றுத் தேர்தல் ஆணையாளர் திருமதி.ரங்கநாயகி பத்மநாதன் அவர்களைப் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தார்.

(தொடரும்...)

# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## செல்லையா இராஜதுரை வாழ்வும் பணிகளும்

தொடர்ச்சி...

மன்றமாகியதன்பின்னர், 1978 இல் இம்மன்றத்தின் பொதுச்செயலாளராக இருந்தேன். மன்றத்தை நவீன முறையில் திருத்தியமைப்பதற்காக ஒரு ஆலோசனைக்கூட்டமும் உறுப்பினர் ஒன்றுகூடல் இராப்போசன விருந்தும் நடத்துவதற்கு தீர்மானித்தோம். அதற்கு பிரதம விருந்தினர்களாக அமைச்சர்கள் தொண்டமானையும் இராஜதுரையையும் அழைப்பதற்காக அவர்களின் அமைச்சு அலுவலகங்களுக்கு மன்றத்தின் பிரதிநிதிகளையும் அழைத்துக்கொண்டு சென்ற காலத்தில் நான் வீரகேசரியில் பணியாற்றினேன். அதனால் அவர்களிடம் எளிதாக சந்திக்க நேரம் பெறக்கூடியதாகவுமிருந்தது. இருவரும் எளிமையாகப் பழகியவர்கள். எமது ஒன்றுகூடல் விழாவுக்கு வருவதற்கு முன்னர், “ தான் தற்போது மச்சம் மாமிசம் சாப்பிடுவதில்லை. எனவே இரவு விருந்தில் தனக்கு மரக்கறி உணவுதான் வேண்டும்“ என்ற ஒரு நிபந்தனையை மாத்திரமே அமைச்சர் இராஜதுரை அன்று விதித்தார்.

“ அய்யா, எங்கள் மன்றம் தமிழர் இந்துக்களுக்கானது. எனவே அங்கு மச்சம் மாமிசம் இருக்காது “ என்றேன். இரண்டு அமைச்சர்களுக்கும் எங்கள் ஊரில் கோலாகலமான வரவேற்பு வழங்கினோம்.

அவர் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் அவரது அமைச்சின் கீழ்தான் சாகித்திய மண்டலம் இயங்கியது. சாகித்திய விழாக்கள், விருதுவழங்கும் நிகழ்ச்சிகள் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளினால் தாமதமானது. இதுபற்றி வீரகேசரியில் இடித்துரைக்கும் சில பத்தி எழுத்துக்களை எழுதியிருக்கின்றேன்.

பின்னர் தனது அமைச்சு அலுவலகத்திலேயே குறிப்பிட்ட ஆண்டுகளுக்குரிய நூல்களுக்கான விருதும் பணப்பரிசிலும் வழங்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டேன்.

எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வெள்ளிவிழா கொள்ளுப்பிட்டி கூட்டுறவுசங்கங்களின் சம்மேளனத்தின் தலைமைக்காரியாலய மண்டபத்தில் நடந்தபோது அமைச்சரையே பிரதம விருந்தினராக அழைத்திருந்தோம்.

அமைச்சர் இராஜதுரை உலக இந்து மாநாடு நடத்தினார். சமாதானத்திற்காக அஸ்வமேத யாகம் நடத்தினார். மாநாட்டிற்கு இலங்கை - இந்திய இந்துமதத் தலைவர்கள் பிரமுகர்கள் வந்தனர். தமிழக ஆஸ்தான நடன நர்த்தகி சுவர்ணமுகியை அழைத்தார். அவரது அனைத்துப் பணிகளையும் கொழும்பிலிருந்தே இயக்கினார்.

பாதுகாப்புக் காரணங்களினால் அவரால் தனது தொகுதிக்கும் செல்லமுடியாத சூழ்நிலை நீடித்தது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆயுதம் ஏந்திய இயக்கங்களுக்கும் ஆயுதப்படையினருக்கும் அடிக்கடி மோதல் நடந்தது. அப்பாவி மக்கள்தான் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மட்டக்களப்பு நிருபர்கள் நித்தியானந்தனும் கதிர்காமத்தம்பியும் தினமும் செய்திகளை தந்துகொண்டிருந்தனர். இவர்களுடனும் வவுணதீவு - அக்கரைப்பற்று நிருபர்களுடனும் தினமும் தொலைபேசித் தொடர்பிலிருந்தேன்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அந்தோனிமுத்துவும் தினமும் எமக்கு செய்தி தருவார். ஆனால், அமைச்சர் இராஜதுரைக்கு மட்டக்களப்பு செல்ல முடியாத சூழ்நிலை. ஒருநாள் அமைச்சருடன் தொடர்புகொண்டு, அந்தோனி முத்துவினதும் நிருபர்களினதும் செய்திகளை சொல்ல நேர்ந்தது.

அங்கிருக்கும் நிருபர்கள், அரச அதிகாரிகள் தன்னுடன் தொடர்புகொள்வதை தவிர்க்கிறார்கள் என்றும் மனக்குறைப்பட்டார். அமைச்சு - அதிகாரிகள் - ஆயுதம் ஏந்திய இயக்கங்கள், படைகள், ஊடகங்களுக்கு மத்தியில் தொகுதி நாடாளுமன்ற பிரதிநிதி என்ற அடிப்படையில் தன்னால் தனது மக்களுக்காக செய்யமுடிந்ததைதான் அவர் செய்தார்.

விடாக்கண்டர்களுக்கும் கொடாக் கண்டர்களுக்கும் இடையில் அவரது நிலை தர்மசங்கடமாகியிருந்ததையும் அவதானித்திருக்கின்றேன். 1984 இல் தமிழகம் எட்டயபுரத்திற்கு சென்றிருந்தேன். அங்கிருந்த பாரதியார் மணிமண்டபத்தின் நூலகத்தில் பாரதி தொடர்பாக ஈழத்தவர்கள் எழுதிய நூல்கள் இருக்கவில்லை. சிங்களத்தீவினுக்கோர் பாலம் அமைப்போம் எனப்பாடிய அந்த மகாகவியின் கவிதைகளை இலங்கையில் கே.ஜி. அமரதாச, ரத்ன நாணயக்கார ஆகியோர் மொழிபெயர்த்து “ பாரதி பத்ய “ என்ற நூலும் வெளிவந்து, பாரதியின் வாழ்க்கை சரிதம் சிங்களத்தில் சுருக்கமாக வெளியாகியிருக்கும் செய்தியையும் அமைச்சரிடம் எடுத்துக்கூறி, இதுபற்றி தமிழக முதல்வருடன் பேசி நடவடிக்கை எடுக்குமாறும் சொன்னேன்.

அவர் செய்வதாக உறுதியளித்தார். ஈழத்து தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை தமிழ்ப்பாடசாலைகளின் நூலகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்றும் உறுதியளித்தார். இராஜதுரை பிரதேச அபிவிருத்தி இந்து கலாச்சார அமைச்சராக இருந்த காலத்திலேயே மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா இசை நடனக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. தற்போது, கிழக்கு பல்கலைக்கழகத்தின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது.

கிழக்கு பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. இதுவரையில் ராசாத்தி ( குறும்புதினம்), பெற்றதாயும் பிறந்த பொன்னாடும், அன்பும் அகிம்சையும், மிஸ் கனகம், இலங்கையில் அஸ்வமேதயாகம் முதலான நூல்களையும் எழுதியிருக்கும் இந்த முன்னாள் பத்திரிகையாளர், எழுத்தாளர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், வெளிநாட்டுத்தூதுவர், சொல்லின் செல்வர் என்ற சிறப்பு பட்டத்திற்குரியவர். இன்று ஆன்மீகவாதியாகியிருக்கிறார். வாழ்வனுபவங்களின் சுரங்கமான இன்றைய இந்த ஆன்மீகவாதிக்கு 91 வயது நெருங்குகிறது.

அவர் தனது வாழ்க்கை சரிதத்தை எழுதுவாரானால், அவர் பற்றிய மேலும் பல அரிய சுவாரஸ்யமான தகவல்களையும் நாம் அறிந்துகொள்ளமுடியும்.

இதுவிடயத்தில் அவருக்கு யார் மணி கட்டுவது..?

(தொடரும்)

தொடர்ச்சி...

# மட்டக்களப்பு எட்டுப்பகுதியின் தேசத்துக்கோவில்!

மறைந்துவிட்ட தமிழ்க்கிராமம் அது.

தற்போது மேற்படி முப்பது வட்டாரங்களில் பல விலகி, சில புதிதாக இணைந்துள்ளன. பொத்துவில், கோமாரி, தாண்டியடி, விநாயகபுரம், திருக்கோவில், தம்பிலுவில், தம்பட்டை, கோளாவில், பனங்காடு, நாவற்காடு, கண்ணகிபுரம், அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, பெரிய நீலாவணை ஆகிய பதினெட்டு வட்டாரங்களே இன்று திருக்கோவிலில் பூசையுரிமை கொண்டுள்ளன. பழைய வட்டாரங்களைச் சேர்ந்த பொதுமக்கள் முன்பு போல் பூசைகளில் பங்கேற்பதில்லை என்றாலும், இன்றும் வந்து வழிபடுகின்றனர். ஆடி அமாவாசையையொட்டி பதினெட்டு நாள் திருவிழா இடம்பெறுகின்றது. திருவிழாவிலும் பெரும்பாலான நாட்கள் தனியார் குடும்பங்களின் உபயமாகவே இடம்பெறுகின்றது. அது காலத்தின் கோலம். அதில் தவறொன்றும் கூறமுடியாது.

காலம் நிறையவே மாறிவிட்டது. திருக்கோவில், தொடர்ந்தும் தேசத்துக்கோவிலாகக் கட்டிக்காக்கப்படும் போதே அதன் வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பேணமுடியும். மெல்ல மெல்ல ஒரு சிலர் கைகளுக்குக் கோவில் செல்லும்படி அனுமதித்துவிட்டு, அதற்குப் பின்பும் அது தேசத்துக்கோவிலாக நீடிக்கும் என்று எதிர்பார்க்கக்கூடாது. அப்படி நடக்கக்கூடாதது நடந்த பின்னர், கோவிலின் புகழ் மழுங்கடிக்கப்படுகிறதே, அதைச் சீண்டுவார் யாருமில்லையே என்று வருந்துவதில் பலனில்லை. திருக்கோவில் வேலவன் பிரமாண்டமாகக் குடமுழுக்குக் காணும் இந்நாளில் அவன் தொல்புகழும் சரித்திரப்பிரசித்தியும் தொடர்ச்சியாகக் காப்பாற்றப்படவேண்டும். நிர்வாகமும், ஊர்ப்பொதுமக்களும், கூடவே பண்டைய மட்டக்களப்பு எட்டுப்பகுதி மக்களும் கைகோர்த்து, அந்த வரலாற்றுக்கடமையை நிறைவேற்றவேண்டும் என்பதே இக்கட்டுரையாளனின் வேணவா. திருக்கோவில் வடிவேற்படையுடையான் அதற்கு மனம் வைப்பானாக.

“எல்லாஞ் செரி தான்கா, திங்கக்கிழமை கும்பாவிசேகத்துக்கு வாறேல் தானே? காலமை ஒம்பதரைல இருந்து பத்தரை வரை முழுத்தம். டக்கெண்டு வெளிக்கிட்டு வாங்கோ, என? திருக்கோயில் சித்திரவேலாயுதப்பெருமானுக்கு அரோகரா!”

(முற்றும்)





-- அனைத்து வயதினருக்குமான படிப்படியான நேரடிப் பயிற்சி நெறி
-- ஆர்வம் உள்ளவர்களுக்கு மாத்திரம்

புலயவெளி பேச்சியம்மன் ஆலய
கணனி கற்கை நிலையம்

தகவல் தொழில் நுட்பத்துறையில்
காலடி எடுத்து வைப்பவர்களுக்கான
கணனி பயிற்சி



COURSES

INFORMATION AND COMMUNICATION TECHNOLOGY

தொடர்புகளுக்கு : 0771516203

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில்
மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)



HOTEL
NIRUTHA

Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444 Fax:+94652054092
UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelnirutha.com

அரங்கம் செய்திகளுக்கான ஆதரவில் 'கைகோர்ப்போம்' - ஹொட்டல் நிருத்தா

Hotline:
+94 717 412 292

S.N. MEGAM AGENCY
SINCE 1960

உங்கள் ஏற்றுமதி
மற்றும் இறக்குமதி
விடயங்களை /
சுங்கப் பணிகளை
திறம்படச் செய்து
முடிக்க நாடுங்கள்..

சுகந்தி 3D கல்லடி மட்டக்களப்பு
மற்றும் சாந்தி




MEGAM AGENCY
Tel/Fax 2445383
Hotline (+94 77 773 2226)
#61, A.G HINNI APPUHAMY MW, COLOMBO -13